# உட்பொதிந்தவை


1. எண்ணத்தின் சிறப்பு 9

2. எண்ணத்தின் பொருள் 18

3. செயலைவிடச் சிறந்தது 25

4. எண்ணம் கலந்த செயல் 34

5. சக்திக்கு அப்பாற்பட்டது 52

6. ஒருமித்த மனநிலை 66

7. மன ஒருமை என்றால் என்ன? 81

8. சில சான்றுகள் 93

9. தீமையின் படித்தரங்கள் 99

10. செயலும் நற்கூலியும் 108

11. உண்மையான நடவடிக்கைகள் 119

12. உண்மையின் படித்தரங்கள் 125


# நல்லெண்ணம்

நன்றியுள்ளவர்கள் புகழ்ந்ததுபோல இறைவனை நாங்கள் புகழ்கிறோம். உறுதியுள்ளவர்கள் நம்பியதுபோல அவனை நாங்கள் நம்புகிறோம். உண்மையுள்ளவர்கள் கூறியதுபோல அவனது ஏகத்துவம் குறித்து நாங்கள் உறுதிமொழி கூறுகிறோம். அவன் ஒருவனைத் தவிர்த்து வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை என்று சான்று பகர்கிறோம். அவன் சர்வலோக இரட்சகன்; விண்ணையும் மண்ணையும் படைத்தவன்; மானிடர், 'ஜின்' வர்க்கத்தவர், நெருங்கிய வானவர்கள் ஆகியோருக்குத் தன்னை ஒருமித்த மனத்தோடு வணங்குமாறு கட்டளை பிறப்பித்தவன் ''ஒருமித்த மனத்தோடு வணங்குமாறுதான் அவர்கள் பணிக்கப்பட்டார்கள்'' என்று இறைவனே கூறுகிறான். அண்ணலவர்களுக்கும் அவர்களைச் சேர்ந்தவர்களுக்கும் இறைவனின் பேரன்பு உரித்தாகட்டும்.

அறிவு, வணக்கம் ஆகிய இரண்டின் உதவியால்தான் இறைவனின் பாதையில் வெற்றியடைய முடியும். திருமறையின் ஒளியில் ஆராய்ந்தவர்கள் இந்த உண்மையை அறிந்திருக்கிறார்கள். மக்கள் அனைவரும் தவறிவிட்டார்கள்—அறிஞர்களைத் தவிர. அறிஞர்களிலும், செயல் வீரர்களைத் தவிர மற்றவர்கள் பாழாகிவிட்டார்கள். செயல் வீரர்களின் நிலைமையும் மோசம்தான். ஒருமித்த மனத்தோடு செயலாற்றியவர்களைத் தவிர்த்து மற்றவர்கள் படுகுழியில் விழுந்துவிட்டார்கள். ஒருமித்த மனத்தோடு செயலாற்ற முற்படுபவர்கள் மகத்தான அபாயத்தை

எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. நல்லெண்ணம் கொள்ளாமல் செயலில் இறங்குவது வீண் காரியம். மனத்தூய்மை இல்லாமல் நல்லெண்ணம் கொள்ளும்போது முகஸ்துதி உருவாகிறது. இப்படி நற்காரியம் செய்வது, தீய காரியம் செய்வதுபோலாகும். உறுதி கொள்ளாமல் ஒருமித்த மனநிலையை — மனத் தூய்மையை உண்டாக்க முற்படுவது புழுதிக்குச் சமமான காரியம். 'அவர்களின் செயல்களை நாம் பார்வையிட்டோம்; பறக்கும் புழுதியைப் போல் அவற்றை ஆக்கிவிட்டோம்' என்று கூறுகிறான் இறைவன். எண்ணம் என்றால் என்ன என்பதை அறியாதவர்கள் நல்லெண்ணம் கொள்வது எப்படி? மன ஒருமையை அறியாதவர்கள் ஒருமித்த மனத்தோடு செயலாற்றுவது சாத்தியமா?

எனவே, இறை வழி நடக்க முற்படும் மானிடன் முதன்முதலில் எண்ணத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும். இந் நூலில் மூன்று பாடங்களை எழுதியிருக்கிறேன். நல்லெண்ணம்– நன்னோக்கம், அதன் உண்மையான பொருள் ஆகியவை முதற் பாடத்தில் இடம் பெறுகின்றன. மன ஒருமையுடன் கூடிய வழிபாடு, அதன் அந்தரங்கம் முதலியவற்றிற்கு இரண்டாம் பாடம் ஓதுக்கப்பட்டிருக்கிறது. உண்மையான நடவடிக்கையும் அதன் விரிவுரையும் மூன்றாம் பாடத்தில் விவரிக்கப்படும்.

# 1. எண்ணத்தின் சிறப்பு

''இறைவனையே நாடிக் காலையும் மாலையும் வழிபடுபவர்களைவிட்டு நீர் அகன்றுவிடாதீர்!'' என்று இறைவன் கூறுகிறான். 'இறைவனையே நாடி' என்ற வாக்கியத்தில் நல்லெண்ணம், நன்னோக்கம் சுட்டிக் காட்டப்படுகின்றன.

திரு நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொறுத்தவை. ஒவ்வொரு மனிதனும் தான் எண்ணியதை அடைவான்; இறைவனையும் அவனது திருத்தூதரையும் எண்ணிக் குடி பெயர்ந்தவர்கள்; இறைவனுக் காகவும் திருத்தூதருக்காகவும் செயலாற்றியவர்கள்; உலக இன்பத்தையோ பெண்ணையோ எண்ணி மக்காவைவிட்டு மதீனாவிற்குக் குடி பெயர்ந்தவர்கள் தாங்கள் எண்ணியதை அடைவார்கள். ஆக, ஒவ்வொரு மனிதனுக்கும் அவன் எண்ணியது தான் கிடைக்கும்.''

பிறிதோரிடத்தில், ''என் சமூகத்தவருள் பெரும்பாலான தியாகிகள் நேர்மையான எண்ணத்தோடு அமைதியுற்றிருந்தவர்களே. போர்முனையில் இரு படையினருக்கிடையில் எத்தனையோ பேர்கள் கொல்லப்படுகிறார்கள். ஆனால்,

அவர்களின் எண்ணங்களை நன்கு அறிந்தவன் இறைவன் ஒருவனே.''

இறைவன் கூறுகிறான், ''நீங்கள் ஒற்றுமையை எண்ணி விரும்பினால் இறைவன் அதற்கு வழிவகுப்பான்'' என்று. இந்த வசனத்தில் இறைவனின் வழி வகுப்புக்கு நல்லெண்ணமே காரணமாகக் காட்டப்படுகிறது.

திரு நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''உங்கள் உருவத்தையோ செல்வத்தையோ இறைவன் பார்ப்பதில்லை. உங்கள் செயலையும் உள்ளத்தையும்தாம் பார்க்கிறான். ஏனெனில், உள்ளம்தான் எண்ணத்தின் பிறப்பிடம். உள்ளத்திலிருந்துதான் எண்ணம் உருவாகிறது.''

மற்றோரிடத்தில்: ஒரு மனிதன் நற்காரியங்கள் பலவற்றைச் செய்கிறான். அவனது பட்டோலையை வானவர்கள் பத்திரமாக எடுத்துச் சென்று இறையின் சபையில் சேர்ப்பார்கள்.

''அதைத்தூக்கி எறியுங்கள்!'' என்று இறைவன் கூறுவான். ''இதில் பல நன்மைகள் இடம் பெற்றிருந்தாலும் அவற்றை அவன் நல்லெண்ணத்துடன் செய்யவில்லை. என்னை எண்ணி எனக்காகவே அவன் அவற்றைச் செய்யவில்லை.''

பின்னர் வானவர்கள் கட்டளையிடப்படுவார்கள். சில காரியங்களை இறைவன் குறிப்பிட்டு, ''இவற்றை எல்லாம் அவன் செய்ததாக எழுதுங்கள்'' என்பான்.

''நாயனே! இவற்றை அவன் செய்யவில்லையே'' என்று வானவர்கள் கேட்பார்கள்.

இறைவனின் தீர்ப்பு வெளியாகும். ''உண்மைதான். ஆனால், இவற்றை மனத்தில் வைத்துக்கொண்டுதான் அவன் நற்காரியங்கள் செய்தான்.''

திருநபியவர்கள் கூறினார்கள்: ''ஒரு மனிதனுக்குச் செல்வத்தையும் அறிவையும் அளிக்கிறான் இறைவன். அவற்றின்



உதவியால் அவன் நற்காரியங்கள் பல செய்கிறான். அந்த நல்ல மனிதனை மற்றொருவன் எண்ணிப் பார்க்கிறான். 'இறைவன் அவனுக்கு அமைத்துக் கொடுத்திருப்பதுபோல எனக்கும் நல்ல சூழ்நிலையை அமைத்துக் கொடுத்தால் நானும் அவனைப்போல நற்காரியங்கள் பல புரிவேன்' என்று எண்ணுகிறான்—இவ்விருவரும் ஒரேவித நன்மையை அடைவார்கள். நன்மையைச் செய்ததனால் ஒருவன் நன்மையடைகிறான். நன்மை செய்ய வேண்டும் என்று எண்ணியதால் மற்றவன் நன்மையடைகிறான்.

மற்றொரு மனிதனுக்கு இறைவன் செல்வத்தை மட்டும் கொடுக்கிறான். அறிவுச் செல்வம் அவனுக்கு அளிக்கப் படவில்லை. அறியாமையின் காரணமாக அவன் தன் செல்வத்தைத் தவறான வழிகளில் பிரயோகிக்கிறான். அவனை மற்றொரு மானிடன் எண்ணிப் பார்க்கிறான். 'அவனுக்கு இருப்பதுபோன்ற சூழ்நிலை எனக்கும் இருந்தால் நானும் அவனைப்போல் செயலாற்றுவேன்' என்று எண்ணுகிறான்—இவ்விருவரும் ஒரே விதத் தண்டனையை அனுபவிக்க வேண்டியவர்கள்.

உற்றுப் பார்! மனிதனின் எண்ணம்தான் அவனை நல்லவனாகவும் கெட்டவனாகவும் மாற்றுகிறது. நல்லெண்ணம் கொண்டவன் நன்மையடைகிறான். தீய எண்ணம் பூண்டவன் தண்டனையடைகிறான்.

தபூக் யுத்தத்தின்போது அண்ணலவர்கள், ''நாம் துன்பம் நிறைந்த பல பாதைகளைக் கடந்திருக்கிறோம். எதிரிகளோடு போர் புரிந்திருக்கிறோம். இறை வழியில் தருமம் செய்திருக்கிறோம். இன்னும் பல அடைந்திருக்கிறோம். இவை அனைத்திலும் சிலர் பங்கு கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் இப்போது மதீன மாநகரில் இருக்கிறார்கள்'' எனக் கூறினார்கள்.

நண்பர்கள் வியப்படைந்தார்கள். ''மதீன மாநகரில் இருந்துகொண்டு நம்முடைய நன்மை தீமைகளில் எவ்வாறு பங்குகொள்ள முடியும்?''

பதில் கிடைத்தது. ''இந்த யுத்தத்தில் அவர்கள் பங்கெடுத்துக் கொள்ளவில்லைதான். அதற்கு அவர்களிடம் காரணமுண்டு. ஆனால், இதுபோன்ற தியாக நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணம் எப்போதும் அவர்களுக்குண்டு. நல்லெண்ணத்தின் காரணமாக அவர்கள் மானசீகமாக நம்மோடு பங்கெடுத்து வந்திருக்கிறார்கள்.''

ஒரு பொருளை எண்ணிக் குடி பெயர்ந்தவன் அந்தப் பொருளுக்காகவே குடிபெயர்ந்தவனாவான். ஒருவர் மக்காவை விட்டு மதீனாவிற்குக் குடி பெயர்ந்தார். அங்கு உம்முகைஸ் என்ற பெண்ணை மணந்துகொண்டார். அவர் நாளடைவில், 'உம்மு கைஸுக்காகக் குடி பெயர்ந்தவர்' என்று வழங்கப்பட்டார்.

ஒருவர் இறை வழியில் போர் புரிந்தார். அவர் பின்னர் 'கழுதைக்காகப் போரிட்டவர்' என்று வழங்கப்பட்டார். ஏனெனில், எதிரி ஒருவனின் கழுதையையும் மற்றச் சாமான்களையும் பறிப்பதற்காக அவர் அவனை வெட்டிவிட்டாராம். அவர் எண்ணமே அவருக்குப் பெயர் கொடுத்துவிட்டது.

''ஒட்டகம் முதலியவற்றை அடைய வேண்டும் என்ற எண்ணத்துடன் ஒருவன் போர் புரிந்தால், அவன் எண்ணியதுதான் அவனுக்குக் கிடைக்கும்'' என்று அண்ணலவர்கள் கூறினார்கள்.

தம்மோடு சேர்ந்து இறை வழியில் போர் புரியுமாறு ஒருவர் தம் நண்பரை அழைத்தார்.

நண்பர் மறுத்துவிட்டார். ''முடியாது. உம்மோடு சேர்ந்து போர் புரிவதானால் எனக்கு நீர் கூலி கொடுக்க வேண்டும்'' என்று நிபந்தனை விதித்தார். பின்னர் கூலியைப் பெற்றுப் போர் புரிந்தார்.

இந்தச் சம்பவம் திருநபியவர்களுடைய காதுக்கு எட்டியது. ''நீர் கொடுத்த கூலிதான் இம்மையிலும் மறுமையிலும் அவன் கண்ட பயன். போர் புரிந்ததற்காக அவன் இறைவனிடம் எத்தகைய நன்மையையும் எதிர்பார்க்க முடியாது.''



ஒரு மணல் மேட்டுக்கருகில் ஒருவர் நடந்து சென்றார். ''இந்த மணல் மேடு உணவுக் குவியலாக மாறினால் பசியால் வாடும் மக்களுக்கு வாரி வழங்குவேன்'' என்று தமக்குத் தாமே சொல்லிக்கொண்டார்.

அப்போதிருந்த திருத்தூதருக்கு இறைவன் செய்தி அனுப்பினான். ''அவரது நல்லெண்ணத்தை நான் ஏற்றுக் கொண்டேன். அவர் மானசீகமாகச் செய்த தருமத்தை நான் அங்கீகரித்துவிட்டேன். இதை அவரிடம் சொல்லிவிடும்! அந்த மணல்மேடு உணவுக் குவியலாக மாறி அதை அவர் தருமம் செய்தால் எந்த நன்மை கிடைக்குமோ அந்த நன்மையை அவருக்கு நான் அளித்துவிட்டேன்.''

''ஒருவன் நல்ல காரியத்தைச் செய்ய முனைந்தால் அதை அவன் செய்து முடிக்காவிட்டாலும் அதற்குரிய நன்மை அவனுக்குண்டு'' என்பது திருநபியின் கருத்து.

''இம்மையின் இன்பங்களை எண்ணிச் செயலாற்றுபவனுக்கு இறைவன் கண்கூடாக வறுமையை அளிக்கிறான். மறுமையை எண்ணிச் செயலாற்றுபவனுக்கு இறைவன் திருப்தியை அளிக்கிறான்'' என்று இப்னு உமர் கூறினார்கள்.

மீண்டும்: ''மஹர்' கொடுக்கும் எண்ணமில்லாமல் திருமணம் செய்துகொண்டவன் விபச்சாரத்தில் ஈடுபட்டவனாவான். திருப்பிக் கொடுக்கும் எண்ணமின்றிக் கடன்பட்டவன் திருடனாவான்.''

இன்னும்: ''இறைவனுக்காக வாசனைப் பொருளை உபயோகித்தவன் மறுமையில் கஸ்தூரியை மிஞ்சிய மனத்தோடு வருவான். மற்றக் கெட்ட நோக்கங்களுக்காக வாசனைப் பொருளை உபயோகித்தவன் பிணத்தின் முடை நாற்றத்தைத் தோற்கடிக்கும் துருநாற்றத்தோடு வருவான்.''

உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ''இறைவன் விதித்துள்ள கடமைகளை நிறைவேற்றுவது, அவன் தடுத்துள்ள விதி,

விலக்குகளைத் தவிர்ப்பது, அவன் தரும் நற்கூலி சம்பந்தமாக நல்லெண்ணம் கொள்வது—இவைதாம் எல்லாக் காரியங்களிலும் சிறந்தவை.''

நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் ஒரு சமயம், ''இரண்டு முஸ்லிம்களின் வாள்கள் ஒன்றோடொன்று மோதும்போது கொன்றவனும் கொல்லப்பட்டவனும் நரகவாதிகளாகிறார்கள்'' என்று சொன்னார்கள்.

நண்பர்கள் வினவினார்கள்: ''கொன்றவன் குற்றவாளி என்பதில் சந்தேகமில்லை. ஒரு முஸ்லிமைக் கொன்ற குற்றம் அவன்மீது இருக்கிறது. ஆனால், கொல்லப்பட்டவன் குற்றவாளியல்லவே. அவன் எதற்காக நரகில் பிரவேசிக்க வேண்டும்?''

''நீங்கள் நினைப்பது தவறு'' என்று திருத்தூதர் அவர்கள் பதிலளித்தார்கள். ''கொன்றவனைப்போலக் கொல்லப்பட்டவனும் குற்றவாளியே. தன் எதிரியைத் தீர்த்துக் கட்ட வேண்டும் என்ற எண்ணத்துடனேயே அவன் வாள் எடுத்திருக்கிறான். இல்லையேல், வாளேந்த வேண்டிய தேவைதான் என்ன?''

''எண்ணத்தை ஒட்டியே தியாகிகள் கொல்லப்படுகிறார்கள்'' என்று அண்ணலவர்கள் கூறியதாக உமர் (ரலி) அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

திரு நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''இரு சைன்னியங்கள் ஒன்றோடோன்று மோதும்போது வானவர்கள் இறங்கிக் குறிப்பெடுக்கிறார்கள். இன்னான் உலக இன்பத்தை அடைவதற்காகப் போரிடுகிறான், இன்னான் இனத்தைக் காக்கும் எண்ணத்துடன் போரிடுகிறான், இன்னான் தற்காப்புக்காக யுத்தம் செய்கிறான் என்று வரைவார்கள். இவர்களுள் யாரும் இறைவனுக்காகப் போர் புரியவில்லை. இறையின் கருத்தைப் பாரில் பரப்பும் எண்ணத்துடன் போர் புரிந்தவர்களே உண்மையான தியாகிகள்.''

மீண்டும், ''ஒருவன் எந்த எண்ணத்துடன் மரணமடைகிறானோ, அந்த எண்ணத்துடனேயே மறுமையில் அவன் எழுப்பப்படுவான்.''



சாலிம் பின் அப்துல்லாஹ் அவர்கள் உமர் பின் அப்துல் அஸீஸ் அவர்களுக்கு இப்படி எழுதினார்கள்: ''நீர் தெரிந்து கொள்ள வேண்டும். மனிதனின் எண்ணத்திற்குத் தக்கபடியே அவனுக்கு இறைவன் உதவியளிக்கிறான். அவன் பூரணமாக நல்லெண்ணம் கொள்ளும்போது இறைவனின் உதவி அவனுக்குப் பூரணமாகக் கிடைக்கிறது. நல்லெண்ணம் குறைந்தால் இறைவனின் உதவியும் குறைந்துபோய்விடும்.''

அறிஞர் சிலர் கூறினர்: ''நல்லெண்ணத்தின் காரணமாக எத்தனையோ சிறிய நன்மைகள் பெரிய நன்மைகளாகின்றன. நல்லெண்ணம் அல்லாததன் காரணமாக எத்தனையோ பெரிய நன்மைகள் அற்ப காரியங்களாகிவிடுகின்றன.''

தாவூத் தாயீ சொன்னார்கள்: ''ஒரு மனிதனின் இறையச்ச உணர்ச்சியே நன்மையான காரியம். அவன் உலக இன்பங்களுக்காகச் செயலாற்றுவதாகவே வைத்துக் கொண்டாலும், என்றாகிலும் ஒரு நாள் அவனது நல்லெண்ணம் அவனை நல்லவனாக்கிவிடும். இதேபோன்று நல்லெண்ணத்தின் காரணமாக மூடன் ஒருவன் அறிஞனாவதும் சாத்தியமே.''

''பெரியோர்கள் நற்காரியங்களைக் கற்றுக் கொண்டது போல அதைச் செயல்படுத்துவதற்கு வேண்டிய நல்லெண்ணத்தையும் கற்றுக் கொண்டார்கள்'' என்று சுப்யான் அவர்கள் கூறினார்கள்.

''செயலாற்றுவதற்கு முன் அதற்கு வேண்டிய நல்லெண்ணத்தை உண்டாக்கிக் கொள். நீ நன்மையை எண்ணினால் அதனைச் செய்தவனாகிறாய்'' என்று அறிஞர் சிலர் உபதேசித்தனர்.

அறிஞர்களைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்த மாணவர் ஒருவர் இப்படிச் சொல்லிக் கொண்டிருந்தாராம்: ''யாரேனும் எனக்கு நல்ல காரியத்தைக் கற்றுக் கொடுத்தால் இரவு பகல் எந்நேரமும் தொடர்ந்து இறைவனுக்காகச் செயலாற்றுவேன்.''

''உன் தேவை முடிந்துவிட்டது'' என்று அவருக்குப் பதில் கிடைத்தது. ''உன்னால் இயன்றவரை— உனக்குத் தெரிந்தவரை

நற்காரியங்களைச் செய்து வா. எப்போதாகிலும் ஒரு காரியத்தை நீ விட்டுவிட்டால் அதனைச் செய்து முடிக்க முயல். நற்காரியம் செய்ய முனைபவன் அதனைச் செய்து முடித்தவனுக்கு நிகரானவன்''

முன்னோர் சிலர் சொல்லினர்: ''எண்ணிப் பார்த்து வரம்பிட முடியாதபடி இறைவனின் அருட் கொடைகள் உங்களைச் சூழ்ந்திருக்கின்றன. அவை அவ்வளவு அதிகம். உங்களுக்குத் தெரியாமலேயே நீங்கள் பல தவறுகள் செய்கிறீர்கள், இதற்குக் கவலைப்பட வேண்டுவதில்லை. காலையிலும் மாலையிலும் இறைவனிடம் பாவ மன்னிப்புக் கோருங்கள். இந்த இரு நேரங்களுக்கும் இடைப்பட்ட குற்றங்களை இறைவன் மன்னித்தருள்வான்.''

ஈஸா (அலை) அவர்கள் சொன்னார்கள்: ''குற்றத்தின் பால் திரும்பாமல் தூக்கத்தில் இலயிக்கும் கண்களைப் பாராட்டுகிறேன். தீய எண்ணமின்றித் துயிலெழும் கண்களைப் போற்றுகிறேன்.''

''எண்ணங்களுக்குத் தகுந்தபடியே மறுமையில் மக்கள் எழுப்பப்படுவார்கள்'' என்று அபூஹுரைரா (ரலி) கூறினார்கள்.

''உங்கள் மத்தியில் இறை வழியில் போரிடுவோர் யார், பொறுமையாளர் யார் என்று நாம் பகிரங்கமாக அறியும் பொருட்டு உங்களை நாம் பரிசீலனை செய்வோம்'' என்ற இறை வசனத்தை ஓதும்போதெல்லாம் புலைல் அவர்கள் கண்ணீர் வடிப்பார்களாம்; திரும்பத் திரும்ப ஓதுவார்களாம். ''இறைவனே! நீ எங்களைப் பரிசீலனை செய்தால் நாங்கள் மான பங்கம் அடைந்துவிடுவோம். எங்கள் குற்றம் பகிரங்கமாகிவிடும்'' என்று வருத்தத்தோடு பிரார்த்திப்பார்களாம்.

''எண்ணத்தின் காரணமாகவே மானிடர்கள் சுவனத்திற்கோ நரகத்திற்கோ அருகதையுள்ளவர்களாகிறார்கள்'' என்று ஹஸன் (ரலி) கூறுகிறார்கள். ''எனக்காகச் செய்யப்படும் காரியங்கள் குறைவாயிருந்தாலும் அவற்றின் நன்மைகள் அதிகமானவையே. மற்றவர்களுக்காக—மற்றவைகளுக்காகச் செய்யப்படும் காரியங்கள் அதிகமாயிருந்தாலும் அவற்றின் நன்மை குறைந்தவையே'' என்று தௌராத் என்னும் இறை வேதத்தில் வரையப்பட்டிருக்கிறதாம்— இப்படி அபூஹுரைரா (ரலி) கூறுகிறார்கள்.



பிலால் பின் ஸஅத் கூறினார்கள்: ''நல்ல காரியங்களை வாயால் சொல்லிவிட்டால் மட்டும் போதாது. இறைவன் விட்டுவிட மாட்டான். செயல் இருக்கின்றதா என்று பார்க்கிறான். செயல் இருந்தாலும் அதில் பக்தியிருக்கிறதா என்று நோட்ட மிடுகிறான். பக்தி இருந்தாலும் அதில் நல்லெண்ணம் இருக்கிறதா என்று ஆராய்கிறான். எண்ணம் சீர்ப்பட்டால் மற்ற எல்லாம் சீர்ப்பட்டுவிடும்.''

எண்ணம்தான் பிரதானம். ஒரு மனிதனின் எண்ணம் நேர்மையடைந்துவிட்டால் அவன் செயல்கள் அவசியம் நேர்மையடைந்துவிடும். ஆகவே, செயல்களுக்கு அடிப்படை எண்ணம். எண்ணத்தின் காரணமாகவே செயல்கள் உருவாகின்றன. நல்லெண்ணத்தினால் உருவாகும் செயல்கள் நற்செயல்களாகின்றன. செயல்கள் உருவாவது இரண்டாவது காரியம். நல்லெண்ணம் கொள்வதே நன்மையான காரியமாயிற்றே!

## 2. எண்ணத்தின் பொருள்

கவனித்துக் கொள். எண்ணம், நாட்டம், நோக்கம் ஆகிய அனைத்தும் ஒரே பொருளைக் கொண்ட வார்த்தைகள். உள்ளத்தில் தோன்றும் ஒருவிதச் சூழ்நிலையை அவை குறிக்கின்றன. இத்தகைய நிலை மனத்தில் உண்டாவதற்கு அறிவும் செயலும் வேண்டும். அறிவு முக்கியமானது. அதையடுத்துச் செயல். அறிவு என்ற மரத்திற்குச் செயல்தான் கனி. அறிவை அசல் என்றால், செயலை அதன் பிரிவு என்று சொல்ல வேண்டும். இதைச் சற்று விரிவாக ஆராய்வோம்.

மனிதன் தன் சக்கதிக்குட்பட்ட காரியங்கள் பலவற்றைச் செய்கிறான். ஒரு செயல் வெளிப்பட வேண்டுமாயின் அதற்கு மூன்று நிபந்தனைகள் உருப்பெற வேண்டும். முதலில் அந்தச் செயலைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும். ஏனெனில், தான் அறியாத ஒன்றை எந்த மனிதனும் நினைத்துப் பார்க்க மாட்டான். இரண்டாவதாக அந்தச் செயல் பற்றி எண்ணிப் பார்க்க வேண்டும். எண்ணமின்றிச் செயல் உருவாக முடியாது. மூன்றாவதாக அந்தச் செயலைச் செய்வதற்கு வேண்டிய ஆற்றல் இருக்க வேண்டும். ஏனென்றால், எண்ணத்தைச் செயலாக்குவதற்கு ஆற்றல்



அவசியமாகும்—இதற்கு விளக்கம் தேவையில்லை. மனிதன் எத்தனையோ காரியங்களை விரும்புகிறான். அவன் விரும்பியபடியே எல்லாம் நடந்து விடுவதில்லை. சில காரியங்கள் அவன் எண்ணப்படி நிறைவேறுகின்றன. வேறு சில காரியங்கள் அவன் எண்ணத்திற்கு மாற்றமாக நடைபெறுகின்றன. மனிதனின் சூழ்நிலை இப்படிதான் அமைக்கப்பட்டிருக்கிறது. எனவே, தனக்கு நன்மையை உண்டாக்கிக் கொள்வதற்கும் தீமையைத் தவிர்த்துக் கொள்வதற்கும் அவன் முனைகிறான். இந்த இடத்தில் எது நல்லது, எது கெட்டது என்று தெரிந்துகொள்ள வேண்டிய தேவை ஏற்படுகிறது. இன்ன காரியம் தனக்கு நன்மை பயக்கவல்லது, இன்ன காரியம் தனக்குத் தீமை செய்ய வல்லது என்று அறிந்து கொள்ள வேண்டிய அவசியம் உண்டாகிறது.

உணவைப் பார்த்திராதவன்—அதைப் பற்றி அறிந்திராதவன் அதனை உட்கொள்வான் என்று எதிர்பார்க்க முடியாது. நெருப்பைப் பற்றி அறியாதவன் அதைத் தொட்டுப் பார்க்கவும் தயங்க மாட்டான். ஆகவேதான், இறைவன் அறிவையும் தெளிவையும் உண்டாக்கினான். இதனால், மனிதன் ஒவ்வொரு பொருளி னுடையவும் உபயோகத்தை அறிகிறான். அறிவு உண்டாவதற்கு ஐம்புலன்கள் துணை செய்கின்றன. இவற்றை இங்கு விவரிக்க முடியாது. இவை நாம் விளக்க முற்பட்டிருக்கும் தலைப்புக்கும் அப்பாற்பட்டவை.

ஒருவன் உணவைப் பார்த்துத் தெரிந்துகொள்கிறான்—அது தனக்குப் பயன்தரவல்லது என்று. இவ்வாறு அறிந்து கொண்டதும் அவன் அதை உட்கொண்டுவிடுவான் என்று எதிர்பார்க்க முடியாது. உட்கொள்ள வேண்டுமென்ற ஆவல் அவன் மனத்தில் ஏற்படவேண்டும்.அதன் பிறகுதான் அவன் உணவருந்த முடியும்.

நோயாளி ஒருவனை எடுத்துக் கொள்வோம். அவன் உணவைப் பார்க்கிறான். அது தனக்கு உடல் வலிமையைத் தர வல்லது என்பது அவனுக்குத் தெரியும். ஆனால், அதை அவன் உட்கொள்வதில்லை. ஏனெனில், அவன் மனத்தில் அந்த ஆசை, எண்ணம் உண்டாகவில்லை. எனவேதான், வல்லநாயன் ஆசை,

நாட்டம், எண்ணம்—இவற்றைப் படைத்தான். ஒரு விஷயம் குறித்து மனத்தில் பொங்கியெழும் ஆர்வத்தையே ஆசை என்றும், எண்ணம் என்றும் குறிப்பிடுகிறோம்.

இன்னும் சற்று ஆழமாகப் பார்க்கப்போனால் உணவைப் பற்றிய அறிவு, உட்கொள்ளவேண்டும் என்கிற ஆவல் ஆகிய இரண்டும் ஏற்பட்டுவிட்டபோதிலும் சிலர் உணவருந்துவதில்லை என்பதை அறியலாம். ஏனென்றால், உட்கொள்வதற்கு வேண்டிய சக்தி அவர்களிடம் கிடையாது. அவர்களின் கரம் ஆரோக்கிய மிழந்துவிட்டது. எடுத்துண்பதற்கு அது பயன்படுவதில்லை. இந்த இக்கட்டான நிலையில் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். எனவே, சக்தியையும், அசையும் அவயங்களையும் இறைவன் உண்டாக்கினான். இந்தக் கட்டத்தோடு ஒரு மனிதனின் தேவை பூரணமாக முடிவுறுவதற்கு வேண்டிய எல்லாக் காரணங்களும் உருவாகிவிடுகின்றன. முதலில் அறிவு; இரண்டாவது எண்ணம்; அடுத்தது சக்தி.

அவயவங்கள் அசைவதற்குச் சக்தி அவசியமாகும். மனத்தில் தோன்றும் ஒருவித உணர்ச்சியால் சக்தி தூண்டிவிடப்படுகிறது. இவ்வித உணர்ச்சி ஏற்படுவதற்கு அறிவுத் தெளிவு தேவைப்படுகிறது. ஒரு காரியம் தனக்கு நன்மை பயக்கவல்லது என்று ஒருவன் அறிந்தால்—அல்லது அப்படிக் கருதினால் அவன் உள்ளத்தில் ஒருவித உணர்ச்சி உருவாகிறது. இந்த உணர்ச்சியை எண்ணம் என்று குறிப்பிடலாம். அது ஒடுங்கிக் கிடக்கும் சக்தியைத் தூண்டிவிடுகிறது. சக்தி இயங்குவதால் அவயவங்கள் இயங்குகின்றன. இதனால், மேற்குறிப்பிட்ட காரியம் நிறைவேறுகிறது. சக்தி என்பது அவயங்களை இயக்குவதன் மூலம் எண்ணத்திற்குப் பணிபுரிகிறது. அறிவையொட்டி—அல்லது அபிப்பிராயத்தையொட்டி எண்ணம் உருவாகிறது. எனவே, ஒருவன் ஒரு காரியத்தைச் செய்ய முற்படும்போது அவன் அறிவால்—அல்லது அபிப்பிராயத்தால் எண்ணமும், எண்ணத்தினால் சக்தியும் தூண்டிவிடப்படுகின்றன. சக்தியினால் அவயவங்கள் இயங்குகின்றன. இதனால், எண்ணம் செயலாகிறது. ஆக, ஒரு செயல்



உருவாக வேண்டுமாயின் அதற்குரிய காரணங்கள், நிபந்தனைகள் முதலில் உருப் பெற வேண்டும்.

உருவாகும் செயல்களை இந்த இடத்தில் நான்கு வகைகளாகப் பிரிக்கலாம்.

1. சில செயல்கள் ஒரே ஒரு காரணத்தோடு உருவாகின்றன. அந்த ஒரு காரணமே எண்ணத்தைத் தூண்டிவிட்டுச் செயலை உருவாக்கிவிடுகிறது. வன விலங்கு ஒன்று ஒரு மனிதனை நோக்கிப் பாய்கிறது. இதைக் கண்டதும் அவன் குதித்து எழுகிறான். உயிர் தப்புவதற்காக ஓட்டம் பிடிக்கிறான். ஏனெனில், அவன் அந்த வன விலங்கைப் பற்றி அறிந்திருக்கிறான். அது தனக்குத் தீங்கு விளைவிக்கக் கூடியது என்பது அவனுக்குத் தெரியும். எனவே, அவன் உள்ளம் அவனை ஓடிவிடுமாறு தூண்டுகிறது. இந்த மன உணர்ச்சியால் அவனது சக்தி தூண்டிவிடப்படுகிறது. அவயவங்கள் இயக்கப்படுகின்றன—அவன் ஓட்டம் பிடிக்கிறான். அவன் ஓட்டமெடுத்தது ஒரு செயல். இந்தச் செயலுக்கு ஒரே ஒரு காரணம்தான் உண்டு. உயிர் தப்ப வேண்டும் என்ற எண்ணம். இத்தகைய எண்ணமும் அதனால் உண்டாகும் செயலும் 'கலப்பற்றவை' எனப் பெயர் பெறுகின்றன.

2. வேறு சில செயல்களுக்கு இரண்டு காரணங்கள் இருக்கலாம். ஆனால், அவை ஒவ்வொன்றும் செயலை உண்டாக்கும் ஆற்றலுள்ளவை. ஒரு மனிதன் சுமக்கத் தகுந்த சுமையொன்றை இருவர் சேர்ந்து சுமக்கிறார்கள். இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. சுமப்பவர் இருவரல்லவா? ஆனால், அவர்கள் தனித்தனியே பிரிந்துவிட்டாலும் அவர்களால் அதனைச் சுமக்க முடியும்.

ஏழை ஒருவன் இருக்கிறான். அவன் உனக்கு உறவினனும் கூட அவன் உன்னிடம் வந்து ஏதோ உதவி கேட்கிறான். நீ உதவியளிக்கிறாய் என்று வைத்துக் கொள்வோம். இந்தச் செயலுக்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. உன்னிடம் உதவி கேட்டவன் ஏழை. இது முதல் காரணம். தவிர அவன் உன்

உறவினன். இது இரண்டாம் காரணம். ஏழ்மை, உறவு ஆகிய இரு காரணங்களுக்காக நீ உதவி செய்திருந்தாலும், ஒவ்வொன்றும் செயலை உண்டாக்கும் சக்தி கொண்டது. உதவி கேட்டவன் ஏழையாய் இல்லாவிட்டாலும் உறவுள்ளவன் என்கிற காரணத்தால் நீ வேறொருவனுக்கு உதவி செய்யலாம். இதேபோன்ற உதவி கேட்டவன் உறவுள்ளவனாக இல்லாவிட்டாலும், ஏழை என்ற காரணத்தால் நீ இன்னொரு வனுக்கு உதவி புரியலாம்.

பணக்காரனான உறவினன் ஒருவன் உதவி தேடுகிறான். இந்த உதவியை நீ செய்யும்போது உறவு என்ற ஒரே காரணம்தான் உண்டு. இதுபோலவே அன்னியனான ஏழை ஒருவன் உதவி வேண்டுகிறான். நீ நிறைவேற்றுகிறாய். இந்த இடத்தில் ஏழ்மை என்ற ஒரே காரணம்தான் காணப்படுகிறது. முந்தியதில் ஏழ்மை இல்லை; பிந்தியதில் உறவு முறை இல்லை.

மற்றோர் உதாரணம்: உனக்குச் சிகிச்சை செய்யும் வைத்தியன் "இன்று சாப்பிட வேண்டாம்!" என்று பத்தியம் விதித்துவிட்டான். அது துல்ஹஜ்ஜு மாதம் ஒன்பதாம் நாள்; 'அரபா' தினம். எனவே, நீ நோன்பு பிடிக்கிறாய். இந்த இடத்தில் வைத்தியனின் பத்தியம், 'அரபா'வின் நோன்பு ஆகிய இரு காரணங்கள் இருக்கின்றன. ஆனால், இந்தச் செயலுக்கு இரண்டு காரணங்கள் இருந்தபோதிலும் அவற்றுள் ஒன்றே போதுமானது. செயலை உருவாக்க அதாவது, 'அரபா' அல்லாத மற்ற தினத்தில் வைத்தியன் உணவுத் தடுப்புப் பத்தியம் விதித்தால்—அல்லது வைத்தியன் பத்தியம் விதிக்காத தினத்தில் 'அரபா' வந்துவிட்டால் இந்தச் செயலை நீ செய்துவிடுவாய்.

3. இன்னம் சில செயல்களுக்கு இரு காரணங்கள் இருந்தாலும் அவற்றுள் எதுவும் தனித்து நின்று செயலை உருவாக்க முடியாது. அவை இரண்டும் ஏக காலத்தில் ஒன்று சேர்ந்தால் தான் அந்தச் செயல் உருவாக முடியும். தனித்தனியே காரணங்கள் பிரியும்போது அந்தச் செயல் உருவாக வழியில்லை.



பணக்காரனான உறவினன் ஒருவன் உன்னிடம் நாலணா கேட்கிறான்; நீ மறுத்துவிடுகிறாய். ஏழையான அன்னியன் ஒருவன் உதவி கேட்கிறான்; நீ கையை விரித்து விடுகிறாய். இதன் பிறகு உறவினனான ஏழை ஒருவன் உதவி கோருகிறான். நீயும் உதவி செய்கிறாய் என்று வைத்துக் கொள்வோம். அங்கு உறவு முறை, ஏழ்மை ஆகிய இரண்டு காரணங்களும் ஒன்று சேருகின்றன. இவை இரண்டும் தாம் செயலை உண்டாக்குகின்றன. ஆனால், ஏழ்மை மட்டிலும்—அல்லது உறவு முறை மட்டிலும் தனித்து நின்றால் இச்செயல் உருப்பெற முடியாது.

நற்கூலியையும் புகழையும் எதிர்பார்த்து ஒருவன் மக்களின் முன்னிலையில் தானதருமம் செய்கிறான். இந்தச் செயல் நற்கூலி, புகழ் ஆகிய இரு காரணங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாகியிருக்கிறது. இந்த இரண்டு காரணங்களும் அவசிய மாகும். இவற்றுள் ஒன்றினால் மட்டும் செயல் வெளிப்படாது. இதன்படி, அவன் புகழ் இல்லாத இடத்தில்—நாலு பேர் இல்லாத இடத்தில் தருமம் செய்ய மாட்டான். மேலும், அவன் பாவிகளுக்கு உதவி புரியமாட்டான். ஏனெனில், மக்களின் புகழுரைகள் கிடைப்பதாயிருந்தாலும் பாவிகளுக்கு உதவி செய்வதால் இறைவனிடம் நற்கூலியை எதிர்பார்க்க முடியாது. ஆகவே, இந்தப் பிரிவில்பட்ட செயல்களுக்கு ஏக காலத்தில் இரண்டு காரணங்கள் இருக்க வேண்டும். அப்போதுதான் செயல் வெளிப்பட முடியும்.

4. வேறு சில காரியங்கள். இவற்றிற்கு இரண்டு காரணங்கள் என்றாலும் அவற்றுள் ஒன்று செயலை வெளிக்கொணரும் சக்தி கொண்டது; மற்றொன்று அத்தகைய சக்தி இல்லாதது. பலசாலி ஒருவனும் பலவீனன் ஒருவனும் சேர்ந்து ஒரு சுமையைச் சுமக்கிறார்கள். இந்தச் செயலைப் பலசாலியால் தனித்துச் செய்ய முடியும். ஆனால், பலவீனனுக்கு அது சாத்தியமில்லை. என்றாலும், இருவரும் சேரும்போது தயக்கமின்றிச் செயல் வெளியாகிறது; சிரமமும் குறைகிறது.

ஒரு மனிதன் இறைவணக்கத்திலும் தானதரும வகையிலும் வழக்கமாக ஈடுபட்டு வருகிறான். ஒரு நாள் அவன் செயல்களைச் சிலர் மதிப்போடும் மரியாதையோடும் பார்த்துக் கொண்டு நிற்கிறார்கள். அவர்கள் கவனிக்கிறார்கள் என்ற காரணத்தால் அவன் செயல்கள் அவனுக்கு இலகுவாகின்றன. ஆனால், கவனிப்பவர்கள் இல்லை என்ற காரணத்தால் அவன் தன் செயலை விட்டுவிட மாட்டான்.

மேற்குறிப்பிட்ட நான்கு விதங்களில் எண்ணம் செயலை உருவாக்குகிறது. செயல்கள் எண்ணத்தைப் பின்பற்றி வெளிப்படுகின்றன. எனவே, எண்ணத்தின் சிறப்பு—அல்லது இழிவு செயலுக்கும் ஏற்படுகிறது. இதனால்தான், நபிகள் திலகம் (ஸல்) அவர்கள், ''செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொறுத்தவையே'' என்று கூறினார்கள். ஏனென்றால், செயல்கள் பிந்தியவை. அவற்றிற்கு முன்னால் நிற்பவை எண்ணங்கள்.

# 3. செயலைவிடச் சிறந்தது

''முஸ்லிமின் எண்ணம் அவன் செயலைவிடச் சிறந்தது'' என்று திருநபியவர்கள் கூறியிருக்கிறார்கள். அவர்கள் இப்படிக் கூறியிருப்பதற்குச் சிலர் இவ்வாறு காரணம் காட்டுகின்றனர். எண்ணம் என்பது மருமமான ஒன்று. இறைவனைத் தவிர்த்து வேறு யாராலும் ஒரு மனிதனின் உள்ளத்திலுள்ள எண்ணத்தைத் தெரிந்து கொள்ள முடியாது. ஆனால், செயல் இப்படியில்லை. அது பகிரங்கமானது. மருமமான ஒன்று பகிரங்கமான ஒன்றைவிடச் சிறந்தது என்பது வெளிப்படையான விஷயம். எனவே, செயலைவிட எண்ணம் சிறப்படைகிறது.

இது நேர்மையான கருத்துதான். ஆனால், நபியவர்கள் அப்படிக் கூறியிருப்பதைப் பொதுவாக எல்லா இடங்களிலும் எடுத்துக் கொண்டுவிட முடியாது. சில இடங்களில் செயலை விட எண்ணம் சிறந்து விளங்குவதில்லை. இறைவனைத் துதிக்க வேண்டும் என்று ஒருவன் எண்ணுகிறான். இப்படி எண்ணுவது அந்தச் செயலைச் செய்வதைவிடச் சிறந்ததல்ல. முஸ்லிம்களின் நன்மையில் கவனம் செலுத்தி ஆராய வேண்டும் என்று ஒருவன்

எண்ணுகிறான். இந்த எண்ணம் இந்தச் செயலை விட மேலானதல்ல. நபியவர்களின் கருத்தைப் பொதுவாக எடுத்துக்கொள்ளும்போது இத்தகைய இடங்களில் செயலைவிட எண்ணமே சிறந்தது என்று சொல்ல வேண்டிவரும். இது சரியல்ல. இறை துதி என்பது அதற்குரிய எண்ணத்தைவிட எந்த வகையிலும் தாழ்ந்ததல்ல. முஸ்லிம்களின் முன்னேற்றம் குறித்து ஆராய்ந்து, அதற்குரிய எண்ணத்தைப் பார்க்கிலும் எந்த விதத்திலும் கீழானதல்ல. எனவே, தியானமும் சிந்தனையும் அவற்றிற்குரிய எண்ணங்களைவிடச் சிறந்தவை என்பதில் சந்தேகமில்லை.

மேற்குறிப்பிட்ட நபியவர்களின் கூற்றுக்கு வேறு சிலர் இப்படி விளக்கம் தருகிறார்கள். எண்ணம் என்பது செயலுக்கு முன்னாலிருந்து செயல் முடியும்வரை நீடிக்கிறது. செயலைப் பார்க்கிலும் அதிக நேரம் நீடிப்பதால் எண்ணத்திற்குத் தனிச் சிறப்பு ஏற்படுகிறது.

இந்த விளக்கம் ஆதாரப்பூர்வமானதல்ல. இதன்படி அதிக நேரம் நீடிக்கும் செயல்கள் அனைத்தும் சிறந்தவையாயிருக்க வேண்டும், அப்படியில்லையே! குறுகிய நேரத்தில் செய்யப்படும் சில காரியங்கள் நீண்ட நேரத்தைக் கொண்டுள்ள சில காரியங்களைவிடச் சிறந்தவையாயிருக்கின்றன. தவிர, எண்ணம் என்பது செயல் முடியும்வரை நீடிக்கிறது என்பது சரியில்லை. ஏனெனில், இறைவணக்கத்தின்போது உருவாக்கப்படும் நல்லெண்ணம் சில சமயங்களில் இறைவணக்கம் முடியும்வரை நீடிப்பதில்லை. சில வினாடிகளில் அந்த நல்லெண்ணம் மறைந்து விடுவதும் உண்டு. இந்த இடத்தில் எண்ணத்தைவிடச் செயலே நீண்ட நேரம் நீடிக்கிறது. எனவே, மேற்குறிப்பிட்ட விளக்கம் சரியில்லை.

மற்றொரு சாரார் இவ்வாறு வியாக்கியானம் செய்கின்றனர்: நல்லெண்ணம் இல்லாத வெறும் செயலைவிட வெறும் நல்லெண்ணம் சிறப்பு வாய்ந்தது.



இதுவும் சரியில்லை. வெறும் நல்லெண்ணம் நன்மையான காரியம் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், நல்லெண்ணமில்லாத வெறும் செயலில் எவ்வித நன்மையும் கிடையாது. 'செயலைவிட எண்ணம் சிறந்தது' என்னும் திருநபிக் கருத்திலிருந்து செயலுக்கும் ஓரளவு சிறப்பு உண்டு என்றும் ஆனால், அது எண்ணத்தின் சிறப்பைப் பார்க்கிலும் தாழ்ந்தது என்பதும் தெரிகின்றன. நபியவர்களின் கருத்தை இப்படிதான் வியாக்கியானம் செய்ய வேண்டும். எண்ணம், செயல் ஆகிய இரண்டிற்கும் நம்மையுண்டு. ஆனால், செயலின் நன்மையைவிட எண்ணத்தின் நன்மை மேலானது. எனவே, எண்ணம் செயலை விடச் சிறப்படைகிறது. இவை இரண்டும் மனிதனின் சக்திக்குட்பட்டவை என்பதில் சந்தேக மில்லை. இவற்றில் எண்ணம் மற்றதைவிட மேலானது—இதுதான் திருநபியவர்களின் கருத்து, அவர்களின் கூற்றுக்குப் பொருள்.

இந்தக் கட்டத்தில், "செயலைவிட எண்ணம் ஏன் சிறப்படைய வேண்டும்?" என்று ஒரு வினா உதயமாகிறது.

மார்க்கத்தின் நோக்கம் தெரிந்தவர்தாம் இந்த வினாவிற்கு விடை காண முடியும்.

இங்கு ஓர் உதாரணத்தை எடுத்துக்கொண்டு விஷயத்தை ஆராய்வோம். பழத்தைவிடக் கோதுமை ரொட்டி சிறந்தது என்று ஒருவன் கூறுவதாக வைத்துக்கொள்வோம். அவன் கருத்து என்ன? உணவின் தேவையை முடித்துக்கொள்ளும் விஷயத்தில் கனியைவிட ரொட்டி சிறந்தது என்பதுதான் அவன் கருத்து. மனிதன் உணவு உட்கொள்கிறான். இதற்கு ஒரு நோக்கம் இருக்க வேண்டுமல்லவா? மனிதன் ஆரோக்கியத்தோடு உயிர் வாழ வேண்டும்—இதுதான் உணவின் நோக்கம். உணவு பலவகை. எனவே, அவற்றால் மனிதனின் உடல் நிலையில் ஏற்படும் நன்மைகள் பலதரப்படுகின்றன. இந்த உதாரணத்தை வைத்துக்கொண்டு நாம் நம் பிரச்சனையை ஆராய்வோம்.

இறை வழிபாடு என்பது உண்மையில் உள்ளத்திற்கு உணவாகும். மனவியாதி நீங்குவதற்கும் மறுமையில் இறைவனின் சந்திப்பைப் பெற்றுப் பேரின்பம் காணபதற்கும் இந்த உணவு தேவைப்படுகிறது. இறை சந்திப்புதான் இறை வழிபாட்டின் நோக்கம். இறை சந்திப்புக் கிடைக்க வேண்டுமாயின் இறைவனை விரும்ப வேண்டும். அவனை விரும்ப வேண்டுமானால் அவனைப் பற்றி அறியவேண்டும். ஒரு மனிதன் நிரந்தரமாக இறைச் சிந்தனையில் ஈடுபடும்போதுதான் அவன் உள்ளத்தில் இறைவகை பற்றிய அறிவு ஏற்பட முடியும். இறைவனைப் பற்றி அறிந்த யாராலும் அவனை விரும்பாமலிக்க முடியாது. நிரந்தரமான தியானத்தால் இறையன்பு வலுப்படுகிறது. ஆனால், இப்படி நிரந்தரத் தியானம் புரிவது இலகுவான காரியமல்ல. இது நிறைவேற வேண்டுமானால் உலகப்பற்றை அறுத்தெரிய வேண்டும். உலகப் பற்று நீங்கவேண்டுமானால் நன்மையில் ஆர்வமும் தீமையில் வெறுப்பும் ஏற்பட வேண்டும். இந்த நிலைமை ஒரு 'மனிதனுக்கு உண்டாக வேண்டும். இந்த நிலைமை ஒரு மனிதனுக்கு உண்டாக வேண்டுமாயின் அவன் சந்தேகமறத் தெரிந்தகொள்ள வேண்டும்– 'மறுமையின் வெற்றியை நற்காரியங்களால் தான் அடைய முடியும்' என்று. ஆக, எல்லாவற்றிற்கும் அறிவு தான் மூலம்.

மேற்குறிப்பிட்ட திருப்பங்கள் அனைத்திற்கும் அறிவுதான் முக்கியம். அறிவு ஏற்படும்போது இறை வழியில் மனம் திரும்புகிறது. இந்தத் திருப்பம் உறுதியோடு அமைய வேண்டுமானால் அதற்குத் தகுந்தபடி செயலாற்ற வேண்டும். உடலின் ஆரோக்கியத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக நாம் நிரந்தரமாக உணவை உட்கொள்ளுவதுபோல, நாம் நற்காரியங்களை நிரந்தரமாகச் செய்து வரவேண்டும். ஆரம்பக்கட்டத்தில் நல்வழியில் ஆர்வமும் வேகமும் அதிகமாக இருக்க முடியாது. போகப்போக இந்த உணர்ச்சி வலுவடையும். நாளடைவில் நற்காரியங்கள் புரிவது இயற்கைத் தன்மையாகி விடும். அதன் பிறகு நற்காரியங்கள் செய்யாதிருக்கவே முடியாது.



அறிவின் காரணமாக ஏற்பட்ட அந்த நல்லுணர்வு வலுப்படுவதற்குத் தகுந்தபடி செயலாற்ற வேண்டும். கெட்ட காரியங்களும் இப்படிதான்.

ஒருவன் எதிர்பாராத விதமாக அழகி ஒருத்தியைப் பார்க்கிறான். அவன் உள்ளத்தில் இலேசான சபலம் உருவாகிறது. அந்தச் சபல எண்ணத்திற்குத் தக்கவாறு செயலாற்றுகிறான். பெண்களின் நடமாட்டம் மிகுந்த இடத்தில் அமர்ந்து போவோர் வருவோரைக் கண்களால் எரிக்கும் பணியில் ஈடுபடுகிறான். நாளடைவில் பெண்களைப் பார்ப்பது என்பது அவனுக்கு இயற்கைக் குணமாகிவிடும். அதன் பிறகு அவனால் பெண்களைப் பார்க்காமலிருக்கவே முடியாது.

நற்காரியங்கள் மறுமைப் பயனைக் கருதிச் செய்யப் படுகின்றன. தீய காரியங்கள் உலக இன்பத்திற்காக மேற்கொள்ளப் படுகின்றன. ஒரு மனிதனின் மனத்தில் தீமையின் மீது வெறுப்பும் நன்மையின்மீது விருப்பும் ஏற்பட்டால் தான் அவனால் நிரந்தரமாக இறைத் தியானத்திலும் இறைச் சிந்தனையிலும் ஈடுபட முடியும். அவன் நற்காரியங்களைத் தொடர்ந்து செய்ய வேண்டும். தன் அவயவங்களைத் தீயவற்றில் உபயோகிக்கக் கூடாது. ஏனெனில், அவயவங்களுக்கும் உள்ளத்திற்கு மிடையில் நெருங்கிய தொடர்புண்டு. இவை இரண்டனுள் ஒன்றுக்கு ஏற்படும் துன்பம் மற்றொன்றையும் பாதிக்கிறது. ஏதேனும் ஓர் அங்கத்தில் காயம் ஏற்பட்டால் அதன் வலியால் உள்ளம் வருந்துகிறது. இதேபோன்று நெருங்கிய நண்பனின் மரணச் செய்தியை உள்ளம் அறியும்போது அதன் கவலை முகத்தில் தோன்றுகிறது; அதன் நிறம் மாற்றமடைகிறது. எனினும், உள்ளம்தான் எல்லாவற்றிற்கும் மேலானது. உள்ளத்தை அரசன் என்றால் அவயவங்களை அரசனின் பணியாள்கள் என்று சொல்லாம். மனிதனின் அவயவங்கள் அவன் உள்ளத்திற்குப் பணிபுரிகின்றன–உள்ளத்தின் கட்டளையைச் செயல்படுத்துவதன் மூலம். உள்ளத்தைக் குறிக்கோள் என்றால் அவயவங்களைக் குறிக்கோளுக்குத் துணைபுரியும் கருவிகள் எனக் கூறலாம்.

இதனால் தான், அண்ணலவர்கள், ''உடலில் ஒரு சதைத்துண்டு இருக்கிறது. அது சீர்ப்பட்டுவிட்டால் உடல் முழுவதும் சீர்ப்பட்டுவிடும்'' என்று கூறினார்கள்.

''இறைவனே! உள்ளத்தையும் செயல்களையும் சீர்ப்படச் செய்வாயாக!'' என்னும் பொருள்பட அவர்கள் பிரார்த்தித் திருக்கிறார்கள்.

''அவற்றின் மாமிசத்தையோ இரத்தத்தையோ இறைவன் ஏற்றுக் கொள்வதில்லை. அவர்களின் இறையச்ச உணர்ச்சியைத்தான் அவன் ஏற்றுக் கொள்கிறான்!'' என்று திருமறை கூறுகிறது. இறையச்சம் என்பது உள்ளத்தில் ஏற்படும் உணர்வு என்பதில் சந்தேகமில்லை.

இவ்வாறு ஆராய்ந்து பார்க்கும்போது உள்ளத்தில் செயல்கள்—அதன் உணர்ச்சிகள் அவயங்களின் செயலைவிட அவசியம் சிறந்தவையாகவே இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் உதயமாகிறது. இதுபோலவே உள்ளத்தின் உணர்ச்சிகளுக்கு மத்தியில் நல்லெண்ணத்திற்குத் தனிச் சிறப்பு இருக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கவேண்டி வருகிறது. ஏனென்றால், நல்லெண்ணத்தினால்தான் நற்காரியங்கள் உருவாகின்றன. ஒருபுறம் எண்ணமும் மறுபுறம் செயலும் குறிக்கோளை ஈர்த்துவரப் பயன்படுகின்றன. இவை இரண்டும் அவசியம்தான். என்றாலும், இவற்றில் எண்ணம்தான் மேலானது. இரைப்பையில் கோளாறு ஏற்பட்டால், சில சமயங்களில் மேல் பூச்சுப் பூசுவதன் மூலம் பரிகாரம் காணலாம். இன்னும் சில சமயங்களில் உள்ளுக்கு மருந்து குடிப்பதால் பரிகாரம் தேடலாம். இவற்றில் மேல்பூச்சைவிட உள்ளுக்கு மருந்து குடிப்பது சிறந்ததாகும். ஏனெனில், அது இரைப்பையை அடைந்து தேவையான பயனை உருவாக்குகிறது. இத்தகையவை தாம் மார்க்க விஷயங்களும் என்பதை நீ உணர்ந்து கொள்ள வேண்டும்.

உள்ளத்தின் போக்கை மாற்றி அதனை நேரிய வழியில் திருப்புவதுதான் நம் குறிக்கோள்—அவயவங்களைப் பற்றி இங்குக்



கவலையில்லை. சிரத்தைத் தரையில் படிய வைத்து இறைவனை வணங்கும்போது, நெற்றியும் தரையும் ஒன்று சேருவதுதான் குறிக்கோள் என்று எண்ணிவிடாதே. இதில் வேறொரு தத்துவம் உண்டு. ஒருவன் தன் நெற்றியைத் தரையில் வைக்கும்போது நடைமுறைப் பழக்கத்தை யொட்டி அவன் உள்ளத்தில் தாழ்வு மனப்பான்மை உருப் பெறுகிறது. இறைவனுக்கு மனிதன் எல்லா விதத்திலும் தாழ்ந்தவனே. இந்த மனப்பான்மையின் காரணமாகவே அவன் சிறப்புக் குரிய ஓர் அங்கத்தை—சிரத்தை காலுக்குக் கீழுள்ள தரையோடு சேர்க்கிறான். இந்த இடத்தில் அவனது தாழ்வு மனப்பான்மை செயலுருவில் வெளிப்படுகிறது.

தாய் தந்தையற்ற அநாதைச் சிறுவன் ஒருவனை நீ பார்க்கிறாய்; இரக்க வசப்படுகிறாய். எனவே, அவன் தலையை அன்புடன் வருடுகிறாய். இவ்வாறு நீ செய்தால் இதற்கு முன்னர் உன் உள்ளத்தில் இரக்கம், பரிவு சுரந்துவிட்டது என்பது பொருள். ஆகவே, நல்லெண்ணமில்லாத எந்தச் செயலும் பயன்தரத் தக்கதல்ல. உதாரணமாக, கவனமாயுள்ள ஒருவன், அநாதைச் சிறுவனின் தலையை வருடுகிறான். இந்தச் செயலால் அவன் உள்ளத்தில் எத்தகைய திருப்பமும் ஏற்படாது. இதைப்போன்று உலக இனபத்தை நோக்கமாகக் கொண்டவன்—அல்லது மேற்குறிப்பிட்ட தாழ்வு மனப்பான்மை இல்லாதவன் நெற்றியைத் தரையில் வைப்பதால் பயன் ஏதும் கிடையாது. இந்தச் செயலால் அவன் உள்ளத்தில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படாது. இப்படிச் சிர வணக்கம் செய்வதும் செய்யாதிருப்பதும் ஒன்றுதான். இத்தகைய கைங்கரியங்களுக்கு 'வீணானவை' என்று பெயரிடலாம். ஆகவே, 'நல்லெண்ணம் இல்லாத வணக்கம் வீணான செயல்' என்று பெரியோர்கள் கூறினார்கள்—இதுவரை நான் விளக்கி வந்ததுதான் மேற்குறிப்பிட்ட திருநபிக் கருத்தின் உட்பொருள்.

ஒரு மனிதன் நல்லெண்ணம் கொள்ளாமல் ஒரு நற்காரியம் செய்கிறான். முகஸ்துதிக்காகவோ மற்றொருவனின் கவனத்தைக் கவர்வதற்காகவோ அந்தக் காரியத்தில் அவன் தலையிடுகிறான் என்று வைத்துக் கொள்வோம். இந்தச் செயலைச் செய்வதும்

செய்யாதிருப்பதும் ஒன்றுதான் எனச் சொல்லி விட முடியாது. இவ்விதம் செயலாற்றுவது செயலாற்றாமலிருப்பதைவிடக் கொடியதாகும். ஏனெனில், நல்லெண்ணம் இல்லாத–தீய நோக்கத்துடன் கூடிய இச்செயலால் அந்தச் செயலுக்குரிய குறிக்கோள் நிறைவேறப் போவதில்லை. அத்துடன், இச்செயலால் குறிக்கோளுக்கு நேர் எதிரான தீய எண்ணங்கள் வேறு தூண்டிவிடப்படுகின்றன. முகஸ்துதி என்பது வணக்கத்தின் பயனைக் கெடுக்கவல்லது என்பதில் சந்தேகமென்ன? எனவேதான், செயலைவிட எண்ணம் சிறப்படைகிறது.

இந்த விளக்கத்தை வைத்துப் பார்க்கும்போது, ''நன்மையைச் செய்ய ஒருவன் எண்ணினால்–அதை அவன் செய்து முடிக்காவிட்டாலும்–அவனுக்கு நன்மையுண்டு'' என்று திருநபியவர்கள் கூறியிருப்பதன் உட்கருத்தையும் இலகுவாகத் தெரிந்துகொள்ளலாம். உலக ஆசாபாசங்களை விட்டுத் தனித்து நன்மையில் கவனம் திரும்பும்போதுதான் தூய்மையான நல்லெண்ணம் உருவாகிறது. இது சிறந்த நற்காரியம் என்பது சந்தேகத்திற்கு இடமில்லாத ஒன்று. இந்த நல்லெண்ணம் பூரணத்துவம் அடைவதற்குச் செயல் அவசியமாகும்.

ஆடுமாடுகளை அறுத்து இறைவனுக்காகத் தருமம் செய்கிறோம். இதன் நோக்கம் என்ன? இம்மையின் வாழ்க்கைக்குத் தேவையானவற்றை இறைவனுக்காகத் தியாகம் செய்யும் மனப்பான்மையைத்தான் இச்செயல் குறிக்கும். இந்த மனப்பான்மையுடன்தான் இந்தச் செயலைச் செய்யவேண்டும். இல்லையேல், இதில் பயனில்லை, அர்த்தமுமில்லை. ஏனெனில், இறைவன் மாமிசத்தையோ ரத்தத்தையோ ஏற்றுக்கொள்வதில்லை. மக்களின் மனத்திலுள்ள இறைப்பக்தியையே அவன் வரவேற்கிறான்.

இந்தத் தத்துவத்தின் அடிப்படையில்தான் அண்ணலவர்கள், ''மதீனாவில் சிலர் இருக்கின்றனர்.. அவர்கள் இந்தப் பிரயாணத்தில் நம்முடைய சுக துக்கங்களில் பங்கு கொண்டு வருகிறார்கள்'' என்று



ஒரு யுத்தத்தில் பிரயாணத்தின்போது கூறினார்கள். இதனை மேலே நான் குறிப்பிட்டுவிட்டேன். அவர்களின் உள்ளம் நன்மையில் இலயித்திருக்கிறது. இறைக் கருத்தைப் பரப்புவதற்காகத் தங்கள் உயிர்களையும் தியாகம் செய்யும் நல்லெண்ணம் அவர்களுக் குண்டு. எனவே, யுத்தத்தில் கலந்து கொண்டவர்களுக்குக் கிடைப்பதுபோல அவர்களுக்கும் நற்கூலி கிடைக்கிறது. இவர்களின் உடல்கள் போரில் கலந்துகொள்ளவில்லை என்றாலும் உள்ளங்கள் அதில் ஈடுபட்டிருக்கின்றன.

இதை வைத்துக்கொண்டு எண்ணத்தின் சிறப்புக் குறித்து வந்துள்ள திருநபிக் கருத்துகள் அனைத்தையும் நீ இலகுவாகப் புரிந்து கொள்ளலாம். அவற்றை நீயே மீண்டும் பார்த்து அவற்றின் உட்பொருள்களைப் புரிந்துகொள். அவற்றையெல்லாம் இங்கு மீண்டும் குறிப்பிட்டு நூலை நீளமாக்குவதை நான் விரும்பவில்லை.

## 4. எண்ணம் கலந்த செயல்

''கிரியாம்சைகள் பலதரப்படுகின்றன. என்றாலும் அவற்றை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்: வழிபாடு, முரண்பாடு, அனுமதிக்கப்பட்டவை.

முதலில் முரண்பாடுகளைப் பற்றி ஆராய்வோம். மார்க்கத்தில் அனுமதிக்கப்படாதவை அனைத்தும் இந்தப் பிரிவில் சேர்கின்றன. இவற்றை நல்லெண்ணத்தின் காரணமாக நற்செயல்களாக மாற்ற முடியாது. ''செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொறுத்தவை'' என்ற திருநபிக் கருத்தை இதுபோன்ற இடங்களில் சாதகமாகப் பயன்படுத்த முடியாது. நல்லெண்ணத்திற்கு, இச்செயல்களை நற்செயல்களாக்கும் திறன் கிடையாது.

உதாரணமாக அன்னியனின் பொருளை, அவன் அனுமதியின்றியே ஒருவன் ஏழைக்குத் தருமம் செய்கிறான்.

அல்லது தவறான வழியில் சம்பாதிக்கப்பட்ட பொருளால் பள்ளியோ கலாசாலையோ எழுப்புகிறான் என்று வைத்துக் கொள்வோம். இந்த இடத்தில் நல்லெண்ணம் இருந்தாலும் இச்செயலில் குற்றம் உண்டு என்பதில் சந்தேகமில்லை.



நல்லெண்ணத்தின் காரணமாக இசசெயல் நன்மையாகிவிடும் என்று எதிர்பார்ப்பது அறிவின்மையாகும். தீமையைச் செய்து நன்மையை எதிர்பார்ப்பது மார்க்கத்தில் கண்டிக்கப்படுகிறது. இதுவும் ஒரு குற்றமாகும். இதை ஒருவன் தெரிந்து செய்தால் அவன் பிடிவாதமாக மார்க்கத்திற்கு முரண் செய்தவனாகிறான். தெரியாத்தனமாகச் செய்யின் பாவியாகிறான். ஏனெனில், கல்வியைத் தேடியடைவது முஸ்லிமுக்குக் கண்ணான கடமையாகும். மார்க்கத்தின் தீர்ப்பை வைத்துதான் எந்தக் காரியத்தையும் நற்செயல் எனத் தீர்மானிக்க முடியும். எனவே, மார்க்கத்தின் பார்வையில் தீய செயலாயுள்ள எதுவும் நற்செயலாக முடியாது. ஆனால் பதவி, கண்ணியம் முதலான உலக இன்பங்களை ஒருவன் எதிர்பார்க்கும்போது இத்தகைய சபல எண்ணம் ஏற்பட்டுவிடுகிறது. அறியாதவர்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். இதனால்தான், ''அறியாமையே எல்லாக் குற்றங்களிலும் கொடியது'' என்று சஹ்ல் கூறினார்கள்.

''அறியாமையைவிடக் கொடியது எது?'' என்று யாரோ கேட்டார்கள்.

''தன் அறியாமையை உணராதிருப்பது'' என்று விடை வந்தது.

சஹ்ல் அவர்கள் இப்படிக் கூறியிருப்பதற்குச் சரியான காரணமுண்டு. தான் அறியாதவன் என்பதை உணரும்போது தான் ஒருவன் கல்வி பயில முனைகிறான். தன் அறியாமையையே உணராதவன் கல்வி கற்பது எப்படி? அவன் தன்னை அறிஞன் என்று எண்ணிக்கொண்டிருக்கிறான். அவன் கல்வி கற்பது எப்படிச் சாத்தியம்?

இதேபோன்று இறைவனின் வழிபாடுகளுள் சிறந்தது அறிவு. அறிவின் பயனை உணர்வது அறிவுக்குச் சிரம்போன்றது– அறியாமையின் விபரீதத்தை உணராதிருப்பது அறியாமைக்குத் தலையாயிருப்பதுபோல. பயன் தரும் அறிவை உணராதவர்கள் தங்கள் கல்வியறிவைத் தவறான வழிகளில் உபயோகிக்கக் கூடும்.

உலக ஆசாபாசங்களை அடைவதற்கு அவர்கள் அதனைப் பயன்படுத்திக்கொள்ளக் கூடாது. இது தவறு. இந்தக் கட்டத்தில் அறிவின் நோக்கமே பாழ்படுத்தப்படுகிறது.

ஆக, அறியாமையின் காரணமாக இருந்தாலும், தீமையைச் செய்து நன்மையை எதிர்பார்ப்பது தவறு என்பது தெளிவு: இந்த விதிக்கு ஒரே ஒரு மனிதன் மட்டுமே விதிவிலக்காக முடியும். அண்ணலவர்கள் திருத்தூதராவதற்குச் சிறிது காலம் முன்னர் ஒரு மனிதன் உயிர் வாழ்வதாக வைத்துக்கொள்வோம். கல்வியைப் பெறுவதற்குப் போதிய அவகாசம் அவனுக்குக் கிடைக்கவில்லை– இந்த மனிதன் மேற்குறிப்பிட்டவாறு நடந்தால் பரவாயில்லை. ஆனால், இது போன்ற சூழ்நிலை இன்றைக்கு ஏற்பட முடியாது.

இறைவன் கூறுகிறான்: ''உங்களுக்குத் தெரியாவிட்டால் தெரிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்!''

அண்ணலவர்கள் கூறினார்கள்: ''அறியாதவர்கள் தங்கள் அறியாமையைச் சாக்காகப் பயன்படுத்த முடியாது, அவர்கள் தங்கள் அறியாமையை மூடி மறைப்பது கூடாது. இதே போன்று, அறிந்தவர்கள் தங்கள் அறிவின்பத்தை வெளியிடாமல் மூடி மறைப்பதும் சரியல்ல.''

அறிஞர்கள் தங்களிடமுள்ள அறிவுச் செல்வத்தைத் தீயவர்களுக்கு அளிக்கக் கூடாது. அந்த அறிவை அவர்கள் தவறான வழிகளில் உபயோகிப்பார்கள். இத்தகையவர்கள் கல்வி கற்றுத் தேர்ச்சியடைந்தால் கொள்ளைக்காரர்களைப் போன்று மாறிவிடுவார்கள். இவ்வித நிலையிலுள்ள ஒவ்வொரு மனிதனும் உலக அழிவின்போது மண்ணகத்தில் தோன்றும் 'தஜ்ஜாலு'க்குப் பிரதிநிதிகள். தீயவர்கள் ஞானவான்களாகும்போது எண்ணற்ற விபரீதங்கள் உருவாக முடியும். உலக இன்பத்தில் அவர்கள் இலயிப்பார்கள்; மனம்போன போக்கில் நடப்பார்கள்; இறையச்சத்தை விட்டொழிப்பார்கள்; தீய செயலைச் செய்யுமாறு மக்களைத் தூண்டுவார்கள்–கல்வியினால் பயன்கள் உருவாவதற்குப் பதிலாக எண்ணிலடங்காத விபரீதங்கள் விளைய முடியும். இதற்குரிய பொறுப்பும் குற்றமும் ஆசிரியரை வந்தடைகின்றன. ஆசிரியர்கள் நன்கு ஆராய்ந்து செயலாற்ற வேண்டும். தகுதியுள்ளவர்களுக்கு மட்டுமே அவர்கள் போதிக்க வேண்டும். அசிரியர் தம் அறிவைத் தீயவர்களுக்குக் கற்பிப்பது அபாயம். அறிஞனான இந்த ஆசான் இறந்துவிட்டாலும் அவனால் தோற்றுவிக்கப்பட்ட தீய செயல்கள் பல்லாயிரம் ஆண்டுகள் நீடித்து நிற்கும். சாதாரண மனிதன் இப்படியில்லை. அவன் மரணமடைந்துவிட்டால் அவனுடைய மரணத்தோடு அவனது தீய செயல்களும் முடிவடைந்து விடுகின்றன. யார் செய்த குற்றத்திற்கும் அவன் தண்டனை பெற வேண்டுவதில்லை. அவனது குற்றங்களுக்கு மட்டுமே அவன் பொறுப்பாளி. இந்த வகையில் சாதாரண மனிதனை–பாமரனைப் பாராட்ட வேண்டியதுதான்.



இது ஒரு புறமிருக்க, தீயவர்களுக்குப் போதிக்கும் ஆசிரியர்கள் இப்படி வாதிக்கிறார்கள். மார்க்க அறிவைப் பரப்பும் எண்ணத்தோடுதான் நாங்கள் கல்வி போதிக்கிறோம், கற்பவர்களைப்பற்றி எங்களுக்குக் கவலையில்லை. அதை அவர்கள் தீய வழியில் உபயோகித்தால் அதற்கு நாங்கள் பொறுப்பாளி யல்ல.

இந்த வாதத்தைக் கேட்டு ஆச்சிரியப்படுகிறோம். தகுதியைப் பார்க்காமல் இவர்கள் எதற்காகப் போதிக்க வேண்டும்? தராதரம் உணராமல் எல்லோருக்கும் இவர்கள் ஏன் கற்பிக்க வேண்டும்? பதவி மோகத்தினால்தான் இவர்கள் இப்படிச் செய்கிறார்கள். தூய்மையான செயலைக் கறைபடியச் செய்து விட்டார்கள்.

வழிப்பறி செய்யும் கொள்ளைக்காரனுக்கு ஒருவன் வாளையும் குதிரையையும் பரிசளிக்கிறான். இது உண்மையில் தருமமாகுமா? போதாததற்கு அவன் இப்படி வேறு வாதிக்கிறான். ''வாளையும் குதிரையையும் நான் தருமத்தைக் கருதியே கொடுத்திருக்கிறேன். இறைவனிடம் நற்கூலியை எதிர்ப்பார்க்கிறேன். அவன், வாளையும்

குதிரையையும் வைத்துக்கொண்டு முரண் வழி நடப்போரை எதிர்த்துப் போர் புரிய வேண்டும் என்பதே என் எண்ணம். போருக்கு வேண்டிய சாமான்களைக் கொடுத்துதவி புரிவது சிறந்த காரியமாகும்''.

இது தவறு. இது சிறப்புடையதாக இருக்கலாம். என்றாலும், இந்த உதவியைப் பெற்றவன் தீய குணம் படைத்தவன். பல குற்றங்கள் புரிந்தவன். அவன் திருந்திவிட்டான் என்பதற்கு ஆதாரமில்லை. இந்த நிலையில் அவன் அந்த வாளையும் குதிரையும் தீய வழியில்தான் பிரயோகிப்பான்.

இத்தகைய தருமத்தை அறிஞர்கள் அனைவரும் அபிப்பிராய பேதமின்றி 'ஹராம்' என்று குறிப்பிடுகிறார்கள். தருமம் என்பது சிறப்பான காரியம் தான். ''இறைவனுக்கு முந்நூறு நற்றன்மைகள் உள்ளன. அவற்றுள் ஒன்றைப் பின் பற்றினால் போதும்—சுவனத்தை அடைந்துவிடலாம். அந்தத் தன்மைகளுள் இறைவனின் பேரன்புக் குரியது தயாளம்'' என்று திரு நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள், என்றாலும், தருமத்தை இடம் பார்த்துதான் செய்ய வேண்டும். தருமம் செய்யப்படுபவனின் தீய செயலால் தருமத்தின் சிறப்பே குன்றிப் போய்விடுகிறது.

வாளின் உதவியால் தீய செயல்கள் புரிய முடியும். அந்தத் தீய செயல்களைத் தடுக்க வேண்டுமானால்—ஒன்று, அந்த வாளைப் பறிக்க வேண்டும் அல்லது தீயவனிடம் வாளைக் கொடுக்கவே கூடாது. அறிவு என்பதும் ஒரு விதத்தில் வாள்தான். இந்த வாளின் உதவியால் தீய சக்திகளைத் தீர்த்துக் கட்டலாம். முரண்வழி நடக்கும் துன்மார்க்கர்களுக்குப் புத்தி புகட்டலாம். அறிவு எனப்படும் இந்த வாள் நல்லவர்களுக்குக் கிடைத்தால் விளையும் பயன் நல்லதாகத்தான் இருக்கும். தீயவர்கள் அதனை அடைந்தால் அவர்கள் அதைத் தீய வழியில் உபயோகிக்கத் தவறமாட்டார்கள்.



மார்க்கத்தின் கட்டளைகளைப் பார்க்கிலும் உலக இன்பங்களை ஒருவன் அதிகமாக விரும்புகிறான் இம்மைக்குப் பதிலாக மறுமையைப் பேரம் பேசுகிறான்; நீதி நெறியை விடுத்து இச்சைக்குத் தலை சாய்க்கிறான்—இத்தகைய மனிதனுக்குக் கல்வி புகட்டுவது சரியே அல்ல. அவன் தன் கல்வியறிவை முரண் வழியில்தான் பயன்படுத்துவான்.

முற்கால அறிஞர்கள் அனைவரும் தங்கள் மாணவர்களின் விஷயத்தில் பெரிதும் கவனம் செலுத்தி வந்தார்கள். மாணவன் ஒரு சிறு தவறு செய்தாலும் அவனை வெறுத்துவிடுவார்கள். தீய செயல் புரிந்தால் சபையைவிட்டே துரத்திவிடுவார்கள். ''அறிஞனாயிருந்து குற்றம் புரியாதவாறு எங்களைக் காத்தருள்வாயாக!'' என்று பிரார்த்தித்தார்கள்—'' மூடனாயிருந்து...'' என்று பிரார்த்திக்கவில்லை.

அஹ்மத் பின் ஹன்பல் (ரஹ்) அவர்களிடம் ஒரு மாணவர் கல்வி பயின்று வந்தார். ஒரு நாள் மாணவரை அஹ்மத் அவர்கள் வெறுத்தார்கள்; உரையாடுவதை நிறுத்திக் கொண்டார்கள். மாணவர் வருந்தினார்; ஆசிரியரிடம் வினவினார்.

அஹ்மத் அவர்கள் விடையளித்தார்கள்: ''நான் கேள்விப்பட்டேன் உமது வீட்டுச் சுவர்களுள் ஒன்றைத் தெரு மண்ணின் உதவியால் எழுப்பியிருக்கிறீர் என்று. இதனால், தெருவின் ஒரு பகுதி பள்ளமாகி அங்கு வசிக்கும் முஸ்லிம்களுக்குத் தொல்லை கொடுக்கிறது. இது சரியல்ல. இப்படி நடந்து கொள்ளும் உமக்குக் கல்வி போதிப்பது நியாயமாகுமா?''

முற்காலப் பேரறிஞர்கள் மாணவர்களின் குணங்களைப் பெரிதும் ஆராய்ந்தார்கள் என்பதற்கு இஃது ஓர் எடுத்துக்காட்டு

ஆகவே..., நல்லெண்ணம் கொள்வதால் மட்டும் தீய செயல்கள் நற்செயல்களாகிவிட முடியாது. என்றாலும், நல்லெண்ணம் கொள்ளாத காரணத்தால் நற்செயல்கள் தீய செயல்களாக முடியும்.

இப்போது இரண்டாவது பிரிவை ஆராய்வோம். இதில் இறை வழிபாடுகள், நற்செயல்கள் இடம் பெறுகின்றன. இவை எதிர்பார்த்த பயனைக் கொடுப்பதற்கும் இரட்டிப்புப் பயன் உருவாவதற்கும் நல்லெண்ணம் அவசியமாகும். நற்காரியம் செய்பவன் அதனை இறைவனுக்காகவே செய்வதாக நல்லெண்ணம் கொள்ள வேண்டும். முகஸ்துதியை மனத்தில் கொண்டு ஒருவன் நற்செயல் புரிந்தால் அது தீச்செயலாக மாறிவிடும். ஒரே செயலில் பல்வேறு நல்லெண்ணங்களைக் குறிக்கோள்களாக வைக்கலாம். இதனால், அந்தச் செய்யலின் பயன்கள் விரிவுபடுகின்றன. செயல் ஒன்றுதான் என்றாலும், அதில் ஒன்றுக்கு மேற்பட்ட குறிக்கோள்கள் இருக்கலாம். ஒவ்வொரு குறிக்கோளுக்கும் ஒவ்வொரு நன்மையுண்டு. அந்த ஒவ்வொரு நன்மையும் பத்து மடங்காகப் பெருகுவதும் சாத்தியமே. ஏனென்றால், நல்லெண்ணம் என்பதே நன்மையான காரியம்தான்.

ஒரு மனிதன் தன் இருப்பிடத்தைப் பள்ளியில் வைத்துக் கொள்கிறான். இது நன்மையான ஒரு காரியமாகும். என்றாலும், இதில் பலவேறு குறிக்கோள்கள்–நல்லெண்ணங்கள் இருக்க முடியும். அவற்றின் உதவியால் அவன் உயர்ந்து சிறப்படைய முடியும். அவன் வல்லவனின் இல்லத்தில் இருக்கிறான். வல்லவனின் இல்லத்திலிருப்பவன் வல்லவனைச் சந்தித்தவனுக்கு நிகரானவன். இந்தப் படித்தரத்தை அவன் குறிக்கோளாக்கிக் கொள்கிறான். ''பள்ளியில் இருப்பவன் இறைவனைச் சந்தித்துவிட்டான்.'' என்று திரு நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். தன்னைச் சந்திப்போரை இறைவன் கண்ணியப்படுத்தத் தவறமாட்டான். இது முதற் குறிக்கோள். பல குறிக்கோள்களில் இதுவும் ஒன்று.

இரண்டாவதாக அவன் ஒரு தொழுகையை முடித்ததும் மறு தொழுகையை எதிர்பார்த்துக் காத்திருக்கலாம். ''தொழுகையை எதிர்பார்த்தவண்ணம் இருங்கள்'' என்று இறைவன் கூறுகிறான்.



மூன்றாவதாக, கண், காது, அவயவங்கள் முதலியவற்றைத் தீயவற்றில் பிரயோகமாகாதபடி அவன் தடுக்கலாம். பள்ளியில் இருப்பது இதற்கு ஒரு வழியாகும். ''என் சமூகத்தவருள் சிறந்தவர்கள் பள்ளியில் வாசம் செய்கிறார்கள்'' என்று அண்ணலவர்கள் கூறுகிறார்கள்.

நான்காவதாக, முயற்சி முழுவதையும் இறைவழியில் செலுத்துவதற்கு வாய்ப்புக் கிடைக்கிறது. மறுமை குறித்து ஆழ்ந்து சிந்திப்பதற்கும் வசதி ஏற்படுகிறது.

ஐந்தாவதாக, இறைவனின் திருநாமத்தைக் கூறுவதற்கும் அதனைக் கேட்பதற்கும் அது குறித்துச் சிந்திப்பதற்கும் சரியான சந்தர்ப்பம் உருவாகிறது. ''பள்ளியில் இருப்பவர்கள் இறைவனைத் துதிக்கட்டும். அவர்கள் இறைவழியில் போர் புரிந்தவர்களுக்கு நிகரானவர்கள்'' என்பது திருநபி (ஸல்)க் கருத்தாகும்.

ஆறாவதாக, பாமர மக்களுக்கு மார்க்கத்தைப் போதிப்பதற்கும் அவர்களை நல்வழியில் இலயிக்கச் செய்வதற்கும் சந்தர்ப்பம் வாய்க்கிறது. தொழக் கூடியவர்களுள் பலர் தொழுகையிலேயே தவறு செய்யலாம். செய்யத் தகாதவற்றை அவர்கள் அறியாமையின் காரணமாகச் செய்து வரலாம். இவர்களைத் திருத்துவது அருமையான காரியம். அவர்களின் நன்மையில் திருத்துபவனும் பங்கு கொள்ளலாம். இதனால், அவனது நற்செயல்கள் விரிவுபட முடியும்.

ஏழாவதாக, இறையருள் பெற்ற நல்லடியார்களை நண்பர்களாகப் பெற முடியும். இது மறுமை வாழ்க்கைக்குப் பயன் படும் செல்வமாகும். இறையருள் பெற்ற பெருந்தகைகளும் இறையன்பு கொண்ட உத்தமர்களும் பள்ளிக்கு அவசியம் வருவார்கள்.

எட்டவதாக, பள்ளியில் இருக்கும்போது தீச்செயல் புரிவதற்குரிய துணிச்சல் அறுந்துபோய்விடும். இறைவனின் இல்லத்தில் இருந்துகொண்டு அவனுக்கு மாற்றம் செய்ய முடியாது. பள்ளியில் தீமை புரிவது பள்ளியின் கண்ணியத்தைப் பாழ்படுத்துவதாகும்.

ஹஸன் (ரலி) அவர்கள் கூறினார்கள்; இறையருள் பெற்ற நண்பரைப் பெறுவது, இறைவனின் அன்பை அடைவது, பயன் தரும் அறிவை உண்டாக்கிக் கொள்வது, நல்வழிக்குத் துணை பெற்றவற்றை உணர்வது, தீமையைத் தடுக்கும் மனப்பக்குவத்தைப் பெறுவது, இறையச்சம் ஏற்படுவது, தீயவற்றில் பிரவேசிக்கும் போது இயற்கையின் அடிப்படையில் வெட்கம் தோன்றுவது– இவை ஏழும் மகத்தான ஏழு செல்வங்கள். பள்ளியில் இருப்பவர்களுக்கு இவற்றுள் ஒன்று அவசியம் கிடைக்கும்.

எனவே, ஒரு செயலுக்குப் பல குறிக்கோள்கள் இருப்பது சாத்தியமே. இப்படியே எல்லாவற்றையும் நீ பார்த்துக் கொள்ள வேண்டும்.

எந்த நற்காரியத்திலும் ஒன்றுக்கு மேற்பட்ட நல்லெண்ணங்களை உருவாக்க முடியும். என்றாலும், ஒரு மனிதன் எந்த அளவுக்கு நன்மையில் அக்கறை காட்டுகிறானோ அந்த அளவுக்குதான். அவனது குறிக்கோள்கள்—— நல்லெண்ணங்கள் அதிகரிக்க முடியும்.

இப்போது நாம் மூன்றாவது பிரிவை பார்க்க வேண்டும். செய்வதற்கும் விடுவதற்கும் அனுமதியுள்ள காரியங்கள் அனைத்தும் இந்தப் பிரிவில் இடம்பெறுகின்றன. இத்தகைய செயல்களில் நல்லெண்ணம் கொள்ளலாம். மேலே குறிப்பிட்டதுபோல் ஒன்றுக்கு மேற்பட்ட நல்லெண்ணங்களையும் உருவாக்கிக் கொள்ளலாம். இத்தகைய காரியங்கள் நல்லெண்ணத்தின்–நல்லெண்ணங்களின் காரணமாகத் தனிச் சிறப்படைய முடியும். இறையண்மையைப் பெறுவதற்கும் இறைவனிடம் உயர் பதவியை அடைவதற்கும் இவை உதவி புரியக்கூடும். நல்லெண்ணம் கொள்ளாமல் இத்தகைய செயல்களைச் செய்வது சரியல்ல. மிருகங்களைப் போன்று நன்னோக்கம் கொள்ளாமல் செயலாற்றக் கூடாது.

சிறு சிறு விஷயத்தையும் மனிதன் ஊன்றிக் கவனித்துச் செயலாற்ற வேண்டும். எதையும் அவன் அலட்சியப் படுத்தக் கூடாது. ஏனெனில், அது குறித்து அவன் இறைவனிடம் பதில் சொல்லியாக வேண்டும். இதை அவன் ஏன் செய்தான், எந்த எண்ணத்தோடு செய்தான் என்பனபோன்ற வினாக்களுக்கு அவன் பொறுப்பாளியாக வேண்டி வரும். இவை அனுமதியுள்ள செயல்கள். இவற்றை விரும்பினால் செய்யலாம். இல்லையேல், விட்டுவிடலாம்–தவறில்லை. என்றாலும், இவை குறித்தும் நிச்சயமாக விசாரணை உண்டு. இதனால் தான் திரு நபி (ஸல்) அவர்கள், ''ஆகாத செயலுக்குத் தண்டனையும் அனுமதியுள்ள செயலுக்கு விசாரணையும் உண்டு'' எனக் கூறினார்கள்.



மீண்டும் கூறினார்கள்: ''மறுமையில் மானிடன் ஒவ்வொரு செயல் குறித்தும் விசாரணை செய்யப்படுவான். அவன் எதற்காகக் கண்களுக்கு 'சுருமா' இட்டுக் கொண்டான். ஏன் அவன் தன் விரலால் மண்ணைக் கிளறினான், எந்த எண்ணத்தோடு அவன் தன் சகோதரனின் துணியைப் பற்றி இழுத்தான் என்றெல்லாம் அவன் விசாரணை செய்யப்படுவான்''.

''இறைவனுக்காக நறுமணம் பூசிக்கொண்டவன் மறுமையில் கஸ்தூரி மணம் கமழத் தோன்றுவான். இதர நோக்கங்களுக்காக நறுமணம் பூசிக்கொண்டவன் பிணத்தின் முடை நாற்றத்தோடு வெளிப்படுவான்'' என்றும் கூறியுள்ளார்கள். நறுமணம் பூசிக்கொள்வது மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட செயல். எனினும், நல்லெண்ணத்தோடு தான் இச் செயலில் இறங்க வேண்டும் என்பதற்கு மேற்குறிப்பிட்ட திருநபி(ஸல்)க் கருத்து ஆதாரமாகும்.

''மகிழ்ச்சியையும் இன்பத்தையும் கருதியே மனிதன் நறுமணம் பூசிக்கொள்கிறான். இது உலக இன்பங்களில் பட்டது என்பதில் சந்தேகமில்லை. அப்படியிருக்க இது விஷயத்தில் நல்லெண்ணத்தைப் புகுத்துவது எப்படிச் சாத்தியமாகும்?'' என்று நீ வினவலாம்.

உண்மை அப்படியில்லை. இதில் நல்லெண்ணத்தையும் கலக்கலாம். தீய எண்ணத்தையும் புகுத்தலாம். ஒருவன்; வெள்ளிக்கிழமையிலும் மற்றத்தினங்களிலும் நறுமணம்

பூசிக்கொள்வதாக வைத்துக்கொள்வோம். அதில் பல தீய குறிக்கோள்கள் இருக்க முடியும். உலக இன்பத்தைச் சுவைத்து அனுபவிப்பதாக அவன் கருதுகிறான். மற்றவர்கள் தன்னைப் பார்த்துப் பொறாமைப்பட வேண்டும் என்பதற்காக அவன் அப்படி நடக்கிறான். அல்லது மக்களின் மத்தியில் தனித்து விளங்க வேண்டும் என்று எண்ணுகிறான். அப்படியும் இல்லாவிட்டால் பெண்களின் உள்ளத்தைக் கவர வேண்டும் என்று எண்ணுகிறான்– இப்படித் தீய எண்ணங்கள் எத்தனையோ உருவாக முடியும். அவற்றை வரம்பிட்டுக் கூற முடியாது. இத்தகைய எண்ணத்தோடு நறுமணம் பூசிக் கொள்வது தீய செயலாகும், குற்றமாகும். எனவே, தீய நோக்கம் கொண்ட நறுமணப் பூச்சு மறுமையில் பிணத்தின் நாற்றமாக மாறுகிறது. இந்த மனிதன் உலக இன்பத்தைச் சுவைத்து அனுபவிப்பதாகக் கருதுகிறானல்லவா இதில் தவறு ஒன்றும் கிடையாது. மற்ற எண்ணங்களால் தான் தவறு உருவாகிறது. இன்பங்களைச் சுவைத்து அனுபவிப்பது தவறல்ல. மார்க்கத்தில் அதற்குத் தடையுமில்லை. ஆனால், மறுமையில் அதற்கு விசாரணை உண்டு என்பதையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். விசாரணை செய்யப்படுபவன் விசாரணைக்குப் பிறகு தண்டனை அளிக்கப்படலாம் என்றாலும் மார்க்த்தில் அனுமதிக்கப்பட்ட செயலைச் செய்வதால் மறுமையில் தண்டனை கிடையாது. விசாரணையோடு முடிந்தது. ஆனால், ஒரு மனிதன் உலக இன்பத்தில் மூழ்கும்போது மறுமைப் பேறு அவனுக்குப் படிப்படியாகக் குறைந்துகொண்டே வருகிறது. எனவே, நீ அழியக் கூடியவற்றை விரும்பி அக்கறை கொள்ளாதே, ஏனெனில், அழியாத இன்பம் உனக்குக் கிடைக்காமலும் போகலாம்.

தவிர, மேற்குறிப்பிட்ட மனிதன் நல்லெண்ணம் கொள்வதற்கும் வழியுண்டு. அண்ணலவர்களின் நடை முறையைப் பின்பற்றுவதாக அவன் நல்லெண்ணம் கொள்ளலாம். ஏனென்றால், அண்ணலவர்கள் வாசனைப் பொருளைப் பெரிதும் விரும்பி உபயோகித்தார்கள். அத்துடன் நறுமணத்தின் உதவியால்



பள்ளிக்குக் கண்ணியமளிப்பதாகவும் அவன் எண்ணலாம். பள்ளிக்குப் பலர் வருவார்கள். அவர்கள் அவன் பூசியிருக்கும் நறுமணத்தை அனுபவித்து இன்பமடைய வேண்டும் என்ற உயர் எண்ணத்தையும் அவன் மனத்தில் கொள்ள முடியும். தன்னிடமுள்ள துர்நாற்றத்தை மறைத்துக் கொள்ளும் எண்ணத்துடனும் அவன் செயலாற்றலாம். இதனால், அவனை யாரும் 'துர்நாற்றமுள்ளவன்' என்று குறிப்பிட்டுப் புறம்பேச முடியாமற் போகிறது. புறம் பேசுபவர்கள் குற்றவாளிகளாவார்கள். அவர்களைப் புறம் பேச விடாமல் செய்வதற்கு நறுமணம் உதவி புரிகிறது. ஏனென்றால், புறம் பேசுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்துவதும் குற்றமே.

''முரண்வழியினரை நீங்கள் திட்டாதீர்கள். அறியாமையினால், பகைமையினால் அவர்கள் அல்லாஹ்வைத் திட்டுவார்கள்'' என்று திருமறை உபதேசம் புரிகிறது. இறைவனைத் திட்டுவது குற்றம். அதேபோன்று அதற்கு வாய்ப்பு ஏற்படுத்துவதும் குற்றமேயாகும் என்பதற்கு இது ஆதாரமாகும்.

''வாசனைப் பொருளை உபயோகிப்பவனின் அறிவு விரிவுபடுகிறது'' என்று இமாம் ஷாபியீ (ரஹ்) கூறினார்கள்.

ஆகவே, நறுமணம் பூசிக்கொள்வது சாதாரணச் செயல் என்றாலும், அதில் அருமையான பல குறிக்கோள்களை உண்டாக்கிக் கொள்ள முடியும். மறுமையின் இன்பத்தில் ஆர்வம் கொண்டவர்களுக்கு இத்தகைய நல்லெண்ணங்கள்- நற்குறிக்கோள்கள் அவசியம் ஏற்பட்டுவிடும். உலக இன்பத்தில் மனத்தைப் பறிகொடுத்தவர்களால் இப்படி நல்லெண்ணம் கொள்ளவே முடியாது. இத்தகையவர்களை உபதேசத்தால் திருத்துவதும் சாத்தியமில்லை. எந்த உபதேசமும் அவர்களின் உள்ளத்தில் எத்தகைய மாற்றத்தையும் ஏற்படுத்தாது. மனத்தின் குரலுக்கு- இச்சையின் கட்டளைக்கு அவர்கள் அடிபணிவார்கள். எந்த விதத்தில் பார்த்தாலும் அந்தக் குரலுக்கு 'நல்லெண்ணம்' என்று பெயரிட முடியாது.

மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட செயல்கள் எண்ணற்றவை. அவற்றில் உருவாக்கப்படும் நல்லெண்ணங்கள் கணக்கற்றவை. மேலே குறிப்பிட்ட உதாரணத்தை வைத்துக் கொண்டு மற்றவற்றை நீ ஆராய்ந்து அறியலாம்.

''நான் சாப்பிடும்போது, குடிக்கும்போது, உறங்கும்போது, மலஜல உபாதையின்போது-இப்படி எல்லா நேரங்களிலும் என் உள்ளத்தில் நல்லெண்ணம் இருக்க வேண்டும். இதை நான் பெரிதும் விரும்புகிறேன்'' என்று கூறினார் ஓர் அறிஞர். ஒரு மனிதன் இறையண்மையைப் பெறுவதற்கு நல்லெண்ணம் பெரிதும் துணை செய்கிறது. உடலின் ஆரோக்கியத்தைக் காக்கும் ஒவ்வொரு செயலும் மார்க்கத்தில் வரவேற்கப்படுகிறது. ஆரோக்கியத்திற்கும் மன அமைதிக்கும் இடையில் நெருக்கமான பிணைப்பு உண்டு. ஒருவன் உணவருந்துகிறான். 'உணவால் என் ஆரோக்கியம் வளர்கிறது. இதனால், நான் இறை வணக்கத்தில் உற்சாகத்துடன் ஈடுபட முடிகிறது' என்று அவன் நல்லெண்ணம் கொள்கிறான்.

சேர்க்கையில் ஒருவன் இன்பம் துய்க்கிறான். 'இச்செயலால் என் அபத்தைக் காத்துக்கொள்கிறேன், என் மனைவியை மகிழச் செய்கிறேன்' என்று அவன் எண்ணுகிறான். மீண்டும் எண்ணுகிறான்: 'இச் சேர்க்கையால் ஒரு குழந்தை பிறக்க வாய்ப்பு உண்டு. அப்படிப் பிறந்தால் திரு நபி (ஸல்) அவர்களின் சமூகத்தவரின் எண்ணிக்கை அதிகரிக்கும்; அது அண்ணலவர்களுக்கு மகிழ்வளிக்கும்; அந்தக் குழந்தை எனக்குப் பிறகு இறைவழியில் நடக்கும்-என் பிரதிநிதி என்ற முறையில்.'

உணவையும் சேர்க்கையையும் மனம் பெரிதும் விரும்புகிறது. இவை இரண்டிலும் நன்னோக்கத்தைப் புகுத்துவது சாத்தியமே. மறுமையின்பத்தில் இலயிப்பவர்களுக்கு மட்டுமே அது இலகுவான காரியம். அவர்கள் தவறிப்போன உடைமை குறித்துக் கவலைப்பட மாட்டார்கள். 'அது இறைவழியில் தருமம் செய்யப்பட்டுவிட்டது' என்று எண்ணிக்கொள்வார்கள். தங்களைப் பற்றி யாரோ அவதூறு பேசியதாகக் கேள்விப்பட்டால் அதற்காக



அவர்கள் வருந்த மாட்டார்கள். 'என் தீமைகளை அவன் வாரிக் கட்டிக்கொள்கிறான். அவன் செய்த நன்மைகள் எனக்கு வந்து சேரப்போகின்றன' என்று அமைதியோடிருப்பார்கள். இப்படியெல்லாம் வாயினால் சொல்ல வேண்டுவதில்லை. மனத்தால் எண்ணிக் கொண்டால் போதுமானது. அவதூறு பேசியவனைக் கண்டிக்கும் எண்ணத்துடன் அவர்கள் வாயையும் திறக்க மாட்டார்கள்; மௌனமாக இருந்து விடுவார்கள்.

அண்ணலவர்கள் விளக்கினார்கள்: மறுமையில் மனிதன் விசாரணை செய்யப்படுவான். தவறான குறிக்கோளுடன் அவன் செய்த நற்காரியங்கள் பயனற்றுப் போய்விடும். அவன் நரகத்திற்குத் தகுதியானவன் எனத் தீர்மானிக்கப்படும். பின்னர், அவன் செய்ததாகச் சில நற்காரியங்கள் எடுத்துக் காட்டப்படும். அவற்றினால் அவன் சுவனத்திற்கு அருகதை பெறுவான்.

''இந்த நற்காரியங்களை நான் செய்யவில்லையே!'' என்று அவன் ஆச்சரியத்தோடு கேட்பான்.

அவனுக்கு விடை கிடைக்கும். உண்மைதான். ஆனால், உன்னைப் பற்றிப் புறம் பேசியவர்கள், உன்னைத் துன்புறுத்தியவர்கள், உனக்குத் தீங்கிழைத்தவர்கள் முதலியோர் செய்த நன்மைகள் தாம் இவை.

மீண்டும் அண்ணலவர்கள் விளக்கம் தருகிறார்கள்; ஒரு மனிதனின் நற்செயல்கள் மலைபோன்று குவிந்து கிடக்கும். விசாரணை முடிந்ததும் அவன் சுவனத்தில் பிரவேசிக்க வேண்டியதுதான். இந்தச் சமயத்தில் அவன் இன்னானுக்குத் தீங்கிழைத்தான், இன்னானைத் திட்டினான், இன்னானை அடித்தான் என்பனபோன்ற குற்றச் சாட்டுக்கள் எழுப்பப்படும். அவன் நன்மைகள் படிப்படியாகக் குறைந்து வரும். கடைசியில் அவனுக்கென்று ஒரு நன்மைகூட மிஞ்சியிருக்காது.

''உன் நன்மைகள் எல்லாம் தீர்ந்து போய்விட்டன. ஆனால், உன்னால் பாதிக்கப்பட்டவர்கள் இன்னும் பலர் இருக்கிறார்கள்.

அவர்களெல்லாம் உன்னிடம் நன்மையைக் கேட்கிறார்கள்-நீ அவர்களுக்குச் செய்த தீங்குக்குப் பிரதியாக'' என்று வானவர்கள் கூறுவார்கள்.

''அவனை நரகத்திற்கு இழுத்துச் செல்லுங்கள்'' என்று இறைவன் கட்டளையிடுவான்.

எச்சரிக்கிறேன். உன் செயலில் எதையும் நீ அசட்டை செய்துவிடாதே. மீண்டும் எச்சரிக்கிறேன். ஒரு சிறு செயலும் உன்னை இறைவனின் சபையில் குற்றவாளியாக்கிவிடக் கூடும். விசாரணையின்போது நீ விடையிறுக்க முடியாமல் திணற நேரிடும். ஏனெனில் உன் செயல்கள் அனைத்தையும் இறைவன் அறிந்திருக் கிறான். உன் வாயிலிருந்து, வெளியேறிய ஒவ்வொரு சொல்லை யும் அவன் தெரிந்திருக்கிறான். உன் செயலுக்கும் சொல்லுக்கும் அவனே போதிய சான்று. வேறு ஆதாரம் தேவையில்லை.

ஒரு சமயம் சுப்யான் ஸௌரீ அவர்கள் தங்கள் ஆடையைப் புறம் மாற்றி அணிந்துகொண்டிருந்தார்கள். நண்பர் அதைச் சுட்டிக் காட்டினார். ஸௌரீ அவர்கள் ஒரு கணம் புரண்டிருந்த துணியைச் சீர்படுத்த முனைந்தார்கள். மறுகணம் அந்த முயற்சியிலிருந்து விலகிவிட்டார்கள். நண்பர் ஆச்சரியப்பட்டார், காரணம் கேட்டார்.

பதில் வந்தது: ''இறைவன் ஒருவனுக்காகவே நான் ஆடையணிகிறேன். வேறு யாருக்காகவும் அதைத் திருத்தியமைக்க நான் விரும்பவில்லை.''

ஹஸன் (ரலி) கூறினார்கள்: ''மறுமையில் ஒரு மனிதன் மற்றொரு மனிதனைச் சந்திக்கு இழுப்பான். 'நமக்கிடையிலுள்ள சச்சரவு களுக்கு இறைவன் நீதிபதியாயிருக்கிறான்' என்பான்.''

'சச்சரவுகளா! உன்னை எனக்குத் தெரியவே தெரியாதே!' என்பான் மற்றவன்.

'இருக்கலாம். ஆனால், என் வீட்டுச் சுவரிலிருந்து ஒரு கல்லை நீ பெயர்த்து எடுத்துக் கொண்டாய். என் துணியிலிருந்து



ஒரு நூலை நீ உருவி எடுத்துக் கொண்டாய்' என்பான் முதல்மனிதன்.'

இறையச்சம் கொண்டவர்களுக்கு இதுபோன்ற செய்திகளால் மனவெழுச்சி ஏற்படுவது நிச்சயம். நீ மமதைகொண்டவனாக இல்லாவிடில், விதி, விலக்குகளைக் கவனித்து நடக்கும் உறுதியுள்ளவனாக இருந்தால் இப்போதே உன் உள்ளத்தை விசாரணை செய்து பார். நீ கடுமையான முறையில் விசாரணை செய்யப்படுவதற்கு முன் நீயே உன்னைக் கடுமையாக விசாரணை செய்துகொள். செயலாற்றுவதற்கு முன் எதையும் சந்தித்துப் பார். சிந்திக்காமல் எதையும் செய்துவிடாதே. சிந்திப்பது முதல் வேலை. நீ ஆழமாகச் சிந்திக்க வேண்டும். ஒரு செயலை நீ எதற்காகச் செய்கிறாய்? அதில் உன் குறிக்கோள் என்ன? அந்தச் செயலால் இம்மையில் உனக்குக் கிடைக்கும் பேறு என்ன? உலகில் கிடைக்கும் அந்தப் பாக்கியத்தினால் மறுமையில் எந்தப் பாக்கியத்தை நீ இழக்க நேரிடுகிறது? இம்மையைவிட மறுமை ஏன் சிறப்படைகிறது? இவ்வாறெல்லாம் நீ வினா எழுப்பிச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

எல்லாவற்றையும்விட மார்க்கமே சிறந்தது என்ற உண்மையை நீ அறிந்துகொண்டதும் உன் மனத்தை இன்னும் உறுதிப்படுத்திக் கொள்ளலாம். தீய எண்ணங்கள் உருவானால் அதைத் தடுக்க முயல். தீய செயலில் ஈடுபடாதிருப்பதற்கு வேண்டிய மனப்பலத்தை உற்பத்தியாக்கிக்கொள். உன் செயல் களைப் பலர் பார்த்துப் பாராட்ட வேண்டும் என்றோ, நீ மக்களின் மத்தியில் 'நல்லவன்' எனப் பெயர் பெற வேண்டும் என்றோ எண்ணியும் பார்க்காதே. இந்தக் கட்டத்தில் நீ ஏமாந்துவிடக் கூடாது. இதுபோன்ற சந்தர்ப்பங்களில் தாம் பலர் ஏமாந்து போயிருக்கிறார்கள். ஒவ்வொன்றையும் ஊன்றிக் கவனித்துச் செயலாற்ற வேண்டும். இவ்வாறு நீ நடந்தால் உன் உள்ளத்தில் மமதை, மதி மயக்கம் எதுவுமே இல்லாமற் போய்விடும்.

ஸகரிய்யா (அலை) நபியவர்கள் ஒரு சுவரை எழுப்பிக் கொண்டிருந்தார்கள். சற்று நேரத்தில் அவர்களுக்குச் சாப்பாடு வந்தது. அவர்கள் கைத்தொழில் செய்தே சாப்பிட்டு வந்தார்கள் என்பதை இங்குக் குறிப்பிடுவது அவசியமாகும்:

அவர்களைப் பார்ப்பதற்காகச் சிலர் அங்கு வந்தனர். நபியவர்கள் உணவருந்திக் கொண்டிருந்தார்கள். சாப்பிடவருமாறு வந்தவர்களை அவர்கள் அழைக்கவில்லை. சாப்பாட்டு வேலை முடிந்தது. வந்தவர்கள் பெரிதும் திகைப்படைந்து உட்கார்ந்திருந் தார்கள். ஸகரிய்யா (அலை) நபியவர்களின் பற்றற்ற வாழ்க்கையைப் பற்றியும் தயாள சிந்தையைப் பற்றியும் அவர்கள் கேள்விப்பட்டிருந்தார்கள். நபியவர்கள் தங்களைச் சாப்பிட அழைக்கத் தவறியது குறித்து ஒரே குழப்பம்.

நபியவர்கள் ஊகித்துக் கொண்டார்கள். பதில் தெளிவாக வந்தது. 'நான் கூலி வேலை செய்கிறேன். நான் புதுப்பலம் பெற்று உற்சாகத்துடன் வேலை செய்ய வேண்டும் என்பதற்காக எனக்கு வேலை கொடுத்தவர்கள் எனக்குச் சாப்பாடு அனுப்பினார்கள். அதை என்னோடு நீங்களும் சேர்ந்து புசித்தால் அது உங்களுக்கும் போதாது எனக்கும் போதாது. அத்துடன் உணவு போதாத காரணத்தால் என்னால் மேற்கொண்டு வேலை செய்ய முடியாமலும் போகலாம்.''

மனக்கண் திறந்தவர்கள் இப்படிதான் ஒவ்வொரு விஷயத்திலும் அந்தரங்கத்தை ஆழ்ந்து பார்ப்பார்கள். ஸகரிய்யா (அலை) நபியவர்கள் தம் உணவைப் பங்கிட்டுவிட்டால் அதனால் பலவீனம் ஏற்படலாம். அதனால் அவர்கள் தங்கள் கடமையில் குறை வைக்க நேரிடும். கூலி பெறுபவர்கள் தகுந்தபடி வேலை செய்வது கடமையல்லவா? ஆனால், விருந்தாளிகளை உணவுண்ண அழைப்பது கடமையல்ல. எனவே அழைக் காதிருப்பதும் குற்றமல்ல. கடமையான ஒரு செயலும் கடமையல்லாத மற்றெரு செயலும் எதிர்ப்படும்போது கடமையைத்தான் மேற்கொள்ள வேண்டும்.



ஒரு பெரியார் கூறினார் ''ஒரு சமயம் சுப்யான் அவர்களிடம் சென்றேன். அப்போது அவர்கள் உணவருந்திக் கொண்டிருந்தார்கள். சாப்பாட்டை முடித்துத் தமது விரல்களைச்சூப்பி முடிக்கும்வரை அவர்கள் என்னிடம் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. பின்னர் 'இந்த உணவை நான் கடனாக வாங்கியிராவிடில் நீரும் என்னோடு சாப்பிடுவதை நான் விரும்பியிருப்பேன்' என்றார்கள்.

மீண்டும் சுப்யான் கூறினார்கள்: ''வாயளவில் ஒருவன் உணவுண்ண அழைக்கும்போது அந்த அழைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டால் அவன்மீது இரண்டு குற்றங்கள் சுமத்தப்படுகின்றன. அழைக்கப்பட்டவன் அழைப்புக்கு இணங்காவிட்டால் அழைத்தவன்மீது ஒரே குற்றம்தான் உண்டு.''

மனத்தில் ஒன்றை வைத்துக்கொண்டு வாயளவில் வேறொன்றைக் கூறுவது குற்றம். வாயளவில் மனமில்லாமல் சாப்பாட்டுக்கு அழைப்பு விடுக்கப்படும்போது இந்தக் குற்றம் உருவாகிறது. அழைக்கப்பட்டவன் அழைத்தவனின் உண்மையான மனநிலையை அறிந்தால் அவன் கண்டிப்பாய் உணவருந்த மாட்டான்- அதை வெறுத்துவிடுவான். ஒரு மனிதன் வெறுக்கும் ஒன்றை அவனுக்கு அளிக்க முற்படுவது இரண்டாவது குற்றம். மனமில்லாமல் விடுக்கப்படும் அழைப்புக்கு ஒருவன் இணங்கும்போது இந்தக் குற்றச் சாட்டுச் சுமத்தப்படுகிறது. வாயளவில், உபசாரமாக அழைப்பு விடுபவன்மீது.

மேற்குறிப்பிட்டபடியே மனிதன் தன் செயல்கள் எல்லாவற்றிலும் நல்லெண்ணத்தை-அல்லது நல்லெண்ணங்களை உண்டாக்க வேண்டும். நல்லெண்ணம் உருப் பெற வில்லையாயின் செயலை நிறுத்தி வைப்பதே நல்லது-ஏனெனில், நல்லெண்ணம் எல்லா நேரங்களிலும் உண்டாகிவிடாது. அது உண்டாவதும் உண்டாகாதிருப்பதும் மனிதனின் சக்திக்கு அப்பாற்பட்டவை. நினைத்த சமயத்தில் அதனை உண்டாக்குவது என்பது சாத்தியமில்லாத ஒன்று.

# 5. சக்திக்கு அப்பாற்பட்டது

நீ தெளிவுறத் தெரிந்துகொள்ள வேண்டும். ''செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொறுத்தவை'' என்ற திரு நபி (ஸல்) அவர்களின் கருத்தை ஆதாரமாக வைத்து, செயலாற்றுவதற்கு முன் நல்லெண்ணம் கொள்ள வேண்டும் என்றும், ஒன்றுக்கு மேற்பட்ட நல்லெண்ணங்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்றும் மேலே கூறினோம்.

இதைப் பார்க்கும் பாமரன் தப்பர்த்தம் செய்துகொள்கிறான்; தவறிப் போகிறான். உணவருந்தும்போது அவன், ''இறைவனுக்காக உண்கிறேன்'' என்று சொல்லிக் கொள்கிறான். போதிக்கும்போது, ''இறைவனுக்காகவே நான் போதிக்கிறேன்'' என்கிறான். வியாபாரம் செய்யும்போது, ''வல்லவனுக்காகவே வர்த்தகம் செய்கிறேன்'' என்று வாயால் எண்ணிக்கொண்டிருக்கிறான். இல்லை-அவன் எண்ணுவது தவறு. இது நல்லெண்ணமல்ல: மனத்தின் பேச்சு-நாவின் உரையாடல்-சிந்தனையின் சம்பாஷணை. நல்லெண்ணம் என்பது தனிப்பட்ட ஒன்று. ஒரு காரியத்தைச் செய்வதால் குறிப்பிட்ட



பயனை அடைய முடியும் என்று ஒருவன் நம்பும்போது அவன் உள்ளத்தில் பொங்கி வரும் மன எழுச்சியையே நாம் நல்லெண்ணம் என்று குறிப்பிடுகிறோம். ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும் என்று நினைப்பதால் மட்டும் இந்த எழுச்சி ஏற்பட்டுவிடாது.

பசியற்ற ஒருவன் கூறுகிறான்: ''நான் உணவுண்ண விரும்புகிறேன். உண்ண வேண்டும் என்ற மன எழுச்சி எனக்குண்டு.''. இது உண்மையில் நல்லெண்ணம் அல்ல. இத்தகைய கூற்றுக்கு அந்தப் பெயர் ஒருகாலும் பொருந்தாது.

ஒரு காரியத்தைச் செய்வதற்கு வேண்டிய மன எழுச்சி உண்டாக வேண்டுமானால், அதற்குரிய காரணங்களை உண்டாக்க வேண்டும். ஆனால், சில சமயங்களில் இது சாத்தியமாகலாம். வேறு சில சமயங்களில் அசாத்தியமாகவும் போகலாம். ஒரு காரியத்தைச் செய்வதால் பயன் உண்டு என்ற நம்பிக்கை ஏற்படும்போதுதான் அதைச் செய்ய வேண்டும் என்கிற எழுச்சி மனத்தில் தோன்றுகிறது. எனவே, இன்ன குறிக்கோளை அடைவதற்கு இன்ன செயலைச் செய்யவேண்டும் என்று ஒரு மனிதன் நம்பும்வரை அந்தச் செயலில் அவனுக்கு ஆர்வம் ஏற்படாது. தவிர இப்படி நம்புவது எல்லா நேரங்களிலும் சாத்தியமில்லை. சில வேளைகளில் இந்த நம்பிக்கை உரிய காலத்தில் ஏற்படாமலும் போகலாம். அப்படியே நம்பிக்கை ஏற்பட்டுவிட்டாலும், அதற்கு எதிரான வேறொரு எண்ணம் ஏற்பட்டு அந்த நம்பிக்கையைக் குலைத்துவிடவும் கூடும்.

மனிதன் செயலாற்றுவதற்கு அந்தச் செயலின் பிரதிபலன் பற்றிய உறுதியான நம்பிக்கை அவசியமாகும். இந்த நம்பிக்கை சில கார்ணங்களால் நசுக்கப்படுகிறது. நம்பிக்கை நசுக்கப்படும் போது நல்லெண்ணம் துளிர்ப்பது சாத்தியமேயில்லை.

ஒருவன் திருமணம் செய்துகொள்ள விரும்புகிறான். அவனிடம் இதற்கு நேர்மையான காரணம் ஏதும் கிடையாது. ஒரு குழந்தையைப் பெற்றெடுக்க வேண்டும் என்று அவன் நல்லெண்ணம் கொள்ளவில்லை. அத்தகைய மன எழுச்சியே அவனிடம் கிடையாது என்று வைத்துக்கொள்வோம். அவன் சேர்க்கையில் ஈடுபட்டால், குழந்தை பெறும் எண்ணத்தோடுதான் அவன் செயலாற்றுகிறான் என்று சொல்ல முடியுமா? முடியாது. அவன் அந்த எண்ணத்தோடு ஈடுபடவில்லை. காமத்தைத் தணித்துக் கொள்வதற்காகவே அவன் போகத்தில் ஈடுபடுகிறான். அவனது மன எழுச்சிக்குக் காரணம் காமமே தவிர, குழந்தையல்ல. அவன் குழந்தையை எண்ணிச் செயலாற்றுவது சாத்தியமில்லை. திருநபி (ஸல்) அவர்களின் நடைமுறையைப் பின்பற்றும் எண்ணத்துடன் மணம் முடிப்பது திருமணத்தின் சிறப்பையே உயர்த்தி விடுகிறது என்பதை அவன் நம்பவில்லை. எனவே, திருமணத்தின் போது, ''திருநபி(ஸல்) அவர்களின் நடைமுறையை ஒட்டியே நான் திருமணம் செய்கிறேன்'' என்று அவனால் நல்லெண்ணம் கொள்ள முடியாது. வேண்டுமானால் இதை அவன் வாயளவில் சொல்லிக் கொள்ளலாம். ஆனால், இது எந்த விதத்திலும் நல்லெண்ணத்தைச் சேராது.

அப்படியானால், தூய்மையான நல்லெண்ணத்தை உண்டாக்கிக் கொள்வதுதான் எப்படி?அதற்கு ஒரு வழியுண்டு. மேற்குறிப்பிட்ட மனிதன் முதன் முதலில் தன் மனத்திலுள்ள மத நம்பிக்கையை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும். இஸ்லாமிய சமுதாயம் பெருகுவதைத் திருநபி(ஸல்) அவர்களின் வரவேற்கிறார்கள். சமுதாயத்தை விரிவுபடுத்தும் முயற்சியில் ஈடுபடுபவர்களுக்குக் கணிசமான நற்கூலியுண்டு என்பதை அவன் திடமாக நம்பவேண்டும்; குழந்தையின்மீது வெறுப்பையுண்டாக்கக் கூடிய எண்ணங்கள் அனைத்தையும் அவன் தவிர்க்க வேண்டும். குழந்தையைப் பெற்றெடுப்பதால் துன்பமும் துயரமும் வந்து



சேருகின்றன என்று சிலர் எண்ணுகிறார்கள். இப்படியெல்லாம் அவன் எண்ணக் கூடாது.

இவ்வாறு ஒருவன் நடந்துகொண்டால் குழந்தையைப் பெற்றெடுக்க வேண்டும் என்கின்ற ஆர்வம் அவனுக்கு ஏற்பட்டுவிடும். இந்த ஆர்வம் அவன் சக்தியையும் அவயவங்களையும் தூண்டிவிடும். சக்தியும் அவயவமும் இயங்கும்போது, ''இறைவனுக்காகவே நான் மணம் முடிக்கிறேன்'' என்னும் வார்த்தைகள் அவன் நாவிலிருந்து வெளிவந்துவிடும். அவனுடைய சக்தியின் இயக்கத்தால் அவன் நாவு இயக்கப்படுகிறது. இந்த இடத்தில் அவன் உண்மையிலேயே நல்லெண்ணம் கொண்டவனாகிறான். ஏனெனில், குழந்தையைப் பெற்றெடுக்க வேண்டும் என்ற மன எழுச்சியால்தான் அவன் அப்படிக் கூறுகிறான்.

இது நல்லதொரு வழியாகும். நல்லெண்ணத்தை உண்டாக்கிக் கொள்வதற்கு இது சிறந்த மார்க்கம். இதை விட்டால் வேறு விதத்தில் நல்லெண்ணத்தை உண்டாக்கிக் கொள்வது சாத்தியமில்லை.

நல்லெண்ணம் எல்லா நேரங்களிலும் தோன்றிவிடாது. அது சில சமயங்களில் உருவாகாமலும் போகலாம். நல்லெண்ணம் உருவாகவில்லை என்ற காரணத்தால் முற்கால மேதைகள் எத்தனையோ காரியங்களை விட்டுவிட்டார்கள்.

''இது சம்பந்தமாக எங்கள் மனத்தில் நல்லெண்ணம் உருப்பெறவில்லை'' என்று காரணம் காட்டினார்கள்.

ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்களின் பிரேதத் தொழுகையில்-பிரேதப் பிரார்த்தனையில் இப்னுஸீரீன் அவர்கள் கலந்து கொள்ளவில்லை. ''இது சம்பந்தமாக என் மனத்தில் நல்லெண்ணம் உதயமாகவில்லை.'' என்று இப்னுஸீரீன் விளக்கம் கொடுத்தார்கள்.

தலை முடியைச் சீர்படுத்திக்கொண்டிருந்த அறிஞர் ஒருவர் தம் மனைவியைக் கூப்பிட்டார். ''சீப்புக் கொண்டு வா!''

''கண்ணாடியைக் கொண்டு வரட்டுமா?'' என்று குரல் கேட்டது.

அறிஞர் சற்று நேரம் மௌனம் சாதித்தார். பின்னர், ''சரி, கண்ணாடியைக் கொண்டுவா!'' என்றார்.

அவர் ஏன் சற்று நேரம் மௌனம் சாதித்தார்? இதைப் பற்றி யாரோ அவரிடம் கேட்டார்கள். அவர் தெளிவாய்ப் பதிலளித்தார், ''நான் சீப்புக் கேட்டபோது என் மனதில் ஓர் எண்ணம் இருந்தது. என் மனைவி 'கண்ணாடியைக்கொண்டு வரட்டுமா?' என்று கேட்டபோது என் மனதில் கண்ணாடியை உபயோகிப்பதற்கு வேண்டிய நல்லெண்ணம் உருவாகவில்லை. வல்லநாயன் அந்த நல்லெண்ணத்தை என் மனதில் உருப்பெறச் செய்யும்வரை நான் மௌனம் சாதித்தேன்.''

ஹம்மாத் பின் சுலைமான் இறந்துவிட்டார். 'கூபா'வைச் சேர்ந்த அறிஞருள் ஒருவர் அவர். சுப்யான் ஸௌரீயும் இதே காலத்தில் வாழ்ந்து வந்தார்கள்.

''ஹம்மாதின் பிரேதப் பிரார்த்தனைக்கு நீர் வர வில்லையா?'' என்று ஒரு நண்பர் கேட்டார்.

ஸௌரீ பதிலளித்தார்கள்: ''என் மனத்தில் நல்லெண்ணம் தோன்றியிருந்தால் அந்தக் காரியத்தை நான் செய்திருப்பேன்.''

''இறைவன் என் மனத்தில் நல்லெண்ணத்தை உண்டாக்கினால் தான் நான் எந்தக் காரியத்தையும் செய்வேன்'' என்று மற்றோர் அறிஞர் கூறிக் கொண்டிருந்தார்.

நல்லெண்ணம் இல்லாமல் தாவூஸ் என்பவர் பேசுவது கூடக் கிடையாதாம். அவரைப் பேசுமாறு மக்கள் வேண்டிக் கொள்வார்கள். முதலில் அவர் வாயைத் திறக்கமாட்டார். சற்று



நேரத்திற்குப் பிறகு பேச்சை ஆரம்பிப்பார். இதுபற்றி யாரேனும் கேட்டால் ''நல்லெண்ணம் இல்லாமல் நான் பேசுவதை நீங்கள் வரவேற்கிறீர்களா என்ன? நல்லெண்ணம் ஏற்பட்டால்தான் நான் எதையும் செய்வேன்'' என்று விடையளிப்பார்.

தாஊர் பின் முஹப்பிர் என்பவர் 'பகுத்தறிவு' என்ற பெயரில் ஒரு நூல் எழுதினார். ஒரு நாள் அஹ்மத் பின் ஹன்பல் அவரைக் காண வந்தார். அந்த நூலைப் புரட்டிப் பார்த்தார். ஒரு பக்கம் வாசித்துவிட்டு அதைத் திருப்பிக் கொடுத்துவிட்டார்.

''திருநபி (ஸல்) அவர்கள் சொன்னதாகச் சில குறிப்புகள் காணப்படுக்னறன. ஆனால், அவை உண்மைதான் என்பதற்குரிய ஆதாரம் காட்டப்படவில்லை. அந்தச் செய்திகளை ஒருவர்பின் ஒருவராய்ப் பலர் இன்றுவரை கூறி வந்திருக்கிறார்கள். அவர்களின் பெயர்களெல்லாம் இந்த நூலில் இடம் பெறுகின்றன. அவர்களுள் அநேகர் நம்பத் தகுதியில்லாதவர். அவர்களை நாம் நம்பத் தேவையில்லை. திருநபி (ஸல்) அவர்கள் சொன்னதாகவும் செய்ததாகவும் அவர்கள் குறிப்பிடும் கருத்து பலவீனமானது.''

தாவூத் பதிலளித்தார்: ''அண்ணலவர்களின் சொல்லையும் செயலையும் நாம்நேரடியாக அறியவில்லை. பல அறிஞர் பலர் வாயிலாகவே நாம் அறிகிறோம். அண்ணலவர்களைப் பற்றிய அந்தச் செய்தியை அந்தக் காலம்தொடுத்து இன்று வரை ஒருவர் பின் ஒருவராய்ப் பலர் கூறி வந்திருக்கிறர்கள் என்பதில் சந்தேகமில்லை. அவர்களில் சிலர் நம்பத் தகுதியில்லாதவர்களாக வும் இருக்கலாம்- இதை நான் மறுக்கவில்லை. ஆனால், கூறுபவரைப் பற்றிய ஆராய்ச்சியில் நான் இறங்கவில்லை. கூறப்பட்ட செய்தியையே நாம் பார்க்க வேண்டும். இதே எண்ணத்தோடுதான் இந்த நூலை நான் எழுதினேன்.''

''அந்த நூலைக் கொடுங்கள். நீங்கள் எந்த எண்ணத்தை மனத்தில் கொண்டு எழுதினீர்களோ அதே எண்ணத்தை மனதில் கொண்டு நான் படித்துப் பார்க்கிறேன்'' என்று கூறி அஹ்மத் நூலைப்

பெற்றுப் படித்தார். பின்னர் தாவூதிடம் அவர் நீண்ட நாள் பழகினார்.

''இறைவன் உமக்கு நன்மை புரிவானாக! அந்த நூலின் உதவியால் நீர் பயனடைந்துவிட்டீர்'' என்று தாவூத் ஒரு நாள் கூறினார்.

''எனக்காக இறைவனிடம் பிரார்த்தனை செய்யுங்கள்'' என்று ஒருவர் வேண்டிக் கொண்டாராம்.

''முதலில் என் எண்ணத்தில் அதைப் பற்றிய நல்லெண்ணம் உருவாகட்டும்'' என்று தாவூத் என்ற அறிஞர் விடையிறுத்தார்.

மற்றோர் அறிஞர் கூறினார்: ''ஒரு மனிதன் வியாதியுற்றிருக் கிறான். அவனைப் பார்த்து வருவதற்காக நான் ஒரு மாதமாக நல்லெண்ணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். இதுவரை நல்லெண்ணம் உருவாகவில்லை.

ஈஸா பின் சஸீர் ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுகிறார்: நான் ஒரு சமயம் மைமூன் பின் மஹ்ரானுடன் சென்று கொண்டிருந்தேன். அவர் வீடு வந்ததும் நான் அவரிடமிருந்து விடை பெற்றுக் கொண்டேன்.

அவரது புதல்வன் வாசலில் நின்றுகொண்டிருந்தான். ''உணவருந்திவிட்டுப் போகுமாறு சொல்லக் கூடாதா?'' என்று தந்தையைக் கேட்டான்.

''அதைப் பற்றிய நல்லெண்ணம் எனக்கில்லை'' என்று மைமூன் கூறியது எனக்குத் தெளிவாகக் கேட்டது.

எண்ணம் என்பது சூழ்நிலையைப் பொறுத்தது. எனவே, சூழ்நிலை மாறும்போது எண்ணமும் மாறுபடுகிறது. முற்கால அறிஞருள் எவரும் நல்லெண்ணமின்றி எந்தக் காரியத்தையும் செய்யவில்லை. ஏனென்றால், எண்ணம் என்பது செயலுக்கு உயிர் என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். நல்லெண்ணம் இல்லாத காரியங்கள் முகஸ்துதியை உண்டாக்குகின்றன என்பதையும்



அவர்கள் உணர்ந்திருந்தார்கள். நல்லெண்ணமில்லாமல் செயலாற்றுவது வீண் வேலை. இதனால், இறைவனின் வெறுப்பைப் பெற முடியாது. வாயளவில் சொல்லிக்கொள்வது நல்லெண்ணமல்ல. ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும் என்னும் மன எழுச்சியையே நல்லெண்ணம் எனக் குறிப்பிட முடியும். சில சமயங்களில் நல்லெண்ணம் இலகுவாக ஏற்பட்டுவிடும். வேறு சில சமயங்களில் அது உருவாவது சிரமமாயிருக்கும். ஆனால், மார்க்கப்பற்று உள்ளவர்களுக்குப் பெரும்பாலான நேரங்களில் நல்லெண்ணம் இலகுவாக உருவாகிவிடும். அவர்களின் உள்ளம் நன்மையில் ஆர்வம் கொள்கிறது. எனவே அவர்களால் எளிதில் நல்லெண்ணத்தை உண்டாக்கிக் கொள்ள முடிகிறது.

ஆனால், உலகப்பற்றுக் கொண்டவர்களுக்கு இது சாத்தியமில்லை. கடமையான காரியங்களிலும்கூட அவர்களால் நல்லெண்ணம் கொள்ள முடியாமற் போகலாம். ஒரு கடமையை நிறைவேற்ற முற்படும்போது கடின முயற்சிக்குப் பிறகே அவர்களால் நல்லெண்ணத்தை உருவாக்க முடியும். இவர்கள் மறுமையின் தண்டனையை எண்ணிப் பார்த்து மனத்தை மாற்றலாம் அல்லது சுவனத்தை எண்ணிப் பார்த்து உள்ளத்தைத் திருத்தலாம்.

''என் வணக்கத்திற்கும் வழிபாட்டிற்கும் உரியவன் இறைவன் ஒருவனே. அவனைக் கண்ணியப்படுத்தும் எண்ணத்தோடு செயலாற்றுகிறேன்''-இப்படி எண்ணுவது மிகவும் சிறந்தது. எல்லாவற்றிலும் உயர்ந்தது இதுதான். ஆனால், இந்த உண்மையை உணர்ந்தவர்கள் இம்மாநிலத்தில் ஒரு சிலரே இருக்க முடியும். இதை உணர்ந்தவர்கள் அபூர்வம்; இதைச் செய்பவர்கள் மிக அபூர்வம்.

மக்களின் மனத்தில் உருவாகும் நல்லெண்ணம் பலதரப்படுகிறது. சிலர் தண்டனையைத் தவிர்க்கும் எண்ணத்தை மனத்தில் கொள்கிறார்கள். ஏனெனில், இவர்கள் நரக நெருப்புக்கு

அஞ்சுகிறார்கள். வேறு சிலர் நல்வாழ்க்கையை அடையும் எண்ணத்தோடு செயலாற்றுகிறார்கள். ஏனெனில், இவர்கள் சுவன வாழ்க்கையை எதிர்பார்க்கிறார்கள். 'இறைவனுக்காகவே செயலாற்றுகிறேன்' என்ற நல்லெண்ணத்தைவிட இவை தாழ்ந்திருந்த போதிலும் இவை இரண்டும் நேர்மையான நல்லெண்ணங்கள்தாம் என்பதில் சந்தேகமில்லை.

ஏனென்றால், இவை இரண்டும் மறுமை வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட நல்லெண்ணங்கள்.

என்றாலும், இவற்றில் உலக இன்பங்கள் சிறிதளவு கலக்கத்தான் செய்கின்றன. சுவனத்தின் உணவையும் மங்கையரையும் எண்ணிச் செயலாற்றியவன் தன் செயல்களின் உதவியால் மறுமையின்பத்தை அடைய விரும்புகிறான்.

ஆனால், தேர்ந்த அறிவுள்ளவர்கள் இப்படி எல்லாம் செய்யமாட்டார்கள். உள்ளத்தில் எப்போதும் இறைத்தியானம் துலங்கிக்கொண்டிருக்கும். இறைவனின் அன்பையும் ஆட்சி முறையையும் எண்ணிப் பார்த்து அவர்கள் இன்புறுவார்கள்; நடுங்குவார்கள். அவர்களின் செயல்கள் அனைத்தும் இந்த மனோநிலையை உறுதிப்படுத்துவனவாகவே இருக்கும். இவர்கள் மிகப் பெரிய அந்தஸ்துடையவர்கள், சுவனத்தின் மங்கையரைப் பற்றியோ உணவு வகைகளைப் பற்றியோ இவர்கள் ஒரு சிறிதும் அக்கறைகொள்ள மாட்டார்கள். ஏனெனில், இவை இரண்டும் இவர்களின் குறிக்கோளுக்கு அப்பாற்பட்டவை. இறைவனையே இவர்கள் குறிக்கோளாக்கிக் கொள்வார்கள். அவனையே விரும்புவார்கள்; காலையும் மாலையும் அவனுக்கு வழிபடுவார்கள்-எந்நேரமும்அவனுக்குச் சிரம் சாய்ப்பார்கள்.

எண்ணங்களுக்குத் தக்கபடியே மக்கள் நற்கூலியளிக்கப்படுகிறார்கள். உயர்ந்த எண்ணத்தை மனத்தில் கொள்பவர்களுக்கு உயர்ந்த நற்கூலியுண்டு. மேற்குறிப்பிட்டவர்கள் மேலான எண்ணத்தை மனத்தில் வைத்திருக்கிறார்கள். எனவே,



அவர்களுக்கு அளிக்கப்படும் நற்கூலி மேலானதாகத்தான் இருக்கும். அவர்கள் இறைவனைப் பார்க்க ஆசைப்படுகிறார்கள். சுவன மாதரைப் பார்க்க ஆசைப்படுகிறவர்களை இவர்கள் கிண்டல் செய்கிறார்கள். மண்சுவரில் வரையப்பட்ட சித்திரத்தைப் பார்க்கத் துடிக்கிறான் ஒருவன்; சுவன மாதரைப் பார்க்கத் துடிக்கிறான் மற்றொருவன். இவன் முன்னவனைப் பார்த்துக் கிண்டல் செய்கிறான். சுவர்ச்சித்திரத்திற்கும் சுவன மங்கையருக்கும் இடையில் பாரதூரமான வேற்றுமை இருப்பதுபோல இறை சந்திப்புக்கும் சுவன மாதர் சந்திப்புக்கும் இடையில் பாரதூரமான வேற்றுமை உண்டு. இன்னும் சொல்லப்போனால், சித்திரத்திற்கும் சுவன மாதருக்கும் இடையிலுள்ள வேற்றுமையைவிட இந்த வேற்றுமை மிகவும் அதிகம் எனலாம்- பெரும்பாலோர் இந்த உண்மையை உணர்ந்து கொள்ளத் தவறிவிட்டார்கள். மக்கள் அனைவரும் ஒரேவிதமாக இருக்க மாட்டார்கள். ஒவ்வொரு பிரிவினரும் தாம் தெரிந்ததை வைத்துக்கொண்டு மகிழ்ச்சியடைகின்றனர். இதற்குத்தானே அவர்கள் படைக்கப்பட்டிருக்கிறார்கள்.

அஹமத் பின் கில்ரவைஹி என்பவர் இறைவன் கனவில் இவ்வாறு கூறுவதாகக் கண்டாராம். ''எல்லோரும் என்னிடம் சுவனத்தைக் கேட்கிறார்கள். ஆனால், அபூயஸீத் என்னிடம் என்னையே கேட்கிறார்.

அபூஸீத் பிஸ்தாமீ, கனவிலே, ''இறைவனே! உன்னை அடைவதற்கு மார்க்கம் எது?'' என்று கேட்டார்.

இறைவன் விடையளித்தான்: ''மனத்தின் உணர்ச்சியை விட்டுவிடும். என்னிடம் வந்துவிடும்.''

ஷிப்லீ என்பவர் இறந்துவிட்டார். அவரை யாரோ கனவில் கண்டார்கள். ''உம் விஷயத்தில் இறைவன் எப்படி நடந்துகொண்டான்?''

ஷிப்லீ பதிலிறுத்தார். ''என்னிடம் அப்படிப்பெரிதாக ஒன்றும் கேட்டுவிடவில்லை; மண்ணகத்தில் நான் இருந்த போது ஒருநாள் 'சுவன வாழ்க்கையை இழப்பதுதான் பெரிய நஷ்டம். அதைவிடப் பெரியதொரு நஷ்டம் கிடையாது' என்று மக்களிடம் கூறியிருந்தேன். இது சம்பந்தமாகவே என்னை இறைவன் விசாரணை செய்தான், 'அப்படிச் கூறினீரல்லவா? என் சந்திப்பை இழப்பது எவ்வளவு பெரிய நஷ்டம்! எந்தப் பாக்கியமும் அதற்கு ஈடுகட்ட முடியுமா?' என்று என்னைத் திருப்பிக் கேட்டான்.''

நல்லெண்ணம் என்பது பல்வேறு படித்தரங்களைக் கொண்டது என்பதை இதிலிருந்து அறிகிறோம். ஒரே எண்ணத்தை ஒருவன் மனதில் இருத்திவந்தால், அந்த எண்ணத்தை விடுத்து மனத்தை வேறு பக்கம் திருப்புவது அவனுக்குச் சிரமமாகலாம். மேலே குறிப்பிட்ட அனைத்தையும் நீ நன்கு உணர்ந்துகொள்ளவேண்டும். இந்த உணர்வின் உதவியால் சட்ட மேதைகளின் அனுமதியுடன் கூடிய எத்தனையோ நற்செயல்கள் உன்னிடமிருந்து வெளிப்பட முடியும்.

இரண்டு காரியங்கள் குறுக்கிடுகின்றன. அவற்றுள் ஒன்று சாதாரணக் காரியம். மற்றொன்று சற்றுச் சிறப்பு வாய்ந்த காரியம். முதல் காரியத்தில் நல்லெண்ணம் உண்டாகிவிட்டால், அதே சமயத்தில் இரண்டாம் காரியத்தில் நல்லெண்ணம் உருப்பெற மறுத்துவிட்டால்,முதல்காரியத்தைத்தான் செய்யவேண்டும். இரண்டாம் காரியத்தைவிட்டுவிடலாம். இந்த இடத்தில்அந்தச் சாதாரண காரியம் சிறப்புள்ள காரியமாக மாறிவிடுகிறது. ஏனெனில், செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொறுத்தவை.

குற்றத்தை மன்னித்தருள்வது சிறப்பான காரியம். பழிக்குப்பழி வாங்குவது சாதாரணமான செயல். இதற்கு மார்க்கம் அனுமதி தருகிறது. பழிக்கு பழி வாங்குவதை விட எதிரியின் குற்றத்தை மன்னிப்பதுதான் மேலான செயல். ஆனால், மன்னிக்கும்



விஷயத்தில் உன் மனத்தில் நல்லெண்ணம் உண்டாகாவிட்டால், பழி வாங்கும் விஷயத்தில் நல்லெண்ணம் உருவாகிவிட்டால் பிந்தியதைச் செயல்படுத்தலாம்.

ஒருவன் உணவருந்த விரும்புகிறான். தூங்க விரும்புகிறான். தன் ஆரோக்கியத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் எதிர்காலத்தில் இறைவணக்கத்தில் புத்துணர்ச்சியை உண்டாக்கிக் கொள்வதற்கும் அவன் இப்படிச் செய்கிறான் . அவனுடைய உணவுக்கும் தூக்கத்திற்கும் வேண்டிய நல்லெண்ணம் உருவாகிவிட்டது. எனவே, இவ்விரண்டையும் முடிப்பதுதான் மேலான காரியம். ஆனால், இவ்விரண்டையும் விட நோன்பும் தொழுகையும் நிச்சயம் மேலானவை. ஆனால், தொடர்ந்து இறைவணக்கம் புரிந்தால் அவனுக்குச் சற்றுச்சடைவு ஏற்பட்டிருப்பதாக வைத்துக்கொள்வோம்.

விளையாட்டுகளில், பொழுது போக்கான காரியங்களில் சிறிது நேரம் ஈடுபட்டால் அந்த மனச்சடைவு நீங்கி இறைவழியில் புத்துணர்வு பிறக்க முடியும் என்று அவன் நம்பினால் இறைவணக்கத்தை அதுவரை நிறுத்தி வைக்கலாம். இந்தக் கட்டத்தில் அவனைப் பொறுத்தவரையில் வீண் விளையாட்டு என்பது இறைவணக்கத்தை விடச் சிறப்பான காரியமாகும்.

அபுத்தர்தா கூறினார்கள். ''விளயைாட்டுக்களின் மூலம் என் மனத்திற்கும் திருப்தியளிக்கிறேன். நேர்வழியில் அதுஎனக்குப் பெரிதும் உதவியாக அமைகிறது.''

''மனத்திற்கு மகிழ்வூட்டுங்கள். ஏனெனில், அது வெறுப் படைந்தால் அதன் சக்தி-பார்வை மழுங்கிப் போய்விடும்'' என்று அறிஞர் அலீ(ரலி) கூறினார்கள்.

இவை அனைத்தும் நுட்பமான விஷயங்கள். இவற்றை யெல்லாம் அறிஞர்களைத் தவிர்த்து மற்றவர்களால் கண்டுணர முடியாது. சிறந்த வைத்தியன் ஒருவன் உஷ்ண மேலீட்டால்

ஏற்பட்ட வியாதியைத் தணிப்பதற்காகச் சில வேளைகளில் மாமிசத்தைப் பயன்படுத்துகிறான். மாமிசம் என்பது உஷ்ணம் நிறைந்தது என்பதை இங்கு நாம் நினைவு கூறவேண்டும். ஆனால், இதன் தத்துவம் அரை வைத்தியனுக்குப் புரியாது. வியாதியால் நலிவுற்றவனின் உடல் ஓரளவுக்குத் தேறுவது அவசியமாகும். அப்போதுதான் அந்தஉடல் சிகிச்சையை ஏற்றுக்கொள்ளும். சிகிச்சையை ஏற்கும் அளவிற்கு உடல் நிலை வலுவடைவதற்காகவே மாமிசத்தை அளிக்கிறான். சிறந்த வைத்தியன். இதன் பிறகு அவன் குளிர்ச்சியான மருந்தைக் கொடுக்கலாம். ஏனெனில், உஷ்ணத்தால் ஏற்பட்ட வியாதியைக் குளிர்ச்சியால்தான் குறைக்க முடியும்.

சதுரங்க விளையாட்டில் தேர்ச்சியுடையவன் தான் தோல்வியடைவதுபோல் பாசாங்கு செய்கிறான்.வேண்டுமென்றே சில காய்களைக் கோட்டை விடுகிறான். இவை எல்லாம் வெற்றிக்குரிய பாதைகள் என்பது அவனுக்குத் தெரியும். ஆனால், இந்த ஆட்டத்தில் தேர்ச்சியடையாத எதிரிக்கு .இந்த உண்மை தெரிந்திருக்க முடியாது. எனவே, அவன் சிரிக்கலாம்; ஆச்சரியப்படலாம்.

போர்க் கலையில் தேர்ந்த வீரன் ஒருவன் வேண்டுமென்றே புறமுதுகிட்டு ஓடுகிறான்.இதில் தந்திரம் உண்டு. இதை அறியாத எதிரிகள் அவனைப் பின்பற்றி வருகிறார்கள். குறிப்பிட்ட இடத்தை அடைந்ததும் அந்தப் போர்வீரன் திரும்பவும் போர் புரிகிறான். எதிரிகள் தப்பியோட முடியாதபடி சிக்கிக் கொள்கிறார்கள். அப்படி அவர்களைச் சிக்க வைத்து விடுகிறான் போர்த் தந்திரத்தில் சிறந்த வீரன்.

இதுபோன்றதுதான்இறை வழியும். அதில் ஷைத்தானுடன் போரிட நேரிடும்; உள்ளத்திற்கும் வைத்தியம் செய்ய வேண்டிவரும். அறிஞர்கள் ஒவ்வொரு விஷயத்தையும்



ஆராய்ந்து அதிலுள்ள உண்மையை உணர்ந்து கொள்வார்கள்; அதற்குத் தகுந்தபடி செயலாற்றுவார்கள். பலவீனமான மதியுடையவர் களுக்கு இது ஒருகாலும் சாத்திய மில்லை.

எனவே, ஞானகுருவின் செயல்களில் குறைகாணும் மாணவன் அவரை வெறுத்துவிடக்கூடாது. ஆசிரியரின் போக்குப் புரியாததால் மாணவன் அவரைக் குறுக்குக் கேள்வி கேட்கக் கூடாது. தன் பகுத்தறிவால் எதையும் அவன் ஆராய்ந்து பார்க்கவேண்டும். அப்படியும் அவனுக்குப் புரியவில்லை என்றால் ஞானோதயத்தின் மூலம் அந்த உண்மைகள் துலங்கும் வரை அவன் பொறுத்திருக்க வேண்டும். அவர்கள் அடைந்திருக்கும் படித்தரத்தை அவன் அடைந்தால், எல்லா உண்மைகளும் அவனுக்குத் தெரிந்துவிடும்.

இறைவனே நேர்மைக்கு வழி வகுப்பவன்.

இரண்டாம் பாகம்

# 6. ஒருமித்த மனநிலை

''ஒருமித்த மனத்துடன் இறைவனை வணங்குமாறுதான் அவர்கள் கட்டளையிடப்பட்டார்கள்'' என்று இறைவன் கூறுகிறான். ''ஒருமித்த மனத்துடன் உருவாகும் வழிபாடு இறைவனுக்கே உரித்தானதாகும்.''

மீண்டும் கூறுகிறான் : ''அவர்கள் தங்கள் குற்றங்களுக்குப் பாவ மன்னிப்புக் கோரினார்கள்; தங்கள் செயல்களைச் சீர்திருத்தினார்கள்; இறைவன்மீது பற்றுதல் கொண்டார்கள்; ஒருமித்த மனத்தோடு இறைவழிபாடுகள் நடத்தினார்கள்...''

இன்னம் கூறுகிறான் : ''தங்கள் நாயனின் தரிசனத்தை விரும்பி வரவேற்பவர்கள் நற்காரியங்கள் செய்யட்டும்; வணக்கத்தின்போது வேறு யாரையும் இறைவனோடு இணைக்காதிருக்கட்டும்.'' குறிப்பிட்ட சில பக்தர்களின் விஷயத்தில் இந்த திருவசனம் அருளப்பட்டது. அவர்கள் இறைவனுக்காகவே செயலாற்றினார்கள். இறைவனின் பாராட்டுரையையே அவர்கள் விரும்பி வரவேற்றார்கள்.



திருநபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : ''முஸ்லீம்களுடைய உள்ளத்தில் பொறாமையை உண்டாக்காத செயல்கள் மூன்று. ஒருமித்த மனத்தோடு இறை வழிபாடு புரிவது அந்த மூன்றுசெயல்களுள் ஒன்றாகும்.''

முஸ்அப்பின் சஅத் (ரஹ்) என்ற திருநபித் தோழர் கூறுகிறார் : ''திருநபித் தோழர்களில் தம்மைவிட மற்றவர்கள் தாழ்ந்தவர்கள் என்று என் தந்தை எண்ணிக் கொண்டிருந்தார். அப்போது திருத்தூதர் அவர்கள் இப்படிக் கூறினார்கள் : 'தாழ்ந்தவர் மூலம் தான் இந்தச் சமுதாயத்திற்கு இறைவன் சிறப்பளிக்கிறான். அவர்களின் பிரார்த்தனை, ஒருமித்த மனநிலை, இறைவணக்கம் எல்லாம் சிறப்பிற்குரியவை.''

''ஒருமித்த மனநிலை என்பது-மனத்தூய்மை என்பது-என் மருமங்களில் ஒன்று. என் அன்பிற்குரியவர்களுக்கு மட்டுமே அந்த மருமத்தை வெளியிடுவேன்'' என்று இறைவன் கூறினான்-இப்படித் திருநபியவர்கள் விளக்கினார்கள்.

அறிஞர் அலீ(ரலி) கூறினார்கள் :'நற்காரியங்கள் குறைவாய் இருக்கின்றனவே என்று கவலைப்படாதீர்கள்; அவை இறைவனிடம் அங்கீகாரம் பெற வேண்டுமே என்று கவலைப்படுங்கள்.''

திருநபி (ஸல்) அவர்கள் ம ஆத் பின் ஜபல் என்னும் நண்பருக்குக் கூறினார்கள் : ''ஒருமித்த மனத்தோடு செயலாற்றும். நீர் செய்த காரியங்கள் குறைவாக இருந்திருந்தாலும் அவை உமக்கு நற்கூலியைத் தேடித்தரவல்லவை.

மேலும், ''ஒருவன் நாற்பது நாள்கள் ஒருமித்த மனத்தோடு இறைவனை வணங்கினால், அவன் உள்ளத்திலிருந்து அறிவின் ஊற்றுப் பொங்கியெழுந்து நாவின் வழியே வெளிப்படும்''என்றும் கூறினார்கள்.

இன்னும் விளக்கினார்கள் : அடியிற்கண்ட மூன்று தரத்தாரும் மறுமை நாளில் முதன் முதலில் விசாரணை செய்யப்படுவார்கள்.

முதல் தரத்தார் : இவர்கள் அறிவைப் பெற்றவர்கள்; அறிஞர்கள்.

''நீங்கள் கற்ற கல்வியை எவ்வாறு பயன்படுத்துகின்றீர்கள்?''

என்று இறைவன் கேட்பான்.

அறிஞர்கள் பதிலளிப்பார்கள் :''இறைவனே! நள்ளிரவிலும் பகல், முழுவதிலும் உன்னை வணங்கினோம்.''

''பொய் சொல்கிறீர்கள்!''என்று இறைவன் மறுப்பான். வானவர்கள் இறைவனின் தீர்ப்பை ஆமோதிப்பார்கள்; ''ஆம், நீங்கள், சொல்வது பொய் : நீங்கள் இறைவனுக்காக வணங்க வில்லை. 'பக்தி நிறைந்த அறிஞன்' என்ற பெயரைச் சம்பாதித்துக் கொள்வதற்காகவே நீங்கள் அப்படிச். செய்தீர்கள். அந்தப் பெயர் உங்களுக்குக் கிடைத்துவிட்டது.

இரண்டாம் தரத்தார் : இவர்கள் செல்வம் படைத்தவர்கள். ''உங்கள் செல்வத்தின் உதவியால் என்ன நன்மை செய்தீர்கள்? என்று வினா எழுப்பப்படும்.

அவர்கள் விடையளிப்பார்கள். ''நாயனே! இரவு, பகல் எந்நேரமும் உனக்காகத் தருமம் செய்தோம்.''

அவர்களின் கூற்றை இறைவன் மறுத்துவிடுகிறான். ''பொய்யுரைக்கிறீர்கள்!'' என்று வானவர்கள் குற்றம் சாட்டுவார்கள், ''நீங்கள் இறைவனுக்காகத் தருமம் செய்யவில்லை.'கொடை வள்ளல்' என்ற பட்டத்துக்காகவே நீங்கள் செலவு செய்தீர்கள். அந்தப் பட்டத்தையும் பெற்றீர்கள்.''

மூன்றாம் தரத்தார் : இவர்கள் இறைவழியில் உயிர்த் தியாகம் செய்தவர்கள். ''மண்ணுலகில் நீங்கள் செய்த நற்காரியம் என்ன? '' என விசாரணை தொடங்கும்.



''இறைவனே! புனிதப் போரில் ஈடுபடுமாறு கட்டளையிட்டாய். நாங்கள் ஈடுபட்டோம். எங்கள் உயிர்களை உனக்காக அருப்பணித்துவிட்டோம்

இறைவன் இந்தக் கூற்றை ஏற்கமாட்டான். வானவர்களோ ''பொய் சொல்கிறீர்கள்'' என்று அலறுவார்கள். ''நீங்கள் வீரன்' என்ற புகழ்மாலைக்காகவே போர்புரிந்தீர்கள்-தியாகம் செய்தீர்கள். அந்தப்புகழ்மாலை உங்களுக்குக் கிடைத்துவிட்டது.''

திருநபி (ஸல்) அவர்களின் இந்த விளக்கம் சம்பந்தமாக அபூஹுரைரா (ரலி) கூறுகின்றார்கள் : ''இப்படிக் கூறி முடித்த பெருமானார் அவர்கள் என் தொடையில் தட்டினார்கள். 'அபூஹுரைரா! எல்லாருக்கும் முன்னால் இவர்கள்தாம் நரகில் பிரவேசிப்பார்கள்' என்று சொன்னார்கள்.

மேற்குறிப்பிட்ட செய்தியை ஒருவர் முஆவீயாவிடம் கூறினார். முஆவியா கண்ணீர் விட்டழுதார். திகிலின் காரணமாக அவர் இறந்துவிடுவாரோ என்றுகூடச் சந்தேகம் ஏற்பட்டுவிட்டதாம்.

பின்னர் ''எவ்வளவு உண்மை!'' என்று ஆச்சரியப்பட்டார் மூஆவியா. ''இறைவன் 'இம்மையின் வாழ்க்கையையும் அதன் கவர்ச்சியையும் விரும்புகிறவர்களுக்கு அவற்றை நாம் இம்மையிலேயே கொடுப்போம்' என்று கூறுகிறானே. எவ்வளவு உண்மை!''

ஒரு பக்தர் நீண்ட நாள்களாக இறைவனை வணங்கிக் கொண்டிருந்தாராம். அவரை யாரோ சிலர் சந்தித்து ''இந்தப் பகுதியில் வசிக்கும் சிலர் இறைவனை வணங்குவதில்லை; ஒரு மரத்தை வணங்குகின்றனர்''என்று கூறினார்கள்.

பக்தருக்குக்கோபம் வந்துவிட்டது. கோடரியைத்தோளில் சாத்திக்கொண்டு புறப்பட்டுவிட்டார்-அந்த மரத்தை வெட்டி

எறிவதற்குதான்! எதிரில் இப்லீஸ் வந்தான், ஒரு வயோதிகனின் தோற்றத்தில்.

''இறைவன் உமக்கு அருள்புரியட்டும்! எங்குப் போகிறீர்'' என்று கேட்டான்.

பக்தர் பதிலளித்தார் : ''அதோ அந்த மரத்தை வெட்டப் போகிறேன்''

''இது உமக்கு அவசியமில்லாத வேலை. இறைவணக்கத்தை விட்டு இதில் நீர் ஏன் தலையிடவேண்டும்.?''

''இல்லை-எனக்கு அவசியமான வேலைதான். என் வணக்கத்தில் இந்த வேலையும் ஒன்றாகும்''

''எப்படியும் இருக்கட்டும்! அந்த மரத்தை நீர் வெட்ட விடமாட்டேன்.''

பக்தரின் சினம் எல்லையைக் கடந்தது. வயோதிகன் மீது பாய்ந்தார். அவனைத் தரையில் தள்ளி நெஞ்சின்மீது ஏறி உட்கார்ந்து கொண்டார்.

இப்லீஸ் முறையிட்டான்.''அவசரப்படாதீர்! நான் சொல்வதைச் சற்றுக்கேளும். முதலில் என்னை எழுந்திருக்க விடும்.''

பக்தர் முறையீட்டுக்கு இணங்கினார்.

இப்லீஸ் எழுந்து நின்று கொண்டான். ''இறைவன் உம்மீது இந்தப் பொறுப்பைச் சுமத்தவில்லை. எனவே, இந்த மரத்தை வெட்டி வீசுவது உமக்குக் கடமையல்ல. மற்றவர்களின் விஷயத்தில் நீர் ஏன் வீணாகத் தலையிடுகிறீர்? நானிலத்தில் எல்லாப் பகுதிகளுக்கும் இறைவன் திருத்தூதர்களை அனுப்புகிறான். மக்களுள் சிலர் இந்த மரத்தை வணங்குகிறார் என்பதை அவன் நினைத்தால் யாரேனும் திருத்தூதர் ஒருவரை இங்கு அனுப்பி இந்த மரத்தை வெட்டி எறியச் செய்து விடுவான்.இது உமக்குரிய வேலையில்லை.''



''இல்லை''என்று அடுத்துக் கூறினார் பக்தர். ''இந்த மரத்தை வெட்டிப் போடுவது என்னைப் பொறுத்த வரையில் அவசியமான காரியமாகும்.''

மீண்டும் இருவரும் சண்டை போட்டுக் கொண்டார்கள். வயோதிகனைக் கீழே தள்ளி நெஞ்சில் உட்கார்ந்துவிட்டார் பக்தர்

''நாம் ஒரு முடிவிற்கு வருவோம். அந்த முடிவு உமக்குப் பெரிதும் நல்லது. இதனால், உமக்கு நன்மையுண்டு'' என்றான்.இப்லீஸ்

''என்ன முடிவு அது?'' என்று கேட்டார் பக்தர்.

''முதலில் என்னை எழுந்திருக்க விடும். பிறகு சொல்கிறேன்.

இப்லீஸ் எழுந்து நின்றான். ''நீர் ஓர் ஏழை. உம்மிடம் எதுவும் கிடையாது. மக்களின் உதவியை எதிர்பார்த்து உயிர் வாழ்கிறீர். மற்றவர்களைவிட நீர் உயர்ந்து விளங்க வேண்டும் என்ற எண்ணம் உமக்கு அடிக்கடி ஏற்படலாம். மக்களின் உதவியை எதிர் பார்க்காமல் சுதந்திரமாக உயிர் வாழ்வதற்கு முனைகிறீர் என்று எண்ணுகிறேன்''-இப்லீஸ் வலை விரித்து விட்டான்.

''உண்மை!'' என்றார் பக்தர். அவனது வலையில் சிக்கிக் கொண்டார்.

''அப்படியானால், ஒரு காரியம் செய்யும்!'' என்று கட்டளையிட்டான் இப்லீஸ் .''மரம் வெட்டும் எண்ணத்தை விட்டொழியும். அதற்குப் பதிலாக உமக்கு நான் ஓர் உதவி செய்கிறேன். ஒவ்வோர் இரவும் உமது படுக்கையில் இரண்டு

தங்கக் காசுகள் வைத்து விடுகிறேன். பொழுது விடிந்ததும் அவற்றை எடுத்து உமது தேவைகளை முடித்துக் கொள்ளும். அவற்றின் உதவியால் நீர் உமது குடும்பத்தைக் கவனித்துக் கொள்ளலாம். நண்பர்களுக்கும் உதவி செய்யலாம். இது உமக்கு

எவ்வளவோ நல்லது. உமக்கு மட்டுமல்ல, மற்ற முஸ்லிம்களுக்கும் இதனால் நன்மையுண்டு. இந்த மரத்தை நீர் வெட்டுகிறீர் என்று வைத்துக் கொள்வோம். இதனால் உமக்கு என்ன பயன்? மற்ற முஸ்லிம்களுக்குதான் என்ன நன்மை?''

பக்தர் சிந்தித்தார். ''இந்த வயோதிகன் சொல்வது உண்மைதான். நான் இறைவனால் அனுப்பப்பட்ட திருத்தூதனல்ல. எனவே, இந்த மரத்தை வெட்ட வேண்டிய அவசியமும் எனக்கில்லை. மரத்தை வெட்டுமாறு இறைவன் எனக்குக் கட்டளையிடவுமில்லை. ஆகவே, அதை வெட்டாவிடில் நான் குற்றவாளியாக மாட்டேன். தவிர இந்த வயோதிகன் கூறும் உதவித் திட்டம் உண்மையிலேயே நன்மை பயக்கவல்லதுதான்.'' - இப்படி ஓடியது அவர் சிந்தனை.

இதன் பிறகு இப்லீஸுக்கு வாக்குறுதியளித்து விட்டுத் திரும்பினார் பக்தர். அவர் இறை வணக்கம் புரிந்து வந்த இடத்தில் அன்றிரவு கண்ணயர்ந்தார். கண்விழித்தபோது படுக்கையருகில் இரண்டு நாணயங்கள் மின்னிக் கொண்டிருப்பதைக் கண்டார். இதேபோன்று அடுத்த நாளும் நடந்தது.

மூன்றாம் நாள் பக்தர் நாணயத்தைத் தேடினார். கண்ணில் படவில்லை. நான்காம் நாளும் இதே நிலைமைதான். அவருக்குக் கோபம் வந்தது. வயோதிகன் தம்மை ஏமாற்றிவிட்டான் என்று எண்ணினார். அவர், மறுபடியும் கோடரியுடன் புறப்பட்டார்.

சொல்லி வைத்தாற்போல எதிரில் வந்தான் அந்த வயோதிகன்.

''எங்குப் போகிறீர், நண்பரே?'' என்று கிண்டலாகக் கேட்டான்.

''மரத்தை வெட்டப்போகிறேன். இந்தத் தடவை அதை வெட்டாமல் விடப்போவதில்லை'' என்று சினத்துடன் கூறினார் பக்தர்.



வயோதிகன் வாய் விட்டுச் சிரித்தான். ''நடக்காத காரியம். இறைவன்மீது ஆணையிட்டுக் கூறுவேன், உம்மால் அந்த மரத்தைக் கண்டிப்பாய் வெட்ட முடியாது.''

பக்தர் சினமுற்றார்; கொதித்தெழுந்தார். வயோதிகனைக் கீழே தள்ளி அவன் நெஞ்சில் உட்காரும் எண்ணத்துடன் அவனைப் பற்றிப் பிடிக்க முனைந்தார். ஆனால், எதிரி முந்திக் கொண்டு விட்டான். மறு விநாடி மண்ணில் தள்ளப்பட்டார் பக்தர். அவர் நெஞ்சில் அமர்ந்தான் இப்லீஸ். அவனுடைய கால்களுக்கிடையில் அவர் சிட்டுக் குருவியைப்போலச் சிக்கிக் கொண்டிருந்தார்.

''இப்போது எனக்கு வாக்குறுதி கொடும். இந்த முயற்சியை இன்றோடு கைவிடுகிறீரா, இல்லையா? இல்லையேல், உம்மை இங்கேயே, இப்போதே கொன்று போட்டு விடுவேன்.''

செய்வதறியாது பரபரவென்று விழித்தார் பக்தர். அவனை எதிர்க்கும் ஆற்றல் தம்மிடமிருந்து பறிக்கப்பட்டுவிட்டது என்பதை உணர்ந்தார்.

''என்மீது நீ வெற்றி கொண்டுவிட்டாய். என்னை விட்டு விடு. இந்த முயற்சியை இன்றோடு விட்டு விடுகிறேன். ஆனால், என் கேள்விக்கு மட்டும் விடை கொடுத்துவிடு. இதற்கு முன் உன்னுடன் இரண்டு தடவை மோதியிருக்கிறேன். அப்போதெல்லாம் எனக்குதான் வெற்றி கிடைத்தது. எனினும், இந்தத் தடவை நீ வெற்றியடைந்துவிட்டாய். உன்னால்-வயோதிகனான உன்னால் என்மீது எப்படி வெற்றி காண முடிந்தது? இதிலுள்ள மர்மம் என்ன?''

இப்லீஸ் பெருமிதத்துடன் பதிலளித்தான்: ''முன்னர் இறைவனுக்காகவே நீர் சினமுற்றீர்; என்னை எதிர்த்தீர். அப்போது உம் மனத்தில் மறுமை பற்றிய நல்லெண்ணம் பிரகாசித்துக் கொண்டிருந்தது. எனவே, என்மீது வெற்றி கண்டீர். ஆனால் இப்போது நீர் அந்த நிலையில் இல்லை. சுயநலத்துக்காகவே, உலக

இன்பத்துக்காகவே இப்போது நீர் சின முற்றீர்; என்னை எதிர்த்தீர். எனவே, என்னிடம் தோல்வியடையும்படியாகி விட்டது. இதுதான் உமது தோல்வியின் மருமம்!''

''ஒருமித்த மனத்தோடு செயல்படும் நல்லடியார்களே வெற்றி வீரர்கள்'' என்ற இறை கருத்தை இந்தக் கதை வலியுறுத்துகிறது. இறைவனை மட்டுமே குறிக்கோளாகக் கொள்ளும்போது ஒருமித்த மனநிலை உண்டாகிறது. இந்த மனநிலையை ஒருவன் அடையாவிடில் அவனால் இப்லீஸுடன் போரிட்டு வெற்றி காண முடியாது.

''இதனால்தான், மஅரூப் கர்கீ இப்படிக் கூறிக் கொண்டிருந்தார்: ''மனமே! ஒருமித்த குறிக்கோளை வைத்துச் செயலாற்று -வெற்றியடைவாய்.''

''தீய காரியங்களை மறைத்துச் செய்வதுபோல, நல்ல காரியங்களையும் மறைத்துச் செய்பவனே இறைவன் விஷயத்தில் ஒருமித்த மனம் படைத்தவன்''என்று யஅகூப் மக்பூப் கூறினார்.

சுலைமான் (அலை) அவர்கள் கூறினார்கள்: இறைவனையே எண்ணி ஒருமித்த மனத்தோடு ஒரே ஓர் அடியெடுத்து வைத்து நடந்தவனையும் நான் பாராட்டுகிறேன்.''

உமர்(ரலி) அவர்கள் அபூ மூஸா அஷ்அரீ என்ற நண்பருக்கு இப்படி எழுதினார்கள்: ''கலப்படமில்லாதபடி ஒருவன் நல்லெண்ணம் கொண்டால், அவனுக்கும் மக்களுக்கும் இடையிலுள்ள விவகாரங்களை ஒழுங்காகத் தீர்த்து வைப்பதற்கு இறைவன் ஒருவனே போதுமானவன்.''

பெருந்தகை ஒருவர் தம் சகோதரருக்கு எழுதினார்: ''நீர் செய்யும் காரியங்களில் உம் எண்ணத்தை இறைவன்பால் ஒருமுகப்படுத்திக் கொள்ளும். நீர் குறைவாகச் செயலாற்றினாலும் அது உனக்குப் போதுமானது.''



அய்யூப் ஸக்தியானீ கூறினார்: ''எண்ணத்தை ஒருமுகப் படுத்துவது எல்லாக் காரியங்களை விடவும் கடினமானதாகும்.''

''தூய்மையான எண்ணம் கொண்டவனுக்கு எல்லாமே தூய்மையாக அமைகின்றன. கலப்பட மனப்பான்மை கொண்டவனுக்கு எல்லாமே போலியாக அமைகின்றன'' என்று மத்ரப் கூறிக் கொண்டிருப்பாராம்.

பெரியார் ஒருவர் கனவில் தோன்றினார்: ''நீங்கள் செய்த நற்காரியங்கள் எல்லாம் எந்த நிலையில் இருக்கின்றன?'' என்று வினவப்பட்டார்.

பெரியார் தெளிவாகப் பதிலிறுத்தார்: ''இறைவனை மனத்தில் கொண்டு நான் செய்த ஒவ்வொன்றும் - தெருவில் நான் பொறுக்கி எடுத்த மாங்கொட்டை உட்பட, எங்கள் வீட்டில் செத்துப்போன பூனை உட்பட, எல்லாமே நன்மைப்பட்டியலில் இடம் பெற்றுவிட்டன. ஆனால், என் தொப்பியில் பட்டு நூல் ஒன்று கலந்திருந்தது. அந்த நூல் தீமைப்பட்டியலில் இடம் பெற்றுவிட்டது. நூறு வெள்ளி நாணயம் பெறுமானமுள்ள கழுதை ஒன்றை நான் தருமம் செய்தேன். இதற்கு எந்த நற்கூலியும் எனக்கு அளிக்கப்படவில்லை. 'என் வீட்டில் இறந்துபோன பூனை நன்மைப்பட்டியலில் இடம் பெற்றிருக்க, கழுதை மட்டும் ஏன் இடம் பெறவில்லை?' என்று முறையிட்டேன்.''

எனக்குப் பதில் கிடைத்தது. ''அந்தக் கழுதை இறந்த செய்தியை நீர் கேட்டபோது, 'இறைவனின் முனிவு; பீடை!' என்று முணு முணுத்தீர்: இதனால், அதற்குரிய நற்கூலி அளிக்கப்பட்டது. அதற்குப் பதிலாக, 'இறைவழியில் போய்விட்டது!' என்று நீ கூறியிருந்தால், அந்தக் கழுதை உமது நன்மைப் பட்டியலில் இடம் பெற்றிருக்கும்!''

-இவ்வாறு விவரித்து முடித்தார் கனவில் தோன்றிய பெரியார்.

மேற்குறிப்பிட்ட பெரியார், ''மக்களுக்கு மத்தியில் நான் தருமம் செய்தேன். அவர்கள் பார்த்த பார்வை என்னை ஆச்சரியப் படுத்தியது. ஆனால், அந்தப் பார்வை என்னைப் பாதிக்கவுமில்லை; மகிழ்வுறுத்தவுமில்லை'' என்று கூறியதாக வேறு சிலர் வரைகிறார்கள்.

இந்த விவரத்தைச் சுப்யான் செவியுற்றபோது, ''ஆகா எவ்வளவு சிறப்பு வாய்ந்தவர் அவர்!'' என்ற பாராட்டினார்.

ஏனெனில், மக்களின் விருப்பும் வெறுப்பும் அவரைப் பாதிக்கவில்லையல்லவா?''

யஹ்யா பின் மஆத் கூறினார்: ''சாணம், ரத்தம் ஆகியவற்றை விட்டுப்பால் தூய்மையாயிருப்பதுபோல், செயல்கள் தீய எண்ணங்களை விட்டுத் தூய்மையாயிருக்க வேண்டும். இறைவன்மீது மனத்தை ஒருமுகப்படுத்தும்போது செயல்கள் தூய்மையடைகின்றன.''

யாரோ ஒருவர், பெண்களின் உடையணிந்து வெளியில் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தாராம். மாறுவேடமணிந்த அவர் பெண்கள் கூடும் இடங்களுக்கெல்லாம் செல்வது வழக்கம்.

ஒருநாள் அவர் பெண்கள் பலர் மத்தியில் உலவிக் கொண்டிருந்தார். அப்போது தற்செயலாக ஓர் ஆணிமுத்துத் திருட்டுப் போய்விட்டது. ''கதவை அடையுங்கள். இங்கு இருக்கும் எல்லாப் பெண்களையும் சோதனைவிட வேண்டும்!'' என்று தீவிரமாகச் சிலர் அலறினர்.

கதவு தாழிடப்பட்டது. சோதனை ஆரம்பமாயிற்று. பெண்கள் ஒவ்வொருவராகச் சோதனையிடப்பட்டனர்.

வேடதாரி கலங்கினார். தம்மை மகத்தான அவமானம் நெருங்கி வருவதை அவர் உணர்ந்தார். பெரும்பாலோர் சோதனை



யிடப்பட்டுவிட்டனர். இன்னும் இருவர் மட்டுமே எஞ்சியிருந்தனர். அவர்களுள் அவரும் ஒருவர்

கலங்கிப்போயிருந்த அவர் ஒருமித்த மனத்தோடு இறைவனிடம் முறையிட்டார். ''இறைவனே! இந்த அவமானத்திலிருந்து என்னைக் காப்பாற்று. அதன்பிறகு இதுபோன்ற காரியத்தில் நான் இறங்கவே மாட்டேன்'' என்று இறைஞ்சினார்.

அவருக்கு முன்னால் இருந்த பெண் சோதனையிடப்பட்டாள். அவளிடமிருந்து ஆணிமுத்துக் கண்டுபிடிக்கப்பட்டது! ''கண்ணிய மான இந்தப் பெண்களை எல்லாம் விட்டுவிடுங்கள். முத்துக் கிடைத்துவிட்டது!'' என்று யாரோ ஒருவர் சத்தமிட்டார்.

பெருந்தகை ஒருவர் விளக்குகிறார்: ''ஒரு நாள் மாலை 'அஸர்' தொழுகைக்குப் பிறகு அபூ உபைத்தஸ்தரீ தமது வயலை உழுதுகொண்டிருந்தார். அப்போது அவரருகில் நான் நின்றுகொண்டிருந்ததேன். அந்தப் பக்கம் யாரோ ஒரு பெரியார் வந்தார். அபூ உபைதிடம் என்னவோ கேட்டார். அபூ உபைத் மறுத்துவிட்டார். பிறகு அந்தப் பெரியார் விரைவாகச் சென்று மறைந்துவிட்டார்.

''அவர் உங்களிடம் என்ன கேட்டார்?' என்று நான் வினவினேன்.

''தம்முடன் 'ஹஜ்'ஜுக்கு வருமாறு என்னை அழைத்தார். நான் மறுத்துவிட்டேன்'' என்றார் அபூ உபைத்.

''ஏன் மறுத்தீர்கள்? நீங்களும் அவரோடு சென்று ஹஜ்ஜு செய்தால் என்ன?'' என்று நான் கேட்டேன்.

''இப்போது ஹஜ்ஜுக்குப் போவதை நான் விரும்பவில்லை. இந்த நிலத்தை உழுது முடிக்கவே விரும்புகிறேன். அவரோடு நான்

ஹஜ்ஜுக்குப் புறப்பட்டால், அது அவருக்காகவே நான் மேற்கொண்ட செயலாகும். இதனால், நான் இறைவனின் வெறுப்புக்கு இலக்காக நேரிடும். இறைவனின் காரியத்தில் மற்றவர்களை நான் இணைக்க விரும்பவில்லை. எனவே, நான் இப்போது மேற்கொண்டிருக்கும் காரியம் என்னைப் பொறுத்த மட்டில் எழுபது ஹஜ்ஜைவிடச் சிறப்புள்ளதாகும்.''

மற்றொரு பெரியார் விவரிக்கிறார்: ''புனிதப் போரில் கலந்துகொள்ளும் எண்ணத்துடன் ஒரு சமயம் நான் கடற்பிரயாணம் செய்துகொண்டிருந்தேன். எங்களுள் ஒருவர், கால் நடைகளுக்குத் தீனிபோட்டு வைக்கும் கூடை ஒன்றை எடுத்துக் காட்டினார்; விலை கூறினார். 'இந்தக் கூடை போர்க்களத்தில் உபயோகப்படும். மதீனா சென்றதும் அதை இலாபத்திற்கு விற்று விடலாம்' என்று எண்ணினேன்; அதை வாங்கிக் கொண்டேன்.

''அன்றிரவு நான் கனவு கண்டேன். விண்ணிலிருந்து இருவர் இறங்குகின்றனர். ஒருவர் மற்றவரிடம் கூறுகிறார்: போர் வீரர்களின் பட்டியலை எழுதும், அதோ அந்த மனிதன் உல்லாசப் பயணத்தை மனத்தில் கொண்டு புறப்பட்டான் ....இந்த மனிதன் முகஸ்துதிக்காகச் செயலாற்றினான்.... அவன் வியாபாரம் செய்யும் எண்ணத்தோடு புறப்பட்டான் ....இதோ நிற்கிறானே ஒருவன், இவன்தான் இறைவனுக்காகச் செயலாற்றியவன்' - இப்படி ஒவ்வொருவரைப் பற்றியும் வானவர் விளக்கம் கொடுக்கிறார்.

''பிறகு அவ்விருவரும் என்னைக் கூர்ந்து பார்க்கின்றனர். 'இவன் வியாபார எண்ணத்துடன் புறப்பட்டவன்!'' என்கிறார் ஒருவர். ''இதைக் குறித்துக் கொள்ளும்.''

''நான் துடிக்கிறேன். 'இல்லை-என் எண்ணத்திற்கு இறைவன் சான்றாக இருக்கிறான். வியாபாரம் செய்யும் எண்ணத்துடன் நான் புறப்படவேயில்லை. அப்படி என்னிடம் வியாபாரம் எதுவும் கிடையாது. போர் புரிவதற்காகவே புறப்பட்டேன்' என்று அலறுகிறேன்.''



வானவர் ''முதியவரே!'' என்று என்னை அழைக்கிறார். ''இலாபம் அடைவதற்காக நீர் நேற்று ஒரு கூடையை வாங்கினீரல்லவா? இதற்கு என்ன பதில் சொல்கிறீர்?''

நான் அழுகிறேன். ''தயவு செய்து அப்படி எல்லாம் எழுதிவிடாதீர்கள்!'' என்று கெஞ்சுகிறேன்.

வானவர் தம் சகாவைப் பார்க்கிறார். ''உமது அபிப்பிராயம் என்ன? இவனைப் பற்றி எப்படி எழுதுவது?''

''அப்படியானால் நான் சொல்வது போல் செய்யும்'' என்று மற்றவர் பதிலளிக்கிறார். இப்படி எழுதும். 'இவன் போர் புரியும் எண்ணத்தோடுதான் புறப்பட்டான். ஆனால், வழியில் இலாபம் பெறும் எண்ணத்தோடு கொள்முதல் செய்தான்' என்று குறிப்பிட்டு விடும். இறைவன் தன் விருப்பப்படி எப்படி வேண்டுமானாலும் தீர்ப்பளிக்கட்டும்.''

ஸிர்ரீ ஸிக்தீ கூறினார்: '' தனித்த இடத்தில் ஒருமித்த மனத்தோடு இறைவனை இரண்டு ரத்அத் தொழுவது, திருநபி (ஸல்) அவர்கள் கூறிய எழுபது-எழுநூறு பொன் மொழிகளை எழுதி வைப்பதைவிடச் சிறப்புடையதாகும்.

மற்றோர் அறிஞர் கூறினார்: ''ஒரு விநாடி நேரம் மனத்தை ஒருமுகப்படுத்துவதால் நிரந்தரமான வெற்றியே கிடைத்துவிட முடியும். ஆனால், மன ஒருமை என்பது அபூர்வமான ஒன்றாகும்.''

''அறிவு என்பது நாற்று. செயல் என்பது கதிர். அதற்குப் பாய்ச்சப்படும் நீர் தான் மன ஒருமை'' என்றும் விளக்கம் கூறப்படுகிறது.

அறிஞர் ஒருவர் கூறினார்: ''ஒரு மனிதன்மீது இறைவன் சினம் கொண்டால், அவனுக்கு மூன்று நன்மைகளைக் கொடுத்து, மூன்று நன்மைகளைத் தடுத்துவிடுகிறான். ஒன்று, நல்லவர்களின் நட்பைக் கொடுத்து, அவர்களிடமிருந்து எதையும் கிரகிக்க முடியாமல்

செய்துவிடுகிறான். இரண்டு, நற்காரியங்கள் புரியச் செய்து, அவற்றில் மன ஒருமைக்கு இடமில்லாதபடி செய்துவிடுகிறான். மூன்று, அறிவைக் கொடுத்து, அதிலுள்ள உண்மையைப் பிடுங்கிக் கொள்கிறான்.''

சூஸி கூறினார்: ''மக்கள் செயல்படும்போதெல்லாம் மன ஒருமை கொள்ள வேண்டும் என்பதே இறைவனின் நோக்கம்.''

ஜுனைத் கூறினார்: '' அறிவுள்ள நல்லடியார்கள் சிலர் இறைவனுக்கு இருக்கிறார்கள். அறிந்திருப்பதால் அவர்கள் செயலாற்றுகிறார்கள். செயலாற்றும்போது மனத்தை இறைவன்பால் ஒருமுகப்படுத்திக் கொள்கிறார்கள். மன ஒருமையே எல்லா நன்மைகளுக்கும் வித்து என்பது அவர்களின் வாதம்.''

முஹம்மத் பின் ஸயீத் கூறினார்: ''எந்தச் செயலிலும் ஒருமித்த மனத்தோடுதான் ஈடுபட வேண்டும். அதில்தான் வெற்றியுண்டு.''

ஆகவே, ஒருமித்த மனத்தோடு. சித்த சுத்தத்தோடு, உள்ளத் தூய்மையோடு நீ செயலாற்ற ஆரம்பித்தால் உன்னால் ஈருலகிலும் வெற்றியடைய முடியும்.

# 7. மன ஒருமை என்றால் என்ன?

ஒவ்வொரு பொருளிலும் கலப்படம் ஏற்பட முடியும். கலப்படமில்லாமல் இருக்கும்போது தூய்மை பிறக்கிறது. கலப்படமில்லாத ஒன்றைத் தூய்மையானது என்று குறிப்பிடலாம். இறைவனுக்காகவே செயலாற்றப்படும்போது அந்தச் செயலுக்குக் கலப்பற்றது; ஒருமித்த நோக்கம் கொண்டது என்று பெயரிடலாம். இறைவனையே எண்ணி, மற்ற எதையும் மனத்தில் கொள்ளாமலே ஒருமித்த மனத்தோடு செயலாற்றுபவனை இறைவன்மீது மன ஒருமை கொண்டவன்' என்று கூறலாம்.

''சாணத்திற்கும் இரத்தத்திற்கும் இடையில் தூய்மையான பாலை உண்டாக்கினோம்'' என்று இறைவன் குறிப்பிடுகிறான். சாணம், இரத்தம் முதலிய கலப்படம் ஏதும் இல்லாமல் அமுது வெளிப்பட்டால் அதனைத் தூய்மையானது என்று குறிப்பிடுகிறோம்.

இதே போன்றதுதான் மன ஒருமையும். இறைவனை மட்டுமே குறிக்கோளாகக் கொள்ளும் போது மன ஒருமை உருவாகிறது. இறைவனோடு மற்றவர்களையோ மற்றவற்றையோ இணைக்கும் போது 'ஷிர்க்'...இணை வைத்தல் -உருப் பெறுகிறது. இவை

இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட இரண்டு தன்மைகள். எனவே, மன ஒருமையற்றவன் இணை வைத்தவனாகிறான். எனினும், இணை வைத்தல் எனும் கொடிய செயலுக்குப் பல படித்தரங்கள் இருக்கின்றன. ஏகத்துவக் கொள்கையில் ஒருவன் மன ஒருமை கொள்கிறான். இறைவன் ஒருவன் தான் என்று நம்புகிறான். மறறொருவன் இவனுக்கு எதிராக இருந்தால், அவன் ஏகத்துவக் கொள்கையில் இணைவைத்தவனாகிறான். இணை வைத்தல் என்பது சில வேளைகளில் மர்மமாகவும் இயங்கும்.

இத்தகையதுதான் மன ஒருமை. மன ஒருமையும் சரி, அதன் எதிர்ப்பதமும் சரி-இவை இரண்டும் மனத்தில் தோன்றும் உணர்ச்சிகள்தாம். உள்ளம்தான் அவற்றிற்கு நிலைக்களன். மனத்தில் எண்ணங்களும் நோக்கங்களும் உருவாகும் போதுதான் அவை குறுக்கிடுகின்றன.

எண்ணத்தின் உண்மையான பொருளை முன்னரே விளக்கிவிட்டேன். ஒரு காரியத்தைச் செய்யத் தீர்மானிக்கும் போது எண்ணம் தூண்டிவிடப்படுகிறது. சில செயல்களுக்கு ஒரே ஒரு காரணம் மட்டுமே இருக்கும் என்றும் அத்தகைய செயல்களுக்குக் 'கலப்பற்றவை' என்று பெயரிடலாம் என்றும் ஆரம்பத்திலேயே கூறிவிட்டேன்.

ஒருவன் தருமம் செய்கிறான். நாலு பேருடைய கவனத்தைக் கவர்வதற்காக மட்டுமே அவன் இப்படிச் செய்கிறான் என்று வைத்துக் கொள்வோம். மற்றொருவன் இறைவனை எண்ணி, இறைவனுக்காகவே தருமம் செய்கிறான். இவன் ஒருமித்த மனம் கொண்டவன் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், மேற்குறிப்பிட்ட விளக்கத்தின்படி பார்க்கும் போது இவ்விருவருமே ஒருமித்த மனம் கொண்டவர்களாகிறார்கள். நாலு பேர் பார்க்க வேண்டும் என்பதற்காகத் தர்மம் செய்பவனும் தன் குறிக்கோளில் - அது நல்லதோ, கெட்டதோ- மனத்தை ஒருமுகப்படுத்தத்தானே செய்கிறான்? என்றாலும், வழக்கத்தையொட்டிப் பார்த்தால்



அவனுக்கு அந்தப் பெயர் பொருந்தாது. இறைவனைக் குறிக்கோளாகக் கொண்டு மனத்தை ஒருமுகப்படுத்துபவனுக்கு மட்டுமே அந்தப் பெயர் பொருந்தும். இதுதான் நடைமுறை. எனவே, முகஸ்துதிக்காகச் செயலாற்றுபவன் மோசம் போகிறான் - முகஸ்துதியைப்பற்றி இப்போது நான் ஒன்றும் விளக்கப் போவதில்லை. முகஸ்துதி சம்பந்தமான எல்லா விவரங்களையும் 'முகஸ்துதி' என்று நூலில் விவரித்துவிட்டேன்.

முகஸ்துதியைப்பற்றித் திருநபி (ஸல்) அவர்கள் இப்படிக் கூறியிருக்கிறார்கள்: ''நாலு பேர் பார்க்க வேண்டும் என்ற எண்ணத்துடன் செயலாற்றுபவன், மறுமையில் முகஸ்துதியுள்ளவன், மோசக்காரன், இணை வைத்தவன், முரண் வழி சென்றவன் என்னும் நான்கு பெயர்களிட்டு அழைக்கப்படுவான்.'' இந்த அளவு முகஸ்துதியைப் பற்றித் தெரிந்துகொண்டால் போதுமானது.

இப்போது இறைவனை மனத்தில் கொண்டு செயலாற்றுபவர் களைப்பற்றிதான் நாம் ஆராய வேண்டும். இறைவனுக்கென்று ஒருவன் ஒரு காரியத்தைச் செய்யும்போது சில சமயங்களில் அந்தக் காரியத்தில் முகஸ்துதி கலந்து விடுவதும் உண்டு அல்லது முகஸ்துதி அல்லாத வேறு தீய குறிக்கோள்கள் முளைத்து விடுவதும் உண்டு.

உதாரணமாக, ஒருவன் நோன்பு பிடிக்கிறான். இறைவனின் அன்பைப் பெறுவது, தன் தேகாரோக்கியத்தை வலுப்படுத்திக் கொள்வது ஆகிய இரண்டு குறிக்கோள்களை அவன் மனத்தில் கொண்டிருக்கிறான். அல்லது அடிமைக்குச் செலவாகும் பணத்தை மிச்சப்படுத்துவதற்கும் அவனுடைய தொல்லைகளிலிருந்து விடுதலை பெறுவதற்கும் அவனை உரிமை விடுகிறான் அவன் எஜமானன். பிரயாண நடவடிக்கைகளால் தன் ஆரோக்கியம் பெருக வேண்டும் என்ற எண்ணத்துடன் ஒருவன் 'ஹஜ்'ஜுக்குப் புறப்படுகிறான் அல்லது தன் சொந்த ஊரில் ஏற்பட்டிருக்கும் குறுக்கீட்டைச் சமாளிக்கும் எண்ணத்துடனே, தன் வீட்டிலேயே

இருக்கும் விரோதியை விட்டு ஒதுங்கும் எண்ணத்துடனே, மனைவி மக்களைத் துயரத்தில் ஆழ்த்தும் எண்ணத்துடனே, சில நாள்கள் நிம்மதியாகச் சுற்றிவிட்டு வரலாம் என்ற எண்ணத்துடனே அவன் ஹஜ்ஜுக்குப் போகிறான்.

மற்றொருவன் போர்க்கலையில் தேர்ச்சி பெறும் எண்ணத்துடன் புனிதப் போரில் ஈடுபடுகிறான். போரில் ஈடுபடுவதால் அதிலுள்ள விஷயங்களை அவன் அறிந்து கொள்ளலாம். அதன் உதவியால் ஒரு படையை அணிவகுத்து தன்னால் நடத்திச் செல்ல முடியும் என்று கருதுகிறான். அதற்கு வேண்டிய திறமையை அடைய வேண்டும் என்பது அவன் குறிக்கோள்.

ஒருவன் இரவு நேரத்தில் இறை வணக்கம் புரிகிறான். இதில் அவனுடைய சொந்த நோக்கம் உண்டு. இதன் மூலம் சில நன்மைகளை அவன் எதிர்பார்க்கிறான். இரவு நேரத்தில் இறை வணக்கம் புரிவதால் தூங்குமூஞ்சித்தனம் விரட்டப்படுகிறது. இதன் உதவியால் அவன் தன் பொருளையும் மனைவி மக்களையும் பாதுகாக்கலாம்.

பொருள் திரட்டுவதற்கு வேண்டிய வசதிகளை இலகுவில் பெறும் எண்ணத்துடன் மற்றொருவன் கல்வி கற்கிறான் அல்லது குடும்பத்தாருக்கிடையில் கண்ணியத்தோடு விளங்குவதற்காக அப்படிச் செய்கிறான். அப்படியும் இல்லாவிட்டால் தன் உடைமைகளைப் பார்த்துப் பிறர் ஆசைப்படக் கூடாது என்பதற்காக இப்படி நடக்கிறான். தான் கல்வியறிவு பெற்றிருந்தால் தன் உடைமைகளைப் பார்த்து யாரும் ஆசைப்பட பாட்டார்கள் என்பது அவன் எண்ணம்.

நாலு பேர் சேர்ந்து வாய் மூடி மௌனமாக உட்கார்ந்திருப்பதை விரும்பாததால் ஒருவன் உபதேசம் செய்கிறான் அல்லது பேசிக் கொண்டிருப்பதில் அவன் இன்பம் காண்பதால் இப்படிச் செய்கிறான்.



இன்னொருவன் அறிஞர்களிடமோ சாதுக்களிடமோ பழகுகிறான். அவர்களிடமும் மற்ற மனிதர்களிடமும் தன் மதிப்பு உயர வேண்டும் என்பது அவன் எண்ணம். இல்லாவிட்டால், உலகிலேயே பெரிய இடத்து நட்பைப் பெறுவதற்காக இப்படிப் பெரியார்களிடம் பழகுகிறான்.

தன் எழுத்து அழகு பெற வேண்டும் என்பதற்காக ஒருவன் திருமறையை எழுதி முடிக்கிறான்.

பிரயாணச் செலவைக் குறைப்பதற்காக ஒருவன் நடந்தே ஹஜ்ஜுக்குப் போகிறான்.

உடற் சுத்தத்திற்காகவோ குளிர்ச்சிக்காகவோ வேறொருவன் 'உலூ' செய்கிறான் அல்லது புத்துணர்வு பெறுவதற்காகக் குளிக்கிறான்.

திருநபி (ஸல்) அவர்களின் பொன்மொழிகளைப் பலர் இன்றுவரை ஒருவர்பின் ஒருவராய்க் கூறிவந்திருக்கின்றனர். இப்படிக் கூறிவருபவர்களின் சிறப்பைக் காட்டுவதற்காக ஒருவன் ஒரு பொன்மொழியைக் கூறுகிறான். வீட்டு வாடகையை மிச்சம் பிடிப்பதற்காக இன்னொருவன் பள்ளியில் குடியிருக்கிறான்.

உணவு தயாரிக்கும் சிரமத்தைத் தவிர்ப்பதற்காகவோ உணவருந்துவதற்குப் போதிய அவகாசம் இல்லை என்பதற்காகவோ மற்றொருவன் நோன்பு பிடிக்கிறான்.

ஒருவன் யோசிக்கிறான். பணக்காரன், ஒருவன்மீது இரக்கம் கொள்கிறான். அந்த ஏழையின் நிலையைப் பார்த்து அவன் மனம் சங்கடப்படுகிறது. ஆகவே, தன் மனச் சங்கடத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக அந்தப் பணக்காரன் ஏதோ உதவி செய்கிறான்.

தான் வியாதியுற்றால் மற்றவர்கள் தன்னை வந்து பார்க்க வேண்டும் என்பதற்காக ஒருவன் ஒரு நோயாளியைப் பார்க்கச் செல்கிறான்.

பிரேதம் சுமந்து செல்லப்படும்போது ஒருவன் பின் தொடர்ந்து செல்கிறான் - தான் இறந்துவிட்டால் மற்றவர்கள் பின் தொடர்ந்து வரவேண்டும் என்பதற்காக.

இவ்வாறு ஒவ்வொன்றையும் நீயே பார்த்துக் கொள்ளலாம். இவை நற்காரியங்களைப் போன்றுதான் தோற்றமளிக்கின்றன. நற்காரியங்கள் என்றுதான் எல்லோரும் சொல்வார்கள். ஆனால், இவை ஒவ்வொன்றும் இறைவனை மனத்தில் கொண்டே செயலாற்றப்பட வேண்டும். இத்தகைய காரியம் ஒன்றில் நீ ஈடுபடும் போது உன் மனத்தில் இறைவனின் எண்ணத்தோடு மற்ற எண்ணங்கள் கலந்துவிட்டால், அந்தக் காரியம் தூய்மையற்றதாகி விடும். இறைவனுக்காகச் செய்யப்படும் காரியத்தில் மற்ற எண்ணங்கள் துளிர்த்தால் அந்தக் காரியம் இலகுவாகிவிடும். சிரமமான காரியமாயிருந்தாலும் பல தரப்பட்ட சபல எண்ணங்களால் அது உனக்கு எளிதாகவே தோன்றும். அதை நீ எளிதில் செய்து முடித்துவிட்டலாம். ஆனால், இத்தகைய செயல்கள் 'இணை வைத்தல்' என்ற குற்றத்திற்கு வழி வகுக்கின்றன என்பதையும் மனத்தில் இருத்திக்கொள். ''நண்பர்களின் கூட்டுறவு, இணைப்பு எனக்குத் தேவையில்லை'' என்றான் இறைவன்.

சுருங்கச் சொன்னால், உலகில் பல்வேறு இன்பங்கள் சிதறிக் கிடக்கின்றன. அவை ஒவ்வொன்றையும் மனிதனின் உள்ளம் விரும்புகிறது; அவற்றை அடையத் துடிக்கிறது. ஒரு செயலில் இறைவனல்லாத இதர குறிக்கோள்கள் உருவாகும்போது அதில் கறை படிகிறது; அதன் தூய்மை பறிக்கப்படுகிறது.

மனிதன் இன்பங்களோடு இணைந்தவன்; அவற்றை அடைவதில் ஆர்வம் கொண்டவன். தான் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் அதிகமாகவோ குறைவாகவோ அவன் இன்பத்தை எதிர்பார்க்கிறான். எனவே, ஒரு செயலில் உலக இன்பங்களில் எதுவும் இல்லையாயின் அதைச் செய்ய அவன் மனம்



தயங்குகிறது. ஆகவே, வெவ்வேறு குறிக்கோள்களை உருவகப் படுத்திக் கொள்வதன் மூலம் அவன் திருப்தியடைகிறான். இதனால் தான், ''தன் வாணாளில் ஒருவன் ஒரு விநாடி நேரம் ஒருமித்த மனத்தோடு இறைவனைத் துதித்தால் போதுமானது. அவன் வெற்றியடைந்து விடுவான்'' என்று பெரியோர்கள் கூறினார்கள். ஒருமித்த மனநிலை என்பது அவ்வளவு சிறப்பு வாய்ந்தது.

தீய எண்ணங்கள் அனைத்தை விட்டும் உள்ளத்தைத் தூய்மைப்படுத்துவது சிரமமான காரியம். இறையண்மையை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு செயலாற்றுபவனே உண்மையில் தூய்மையான மனம் படைத்தவன்.

இறைவனுக்காகச் செயலாற்றும் ஒருவனின் மனத்தில் மற்ற எண்ணங்கள் ஏற்பட்டால் எத்தகைய விளைவு ஏற்படும் என்பதை மேலே குறிப்பிட்டேன். இறைவனை எண்ணியும் பார்க்காமல், மற்ற முரணான எண்ணங்களுடன் செயலாற்றுபவனின் நிலை இன்னும் விபரீதமானது என்பதை விவரிக்க வேண்டியதில்லை. இறையெண்ணத்திற்கு மாற்றமான எல்லா எண்ணங்களை விட்டும் செயலைத் தூய்மைப்படுத்த வேண்டும். இறையண்மையையே எந்தச் செயலிலும் குறிக்கோளாக்கிக் கொள்ள வேண்டும். அந்தச் செயலைச் செய்வதற்கு அந்தக் குறிக்கோள் ஒன்றே காரணமாக இருக்க வேண்டும்.

ஆனால், இப்படி எல்லோராலும் செயலாற்றிவிட முடியாது. இறைவனை விரும்புபவர்கள், அவன் சட்டத்தைப் பின் பற்றுபவர்கள், மறுமைக்கான காரியங்களில் மூழ்குபவர்கள்- இவர்களால்தான் அப்படியெல்லாம் நடக்க முடியும். ஏனெனில், இவர்களின் உள்ளத்தில் உலக ஆசாபாசங்களுக்கு இடமேயில்லை. உண்பதையும் குடிப்பதையும் கூட இவர்கள் அதிகமாக விரும்பமாட்டார்கள். மனித உடலின் இயற்கையமைப்பை யொட்டியே அவர்கள் உணவு உட்கொள்வார்கள். உணவை

அவர்கள் 'உணவு' என்கிற முறையில் விரும்புவதில்லை. 'அது, இறைவணக்கத்தில் ஈடுபடுவதற்குப் புதுத் தெம்பு அளிக்கிறது' என்ற முறையிலேயே விரும்புவார்கள். பசியால் ஏற்படும் துன்பத்தைச் சகித்துக் கொள்வதற்கும் அவர்கள் துணிவார்கள். அதன் பிறகு உணவை எண்ணியும் பார்க்க வேண்டிய தேவை ஏற்படாதல்லவா? தேவைக்கதிகமாக அவர்கள் உலக விவகாரங்களில் தலையிட மாட்டார்கள்.

மார்க்கத்தின் அவசியத்தை யொட்டியே அவர்கள் எதையும் செய்வார்கள்.அத்தகையவர்கள் செய்யும் எல்லாக் காரியங்களும்-அவர்கள் உண்பதும் குடிப்பதும் கூட-தூய்மையோடு அமைந்து விடும் என்பதில் சந்தேகமில்லை.

உதாரணமாக, அத்தகைய பக்குவ நிலையையடைந்த ஒருவன் தூங்குகிறான். தூக்கம் என்பதும் ஒரு செயல்தான். இந்தச் செயலில் அவன் இன்பம் காண்கிறான். ஏனெனில், தூக்கத்தின் காரணமாக உடலில் புத்துணர்வு பிறக்கிறது. இதனால், அவன் புத்துணர்வோடு இறைவணக்கத்தில் ஈடுபடலாம், இப்படிப் பார்க்கும்போது அவனது தூக்கம் அவனது வணக்கத்திற்குத் துணை செய்கிறது. எனவே, தூக்கமும் வணக்கமாக மாறுகிறது.

இவ்வாறு எண்ணிச் செயலாற்றாதவர்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மனத்தூய்மை அடைவது சாத்தியமில்லை.

ஒரு மனிதன் இறைவனையும் மறுமையையும் விரும்புகிறான். இந்த விருப்பத்திற்குத் தகுந்தபடி அவன் செயல்கள், நடவடிக்கைகள் அமைந்துவிட்டால் அவன் தூய்மையான மனம் படைத்த வனாகிறான்.

மற்றொருவன் இம்மையை விரும்புகிறான்; உயர்வையும் தலைமைத்துவத்தையும் விரும்புகிறான். சுருங்கச் சொன்னால், இறைவன் அல்லாத மற்றவற்றைக் குறிக்கோள்களாக்கிக்



கொள்கிறான். அதற்குத் தகுந்தபடி அவன் நடவடிக்கை அமைந்துவிட்டால், அவன் பிடித்த நோன்பும் அவன் நிறைவேற்றிய தொழுகையும் இதர வணக்கங்களும் பயனற்றுப் போகின்றன. பெரும்பாலான நேரங்களில் அவனால் வெற்றியைக் காண முடியாது.

அப்படியானால், மனத்தூய்மையை உண்டாக்கிக் கொள்ள விரும்புபவன் முதலில் தன் மனத்தை அடக்கியாள வேண்டும். அதனுள் உலக இன்பங்கள் நுழையாதபடி செய்யவேண்டும். மறுமை பற்றிய எண்ணத்தைத்தான் அனுமதிக்க வேண்டும். இவ்வாறு செய்தால் மன ஒருமை எளிதில் உண்டாகிவிடும்.

மனிதன் மிகுந்த சிரமத்துடன் எத்தனையோ காரியங்களைச் செய்கிறான். அவை அனைத்தையும் அவன் தூய்மையானவை என்றுதான் எண்ணுகிறான். ஆனால், அவை அவனை ஏமாற்றி விடுகின்றன. அவ்வாறு ஏமாற்றம் ஏற்படுவதற்குரிய காரணம் என்ன என்பதைக் கூட அவனால் அறிந்து கொள்ள முடிவதில்லை.

''பள்ளியில் முதல் வரிசையில் நின்று நான் முப்பது ஆண்டுகள் இறை வணக்கம் புரிந்தேன்'' என்றார் ஒரு பெரியார். ''ஒரு நாள் நான் சற்றுத் தாமதித்துவிட்டேன். இரண்டாவது வரிசையில் எனக்கு இடம் கிடைத்தது. இரண்டாவது வரிசையில் நின்ற என்னை மக்கள் பார்த்தபோதெல்லாம் எனக்கு வெட்கமாய் இருந்தது. அப்போதுதான் எனக்கு ஓர் உண்மை புலப்பட்டது. மக்களின் கவனத்தைக் கவர்வதற்காகவே நான் இத்தனை ஆண்டுகளாய் முதல் வரிசையில் நின்று வணங்கி வந்திருக்கிறேன் என்பதை அப்போதுதான் நான் உணர்ந்தேன். இந்தச் சபல எண்ணம் எனக்குத் தெரியாமலேயே என் உள்ளத்தில் இருந்து வந்திருக்கிறது.''

இது நுட்பமான விஷயம். இறைவனின் பேரருள் பெற்ற ஒரு சிலரால் மட்டுமே இத்தகைய சபல எண்ணத்திற்கு இடமில்லாதவாறு தூய்மையாகச் செயலாற்ற முடியும். அசட்டையாயிருப்பவர்கள்,

தாங்கள் இம்மையில் செய்த நற்காரியங்கள் அனைத்தையும் மறுமையில் தீய காரியங்களாகவே காண்பார்கள். இவர்களைத்தான் இறைவன், ''அவர்கள் எண்ணியும் பார்த்திராதவற்றை நாம் அவர்களுக்கு வெளிப்படுத்துவோம்'' என்று குறிப்பிடுகிறான். ''அவர்களுடைய செயல்களின் தீங்குகள் அவர்களுக்கு வெளியாகும்.''

மீண்டும் குறிப்பிடுகிறான்: ''செயல்கள் புரிந்துவருந்துபவர்கள் யார் என்பதை அவர்களுக்கு நாம் காண்பிக்க வேண்டுமா என்று நீர் கேளும். இம்மையில் அவர்களின் முயற்சி பயனற்றுப் போய்விட்டது. தாங்கள் நற்காரியம் புரிவதாகவே அவர்கள் எண்ணிக் கொண்டார்கள்.''

மேற்குறிப்பிட்ட விபரீதத்தில் வன்மையாகச் சிக்கிக் கொண்டவர்கள் அறிஞர்களே. ஏனெனில், பெரும்பாலான அறிஞர்கள் தங்களிடமுள்ள அறிவுச் செல்வத்தைத் தீய நோக்கத்துடனேயே பிறருக்குப் போதிக்கிறார்கள். தங்களை மற்றவர்கள் பின்பற்ற வேண்டும் என்றும், தங்களை அவர்கள் பாராட்ட வேண்டும் என்றும் எதிர்பார்க்கிறார்கள்.

இத்தகைய எண்ணங்களை எல்லாம் அவர்களின் மனத்தில் 'ஷைத்தான்' உண்டாக்குகிறான். ''இல்லை; நீங்கள் தவறு செய்யவில்லை. இறைவனுக்காகவே நீங்கள் போதிக்கிறீர்கள். அவன் மார்க்கத்தைப் பரப்புவதற்கே போதிக்கிறீர்கள்'' என்று உபதேசம் செய்கிறான்.

மக்களுக்கும் அரசனுக்கும் ஒருவன் உபதேசம் புரிகிறான். அந்த உபதேசத்தை அவர்கள் ஏற்றுக் கொண்டால், அவன் மகிழ்ச்சியடைகிறான். இதற்குக் காரணம் கூறுகிறான்: ''இறைவனின் மார்க்கம் பரவுகிறது என்பது குறித்தே நான் மகிழ்ச்சியடைகிறேன்.''

ஆனால், அதே காலத்தில் அவனைவிடச் சிறந்த பிரசங்கியொருவன் தோன்றிவிட்டதாக வைத்துக் கொள்வோம்.



மனத்தைக் கவரும் வகையில் அவன் பிரசங்கம் செய்கிறான். மக்கள் அனைவரும் அவன் பிரசங்கத்தைக் கேட்கத் திரண்டு செல்கிறார்கள். இறைவனின் மார்க்கம் பரவ வேண்டியதுதானே? நியாயப்படி பார்த்தால் இந்தச் சிறந்த பிரசங்கியைப் பார்த்து முன்னவன் திருப்தியடைய வேண்டும். அவனை எண்ணி இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். அதுதான் நியாயம். ஏனெனில், அவனது விருப்பத்தை இறைவன் வேறொரு பிரசங்கியின் மூலம் நிறைவேற்றி விட்டானல்லவா? அவன் மகிழ்ச்சியடைகிறானா? இல்லையே! மாறாக, தன் மதிப்புக் குன்றுகிறதே என்று வருந்துகிறான்; மக்களின் கவனம் வேறொருவன்பால் திருப்பப்பட்டுவிட்டதே என்று கலங்குகிறான். எனவே, அவன் இரண்டாவது பிரசங்கியைப் பார்த்து முகம் சுளிக்கிறான்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஷைத்தான் வருகிறான்; சமாதானம் சொல்கிறான்: ''உம்மீது தவறு கிடையாது. அந்தப் பேச்சாளனைப் பார்த்து நீர் பொறாமைப் படவுமில்லை, மதிப்புப் பறிபோய்விட்டதே என்று நீர் வருந்தவுமில்லை. இக்கவலைக்கு ஒரு காரணம் உண்டு. நான் சொல்கிறேன், கேளும். நீர் மக்களுக்கு நற்போதனை செய்து வந்தீரல்லவா? அப்போதெல்லாம் இறைவன் உமக்கு நற்கூலி அளித்து வந்தான். இப்போது வேறொரு பேச்சாளன் வந்துவிட்டான். எனவே உமக்குக் கிடைக்க வேண்டிய நற்கூலி அளித்து வந்தான். இதனை எண்ணியே நீர் வருந்துகிறீர். நன்றாக வருந்தும். ஏனெனில், நற்கூலி தவறிவிட்டதே என்று எண்ணி வருந்துவது பாராட்டுக்குரிய செய்கையாகும்.''

தன்னால் செய்ய முடிந்த காரியம் ஒன்றைத் தன்னைவிடச் சிறந்த ஒருவரிடம் ஒப்படைப்பது மேலான செய்கைதான், ஆனால், அதற்காக வருந்தத்தான் வேண்டுமா? அபூபக்கர் (ரலி) அவர்கள் 'கலீபா'வாக நியமிக்கப்பட்டபோது உமர் (ரலி) அவர்கள் வருந்தினார்களா? அப்படி அவர்கள் வருந்தியிருந்தால் அது பாராட்டுக்குரிய செய்கையாகுமா? இல்லை—அப்படி வருந்துவது

இழிவான செயல் என்பதில் மார்க்கம் பற்றுள்ளவர்கள் சந்தேகம் கொள்ள மாட்டார்கள். உமர்(ரலி)அவர்கள் வருந்தவில்லை; கவலைப்படவில்லை. மாறாக மகிழ்ச்சியடைந்தார்கள். ஏனெனில், தம்மைவிட மேலான ஒருவர் அந்தப் பதவிக்கு நியமிக்கப் பட்டிருக்கிறார் என்பதில் அவர்களுக்குத் திருப்தி.

அறிஞர்களின் நிலைமை என்ன? இதுபோன்ற விஷயங்களில் அவர்கள் ஆனந்தமடைவதில்லை; ஷைத்தானின் போதனையால் சிலர் தவறிப் போகிறார்கள். தம்மைவிட மேலானவர்கள் தோன்றினால் தம் காரியங்களை—பொறுப்புகளை அவர்களிடம் ஒப்படைத்து விட்டுத் தம்மால் திருப்தியோடு இருக்க முடியும் என்று அவர்கள் அனுபவமின்றியே எண்ணிக் கொண்டிருக் கிறார்கள். இப்படி எண்ணுவது முட்டாள்தனம். மனம் விசித்திரமானது. அது எதற்கும் இலகுவில் இணங்கி விடுவதாகவே தோன்றும். எந்தக் காரியத்துக்கும் அது எளிதில் தலை சாய்த்துவிடும். ஆனால், அந்தக் காரியத்தைச் செய்து முடிக்க வேண்டிய நேரம் வரும்போது எதிர்வாதம் புரிய ஆரம்பித்துவிடும். ஷைத்தானின் சூழ்ச்சியையும் உள்ளத்தின் மோசடியையும் உணர்ந்த ஒரு சிலரால் மட்டுமே இந்த உண்மையைக் கண்டுணர முடியும். அவர்கள் நீண்ட நான் அனுபவத்திற்குப் பிறகு உண்மையை அறிகிறார்கள்:

மன ஒருமை, தூய்மையான செயல்—இவை பற்றிய அறிவு, ஆழ்கடல் போன்றது. மிகச் சிலரைத் தவிர்த்து மற்றவர்கள் எல்லோரும் அதில் மூழ்கி மூழ்கித் தத்தளிக்கிறார்கள். அந்த மிகச் சிலரைத்தான் இறைவன் ‘ஒருமித்த மனம் படைத்தவர்கள்’ என்று குறிப்பிடுகிறான்.

மானிடன் நன்கு ஆராய வேண்டும். இந்த நுட்பங்களை எல்லாம் அவன் அலசிப் பார்க்க வேண்டும். இல்லையேல், தனக்குத் தெரியாமலே, சுய உணர்வின்றியே அவன் ஷைத்தானைப் பின்பற்ற ஆரம்பித்து விடுவான்.

## 8. சில சான்றுகள்

சூஸீகூறினார்: ‘தூய்மையைப் பார்க்காதிருப்பது தான் தூய்மை. ஏனெனில், தன் மனத்திலும் செயலிலும் தூய்மை இருக்கிறது என்று ஒருவன் எண்ணினால், அந்த எண்ணத்தை அகற்றி மனத்தை மீண்டும் தூய்மைப்படுத்த வேண்டிய தேவை ஏற்படுகிறது.''

தற்பெருமைக்கு இடம் கொடுக்காமல் செயலாற்ற வேண்டும் என்பதை சூஸீ சுட்டிக் காட்டுகிறார். தன்னிடம் உளத்தூய்மை இருக்கிறது என்று ஒருவன் எண்ணினால், அவன் தற்பெருமை கொண்டவனாகிறான். வணக்கத்தைப் பாழ்படுத்தும் ஆபத்துகளுள் தற்பெருமையும் ஒன்றாகும். எந்த ஆபத்தும் இல்லாத ஒருவனையே நாம் ‘தூய்மை படைத்தவன்’ என்று குறிப்பிடுகிறோம். சூஸீ தமது கூற்றில் மேற்குறிப்பிட்ட ஆபத்துகளுள் ஒன்றைச் சுட்டிக் காட்டுகிறார்.

ஸஹ்ல் கூறினார்: ''முயற்சிகள் அனைத்தும் இறைவனுக் காகவே இருக்க வேண்டும். இதனைத்தான் மன ஒருமை என்று

குறிப்பிடுகிறோம்.'' மன ஒருமை பற்றி முழு விவரமும் இங்கு விளக்கப்பட்டிருக்கிறது.

இதே கருத்தில் தான் இப்றாஹீம் பின் அக்ஹம் கூறினார்: ''இறைவன்மீது உண்மையான நல்லெண்ணம் கொள்வதே உளத் தூய்மை.''

''மனத்தைக் கடினமாகப் பாதிப்பது எது?'' என்று வினா எழுந்தது ஒரு சமயம்;

பெருந்தகை ஸஹ்ல் விடையிறுத்தார்: ''மன ஒருமை! அதில் இன்பம் காணும் பேறு உள்ளத்திற்குக் கிடையாது.''

ருவைம் என்ற பெரியார் கூறுகிறார்: ''இம்மையிலோ மறுமையிலோ பிரதிபலனை எதிர்பார்க்காமல் செயலாற்றுவதே மன ஒருமை.'' இம்மையின் இன்பத்தை அடைவதற்கோ மறுமையின் இன்பத்தை நுகர்வதற்கோ செயலாற்றுவது ஆபத்து நிறைந்தது என்ற உண்மை இங்குச் சுட்டிக் காட்டப்படுகிறது. ஏனென்றால், மறுமையில் சுவனத்தில் கிடைக்கும் இன்பங்களை எண்ணி–சுவன மாதரிடமிருந்து கிடைக்கும் இன்பத்தை எண்ணி இறை வணக்கம் புரிபவன் மனோவியாதி கொண்டவன் என்பதில் சந்தேகமில்லை. இப்படியெல்லாம் செய்யக் கூடது. இறைவனுக்காகவே எதையும் செய்ய வேண்டும். இது மிக உயர்ந்த உத்தமர்களின் படித்தரம். இம்மையின் இன்பங்களை வெறுத்து, மறுமையின் இன்பங்களை எதிர்பார்த்து, மறுமைத் தண்டனைக்குப் பயந்து ஒருவன் செயலாற்றினால் அவனும் மனத் தூய்மை உள்ளவன்தான். ஏனெனில், உலக இன்பங்களை அவன் துச்சமாக மதித்துவிட்டானல்லவா? உலகில் உணவையும் மங்கையரையும் குறிக்கோளாகக் கொள்ளவில்லைவா? எனவே, அவனுக்கு 'மனத் தூய்மையுள்ளவன்' என்ற பெயர் நிச்சயம் பொருந்தும். ஆனால் புத்திசாலிகளின் உண்மையான குறிக்கோள் இறைவன் ஒருவனே. அவனைத் தவிர்த்து வேறு எதையும் அவர்கள் விரும்ப மாட்டார்கள்.



''பிரதிபலனாகக் கிடைக்கும் இன்பத்தை எண்ணியே மனிதன் எதையும் செய்கிறான்'' என்று யாரோ கூறினார்கள். ''இன்பங்கள் அனைத்தையும் விட்டு தனித்திருப்பது இறை தன்மையாகும். இந்தத் தன்மை தன்னிடம் இருப்பதாக ஒருவன் வாதாடினால் அவன் முரண்வழி செல்பவனாகிறான்.''

நீதிபதி அபூபக்கர் பாகில்லானீ, ''இவ்வாறு வாதாடுபவன் 'காபிர்' ஆகிவிட்டான்'' என்று தீர்ப்பளித்துவிட்டார். ''ஏனெனில் இன்ப உணர்ச்சிகள் அனைத்தையும் விட்டுத் தனித்திருப்பது இறை குணங்களில் ஒன்றாகும்'' என்று காரணம் காட்டினார்.

நீதிபதியின் கூற்றில் உண்மை இருக்கிறது. ஆனால், அறிஞர் பெருமக்கள் வேறு வழியில் செல்கிறார்கள். சுவனத்தில் கிடைக்கும் பேறுகளையே மக்கள் 'இன்பங்கள்' என்று சொல்கிறார்கள். அறிஞர்கள் அப்படிச் சொல்வதில்லை. இறைவனைப் பற்றிய அறிவு, இறைவன் சம்பந்தப்பட்ட சிந்தனை, இறைவனின் திருச் சந்திப்பு—இவற்றைத்தாம் அவர்கள் 'இன்பங்கள்' என்று சொல்கிறார்கள். ஆனால், பொது மக்கள்—பாமரர்கள் இவற்றுள் எதற்கும் 'இன்பம்' என்று பெயர் கொடுப்பதில்லை. போதாததற்கு அறிஞர்களின் போக்கைப் பார்த்து இவர்கள் ஆச்சரியமும் படுகிறார்கள். மக்கள் இன்பம் என்று கருதாத ஒன்றில் அறிஞர்கள் இன்பம் காண்கிறார்கள். அவர்களின் இன்பம் வேறு; இவர்களின் இன்பம் வேறு. அறிஞர்கள் எதை இன்பம் என்று கருதுகிறார்களோ, அதற்குப் பதிலாக அவர்களுக்குச் சுவன இன்பங்கள் அனைத்தும் அளிக்கப்பட்டாலும் அவர்கள் ஆனந்தமடைய மாட்டார்கள். சுவன இன்பங்களை உதறி எறிந்துவிடுவார்கள். இவர்களும் இன்பத்திற்காகத்தான் செயலாற்றுகிறார்கள். இறைவன் என்ற இன்பத்திற்காகவே செயல்படுகிறார்கள். ஒரே ஒரு வித்தியாசம், எந்த இன்பத்தை அவர்கள் குறிக்கோளாகக் கொண்டிருக் கிறார்களோ, அந்த இன்பத்தையே அவர்கள் வணங்குகிறார்கள். தாம் இன்பம் எனக் கொள்ளாத வேறு எதையும் அவர்கள் வணங்குவதில்லை.

அபூ உஸ்மான் கூறினார்: ''இறைவனைப் பற்றிய சிந்தனையின் மூலம் மக்களை மறந்து விடுவதுதான் மன ஒருமை.''—முகஸ்துதிக்கு இடமில்லாதபடி செயலாற்ற வேண்டும் என்ற உண்மை இங்குச் சுட்டிக் காட்டப்படுகிறது. ஏனெனில், முகஸ்துதி என்பது மக்களைப் பற்றிய சிந்தனையால் ஏற்படக் கூடியது. ஒருவன் மக்களையே மறந்துவிடும்போது அவன் மனத்தில் முகஸ்துதிக்கே இடமில்லாமற் போய்விடுகிறது.

இதனால்தான் ''ஷைத்தானுக்கும் வானவருக்கும் தெரியாதபடி மனிதன் செயலாற்ற வேண்டும். ஏனெனில், ஷைத்தான் அந்தச் செயலை அறிந்தால் அதைக் கெடுத்து விடுவான். வானவர் அறிந்தால் அதைக் குறித்துக் கொள்வார்கள்'' என்று சிலர் கூறினார்கள். எதையும் மறைவாகவே செய்ய வேண்டும் என்ற கருத்துச் சூசகமாகக் காட்டப்படுகிறது.

''எந்தச் செயல் மக்களின் பார்வையை விட்டு மறைந்திருக்கிறதோ—எந்தச் செயல் மக்களின் தொடர்புகளை விட்டுத் தனித்திருக்கிறதோ, அந்தச் செயல்தான் தூய்மை வாய்ந்தது'' என்று கூறப்படுகிறது. இந்த இடத்தில் மன ஒருமை பற்றிய விளக்கத்தின் சாரம் முழுவதும் காணப்படுகிறது.

''இறைவனின் விவகாரங்களை விட்டு மக்களை வெளியேற்றுவதுதான் மன ஒருமை'' என்று முஹாஸிப் கூறினார். இங்கு முகஸ்துதி கண்டிக்கப்படுகிறது.

இதே கருத்தைச் சில சிறந்த அறிஞருள் சிலர் இப்படி வெளியிட்டனர்: ''முகஸ்துதி கொண்டவன் மன ஒருமை இழந்து விட்டான்.''

''தூய்மையான செயல் எது?'' என்று ஒரு சமயம் வினா எழுந்தது.

ஈஸா (அலை) அவர்கள் விடையளித்தார்கள்: ''இறைவனுக் காகச் செய்யப்படும் செயல்! இவ்வாறு செயலாற்றுபவன்



யாரிடமும் பாராட்டை எதிர்பார்க்கக் கூடாது.'' இங்கும் முகஸ்துதியே கண்டிக்கப்படுகிறது. எத்தனையோ தீய உணர்வுகளுக்கு மத்தியில் முகஸ்துதியை மட்டுமே ஈஸா நபியவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

ஏனெனில், மன ஒருமையைக் கெடுக்கும் உணர்வுகளில் முகஸ்துதியே மிக வன்மையானது.

ஜுனைத் கூறினார்: ''கலப்படமில்லாதபடி செயலாற்றுவதே மன ஒருமை.''

புலைல் கூறினார்: 'மக்களுக்காக ஒரு காரியத்தைச் செய்வது இணை வைப்பதாகும். மக்களுக்காக ஒரு காரியத்தை விடுவது முகஸ்துதியாகும், இவ்விரு தன்மைகளை விட்டும் இறைவன் உன்னைக் காப்பாற்றிவிட்டால், நீயே மன ஒருமை படைத்தவன்; உளத் தூய்மை கொண்டவன்.''

''பிரதிபலனை எதிர்பார்க்காமல் நிரந்தரமான இறைச் சிந்தனையில் ஈடுபடுவதுதான் மன ஒருமை'' என்று சிலர் கூறுகிறார்கள்.

மேலே நான் குறிப்பிட்டது பூரணமான விளக்கமாகும். இது சம்பந்தமாக அறிஞர்களின் கருத்துக்கள் ஏராளமாக இருக்கின்றன. ஆனால் அந்தரங்கமான, அடிப்படையான உண்மை தெளிவான பிறகும், அவற்றைக் கூறுவதில் எத்தகைய பயனும் கிடையாது.

இது சம்பந்தமாக பெருமானார் அவர்களின் விளக்கம் மிகத் திருப்திகரமாக அமைந்திருக்கிறது. மன ஒருமை குறித்து அவர்கள் வினவப்பட்டபோது இவ்வாறு விடையளித்தார்கள்: ''நீ கூற வேண்டும், 'அல்லாஹ் ஒருவனே என் நாயன்' என்று. பின்னர் நீ கட்டளையிடப்பட்டதுபோலச் செவ்வையாகச் செயலாற்று.''

நபியவர்களின் கூற்றுக்குப் பொருள் இதுதான்: ''உன் இச்சைக்கும் மன உணர்ச்சிக்கும் நீ கட்டுப்படக் கூடாது. அவற்றை

நீ வணங்கக் கூடாது. உன் நாயனையே நீ வணங்க வேண்டும். அவனது வணக்கத்தைச் செவ்வையாக நிறைவேற்ற வேண்டும்.''

இறைவனைத் தவிர்த்து மற்ற அனைத்தையும் மனத்திலிருந்து வெளியேற்றிவிட வேண்டும் என்ற உண்மை இங்குச் சுட்டிச் காட்டப்படுகிறது. இவ்வாறு வெளியேற்றுவது தான் உண்மையில் மன ஒருமை.

# 9. தீமையின் படித்தரங்கள்

மன ஒருமையைக் கெடுக்கும் விபரீதத் தன்மைகள் எத்தனையோ இருக்கின்றன. அவற்றுள் சில, பகிரங்கமானவை. வேறு சில, உறுதியானவை. மற்றும் சில பல வீனமானவை. அவற்றுள் மிகக் கொடியது முகஸ்துதி. உதாரணத்தின் மூலம் அதன் படித்தரங்களை விளக்குகிறேன்.

ஒரு மனிதன் ஒருமித்த மனத்தோடு இறை வணக்கம் புரிகிறான்: அதைத் தற்செயலாகச் சிலர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். இந்தக் கட்டத்தில் தான் ஷைத்தான்* அந்த மனிதனின் மனத்தில் முகஸ்துதியை உண்டாக்குகிறான். ''மக்கள் எல்லோரும் உன்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, நீ

* இந்த நூலில் 'ஷைத்தான்' என்று அனேக இடங்களில் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. பெரும்பாலான இடங்களில் மனிதனின் மனத்தைத் தான் இமாமவர்கள் 'ஷைத்தான்' என்று குறிப்பிடுகிறார்கள். ஏனெனில், ஷைத்தானும் மனமும் ஒரே மரத்துக் காய்கள் என்பது அவர்கள் கருத்து.

முறைப்படி வணங்க வேண்டும். உன்னை அவர்கள் இழிவாக மதித்துவிடக் கூடாது. உன்னைப் பற்றி அவர்கள் புறம் பேசக்கூடாது. எனவே, முறைப்படி செயலாற்று'' என்று போதிக்கிறான். இதனால், அந்த மனிதனின் அவயவங்கள் செவ்வையாய் இயங்குகின்றன. அவனது வணக்கம் முறைப்படி நிறை வேற்றப்படுகிறது.

இதுதான் பகிரங்கமான முகஸ்துதி. இதை யாரும் உணர்ந்து கொள்ளலாம். ஆத்மீக வழியில் முதலடி வைத்திருப்பவர்களால் கூட இதை உணர்ந்துகொள்ள முடியும். இது முதற் படித்தரம்.

இரண்டாம் படித்தரம்: மற்றொருவன் மேற்குறிப்பிட்ட விபரீதத்தை உணர்ந்து கொள்கிறான். ஷைத்தானின் போதனையை மறுத்துவிடுகிறான். எப்போதும்போல் ஒருமித்த மனத்தோடு செயலாற்றுகிறான். இந்தக் கட்டத்தில் அவன் வேறொரு விதத்தில் வழி கெடுக்கப்படுகிறான்.

''நீ மக்களால் பின்பற்றப்படுகிறாய். மக்கள் அனைவரும் உன்னைப் பின்பற்றித் தொழுகிறார்கள். உன்னை அவர்கள் கண்ணியமாக மதிக்கிறார்கள். நீ சிறந்த முறையில் செயலாற்றினால், அவர்களுக்குக் கிடைக்கும் நற்கூலி உனக்கும் உண்டு. இறை வணக்கத்தில் நீ குறை வைத்தால், உன்மீது குற்றம் சுமத்தப்படும். எனவே, அவர்களுக்கு எதிரில் நல்ல முறையில் இறை வணக்கத்தை நிறைவேற்று. உன்னுடைய மேலான வணக்கத்தைப் பார்த்து அவர்கள் உன்னைப் பின்பற்றட்டும்'' என்று ஷைத்தான் போதிக்கிறான்.

இது முதற் படித்தரத்தைவிட ஆழமானது. முந்தியதில் தவறிப் போகாதவர்கள் இதில் தவறிவிடக்கூடும். இதுவும் முகஸ்துதிதான், மன ஒருமையைப் பாழ்படுத்தக் கூடியது தான். ஏனெனில், சிறந்த முறையில் செயலாற்றுவதை அவன் நல்ல காரியம்தான் என்று கருதினால் மற்றவர்களுக்காக அதை அவன் விடப்போவதில்லை.



ஆனால், தனிமையில் இறைவணக்கம் புரியும்போது சிறந்த முறையில் செயலாற்றத் தவறிவிடுகிறோனே. சிலர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதால் ஒழுங்கான முறையில் வணக்கம் புரிய அவன் ஏன் முனைய வேண்டும்? தன் ஆத்மாவைவிட மற்றவர்களின் ஆத்மாக்களை அவன் சிறந்தவை எனக் கருதுகிறானா?—இது ஏமாற்றம் நிறைந்த ஒன்றாகும்.

தன்னைப் பொறுத்த வரையில் சீராக இறை வணக்கம் புரியும் ஒருவனே மக்கள் பின்பற்றுவதற்குத் தகுதியுள்ளவன். அவன் மற்றவர்களுக்காக எதையும் செய்யான் எதையும் விடமாட்டான். அவன் உள்ளம் ஒளிவிட்டுத் துலங்கும். அந்த ஒளி மற்றவர்களின் உள்ளத்திற்குப் பரந்து விரியும். இதனால், மக்கள் அவனைப் பின்பற்றித் தொழும்போது மக்களுக்குக் கிடைக்கும் நற்கூலி அவனுக்கும் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், தன்னிடம் இல்லாத ஒரு தன்மையைத் தன்னிடமிருப்பதாகக் காட்டிக் கொள்பவன் தண்டிக்கப்படுவான்.

மூன்றாம் படித்தரம்: இது முந்திய இரண்டு படித்தரங் களையும்விட நுட்பமானது. ஒரு மனிதன் தன் உள்ளத்தின் போக்கை அனுபவ வாயிலாய் அறிகிறான்: சொந்த அனுபவத்தின் மூலம் சில உண்மைகளை அவன் உணர்கிறான். ஷைத்தானின் சூழ்ச்சியைத் தெரிந்து கொள்கிறான். மக்களுக்கு முன்னால் ஒருவிதமாகவும், மக்கள் இல்லாத தனியிடத்தில் வேறொரு விதமாகவும் செயலாற்றுவது முகஸ்துதி என்பதைத் தெளிவாக உணர்ந்து கொள்கிறான். தனிமையிலும் மக்களின் முன்னிலையிலும் ஒரேவிதமாய்ச் செயலாற்றும் போதுதான் மன ஒருமை உண்டாகிறது என்பதைத் தெரிந்து வைத்திருக்கிறான். எனவே, தன் மனத்தைப் பார்த்து அவன் வெட்கப்படுகிறான்; இறைவனை எண்ணி வெட்கப்படுகிறான். ஏனெனில், மக்களின் கவனத்தைக் கவர்வதற்காக அவன் தன் வழக்கத்தைக் காட்டிலும்

அதிகமாக இறை வணக்கத்தில் அக்கறை செலுத்திவிட்டான். ஆகவே, தன்னிடமுள்ள இந்தக் குறையை அகற்ற விரும்புகிறான். தனியிடம் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறான். மக்களின் முன்னிலையில் எத்தனை ஒழுங்குடன் செயலாற்றினானோ அத்தனை ஒழுங்குடன் தனியிடத்துத் தொழுகையை அவன் நிறைவேற்றுகிறான். இதற்குத் தன்னைப் பழக்கப்படுத்திக் கொள்கிறான். இந்தக் கட்டத்தில் முறைப்படி இறை வணக்கம் புரிவது அவனுக்கு இயற்கையாகி விடுகிறது. ஆகவே, சந்தர்ப்பம் கிடைக்கும்போது மக்களின் முன்னிலையில் தன் இயற்கையையொட்டி இறை வணக்கம் புரிகிறான்.

இதுவும் முகஸ்துதிதான். இது ஆழமானது. ஏனென்றால் மக்களின் முன்னிலையில் தன் வணக்கம் திறம்பட அமையவேண்டும் என்னும் மன எழுச்சியாலேயே அவன் தனியிடத்து வணக்கத்தை முறைப்படி நிறைவேற்றப் பழகுகிறான். ஆதலால், அவன் வணக்கத்தில் மக்களைப் பற்றிய எண்ணத்திற்கு இடம் ஏற்பட்டுவிட்டது. எனவே, அவன் வணக்கம் முகஸ்துதியாக மாறுகிறது.

ஆனால், மன ஒருமை கொண்டவன் இப்படி எல்லாம் செய்ய மாட்டான். ஆடு,மாடு முதலான மிருகங்களுக்கு முன்னால் எப்படிச் செயலாற்றுவானோ அப்படிதான் மக்களுக்கு முன்னாலும் அவன் செயலாற்றுவான். இவ்விரண்டற்கு மிடையில் அவன் செயலில் வித்தியாசத்தைக் காண முடியாது. மக்களின் பார்வையில் தன் செயலின் தரம் குறைவது குறித்து அவன் கவலைப்படமாட்டான்.

தனிமையிலும் பலர் முன்னிலையிலும் ஒரே விதமாகச் செயலாற்றுவதன் மூலம் இந்த முகஸ்துதி மாறிப்போய்விடும் என்று சிலர் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். அறியாமை! அவர்கள் எண்ணுவதுபோல் அந்தக் காரியம் அத்தனை எளிதானதல்ல. அதற்கு ஒரே ஒரு வழி; இறை வணக்கத்தின் போது மக்கள்



அனைவரையும் அவன் மறந்துவிட வேண்டும்—மரம், மட்டை முதலான உயிரற்ற உள்ளவைகளை மறந்து விடுவதுபோல. மக்களின் உணர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடுப்பவர்கள்தாம் இதில் சிக்கிக் கொள்கிறார்கள். இது ஷைத்தானின் சூழ்ச்சிகளில் மிகவும் நுட்பமானது.

நான்காம் படித்தரம்: இது எல்லாவற்றையும்விட நுட்பமானது; பொது மக்களால் அறிந்துகொள்ள முடியாத அளவிற்கு மருமமானது. ஒருவன் இறைவணக்கம் புரிகிறான். அவன் கெட்டிக்காரன். எனவே, ஷைத்தான் தயங்குகிறான். ''மக்கள் பார்த்துக் கொண்டிருப்பதால் முறைப்படி செயலாற்று'' என்று அவனால் பகிரங்கமாகப் போதிக்க முடியவில்லை. ஏனெனில், இந்தப் போதனையிலுள்ள சூழ்ச்சியை அந்த மனிதன் உணர்ந்து கொள்வான் என்று ஷைத்தானுக்கும் தெரியும். ஆகவே, அவன் வேறொரு கோணத்திலிருந்து போதிக்கிறான். ''இறைவனின் வல்லமையை எண்ணிப் பார். அவனது அடக்கு முறையை நினைத்துப்பார். அவன் முன்னால் நின்று இறை வணக்கம் புரிவதற்கு நீ அருகதையுள்ளவன்தானா? வெட்கப்படு. உன் உள்ளத்தை அவன் பார்த்துவிடப் போகிறான்......''

இந்தப் போதனையால் அவன் உள்ளத்தில் இறையச்சம் விரிகிறது. அவனது அவயவங்களில் அதன் சாயல் படிகிறது. அவன் வணக்கம் முறைப்படி நிறைவேற்றப்படுகிறது. இதை அவன் மன ஒருமை என்று எண்ணுகிறான். ஆனால், உண்மை அப்படியில்லை. இது ஒரு சூழ்ச்சி; புரட்டு. ஏனெனில் இறைவனின் வல்லமையை எண்ணி அவன் முறைப்படி செயலாற்றுகிறான் என்று வைத்துக் கொண்டால், இதே மனநிலை தனியிடத்துத் தொழுகையிலும் அவனுக்கு ஏற்பட வேண்டுமே. அப்படியின்றி மற்றவர்கள் பார்க்கும்போது மட்டும் இந்த நிலை ஏற்படுவதற்குக் காரணம் என்ன? எனவே, இதுவும் முகஸ்துதிதான்.

இப்படியெல்லாம் செயலாற்றுவது தகாது. மக்கள் இருக்கும் நேரத்தில் மட்டுமன்றி யாருமே இல்லாத நேரத்திலும் அவன் முறைப்படி செயலாற்ற வேண்டும். வல்லவனின் பேராற்றல்களை எண்ணிச் செயல்பட வேண்டும். மற்றவர்களின் வருகை, அவனது முறையான வணக்கத்திற்குக் காரணமாக இருக்கக்கூடாது. வணக்கத்தின்போது அந்த இடத்திற்கு ஒரு மிருகம் வந்தால் அவன் மனத்தில் இறையச்சம் உண்டாகவிடுவதில்லை. இதேபோன்று வணக்கத்தின்போது ஒரு மனிதன் வந்தால் வணங்குபவனின் உள்ளத்தில் திடீரென இறையச்சம் ஏற்படக்கூடாது. மனிதனின் பார்வைக்கும் மிருகத்தின் பார்வைக்கும் இடையில் அவன் வேற்றுமையை உருவாக்கக் கூடாது. யார் இருந்தாலும் யார் இல்லாவிட்டாலும் அவன் முறைப்படி செயல்புரிய வேண்டும். இதுதான் ஒரு மனிதனின் மனத்தில் தூய்மை ஏற்பட்டிருக்கிறது என்பதற்கு அறிகுறி.

இவ்வாறு அவன் நடக்காவிடில் அவனது மனத்தூய்மை— மன ஒருமை பறிக்கப்பட்டுப் போய்விடும். மருமமான இந்த முகஸ்துதியால் அவன் உள்ளம் கறைப்படுத்தப்பட்டுவிடும். இந்த முகஸ்துதி மிகவும் மருமமானது. இருள் சூழ்ந்த இரவில், வழவழப்பான கறுப்புப் பாறைமீது, சிற்றெறும்பு ஒன்று எவ்வளவு மெதுவாக ஊர்ந்து செல்லுமோ, அவ்வளவு மெதுவாக முகஸ்துதி மனித மனத்தின் அடித்தளத்தில் ஊர்ந்து திரிகிறது. இதற்குப் பெருமானார் அவர்களின் பொன்மொழி சான்று பகர்கிறது.

ஆழ்ந்த சிந்தனை, இறைவனின் பேரருள், தெய்வீக அறிவுறுத்தல் ஆகிய அனைத்தையும் ஒருங்கே பெற்ற சிலரால் தாம் ஷைத்தானின் பிடியிலிருந்து தப்ப முடியும். காரணம்: இறை வழிச் செல்ல முற்படும் மனிதனை அவன் எப்போதும் கண்காணிக்கிறான். ஒரு வினாடியும் அவன் கவனம் வேறு பக்கம் திரும்புவதில்லை. மனிதனின் செயல்கள் ஒவ்வொன்றிலும் அவன் எப்படியாவது முகஸ்துதியை உண்டாக்கிவிடுகிறான். கண்ணுக்கு



'சுருமா'இடுவது, மீசை வெட்டுவது, வெள்ளிக்கிழமை யன்று வாசனைத் திரவியம் பூசுவது, உடை அணிவது—இப்படி எல்லா விஷயத்திலும் அவன் முகஸ்துதிக்கு இடம் வைத்துவிடுகிறான்.

இந்தக் காரியங்களைத் திருநபி (ஸல்) அவர்கள் செய்து வந்திருக்கிறார்கள். எனவே, இவற்றைச் செய்வது 'சுன்னத்து.' இவற்றைச் செய்யும்போது மனிதன் இன்பமடைகிறான். ஏனெனில் மக்கள் தன்னைக் கவனிக்க வேண்டும் என்றும், தன்னை அவர்கள் விரும்ப வேண்டும் என்றும் அவன் எதிர்பார்க்கிறான். அவனது எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு ஷைத்தான் அவனைத் தீய வழிக்குத் திருப்புகிறான். "இது சுன்னத்து. இதை நீ விட்டுவிடக் கூடாது" என்று நாசூக்காகப் போதிக்கின்றான். இது நல்ல காரியம் தான். என்றாலும், ஷைத்தானின் துர்ப்போதனையால் அவன் மனத்தின் அடித்தளத்தில் மக்களின் கவனத்தைப் பெறும் எண்ணம் துளிர்க்கிறது. ஷைத்தான் அப்படிப் போதிக்காவிடில், வேறு விதத்தில் அவனை நெருங்குகிறான். அவன் மனத்தில் தேவையற்ற எண்ணங்களை உண்டாக்கி அவனது மன ஒருமையைக் கெடுத்து விடுகிறான். இவை ஒவ்வொன்றும் முகஸ்துதியே. மேற்குறிப்பிட்ட விபரீதங்கள் அனைத்தை விட்டும் தனித்த ஒருவனையே நாம் 'மன ஒருமை கொண்டவன்' என்று குறிப்பிடுகிறோம்.

அருமையான ஒரு பள்ளிவாயில். அழகிய அமைப்புடன் அது எழுப்பப்பட்டிருக்கிறது. தூய்மையாயும் கவர்ச்சியாயும் அமைந்திருக்கிறது அதன் தோற்றம். இந்தப் பள்ளியில் சில நாள்கள் தங்க விரும்புகிறான் ஒருவன்.* இந்த விருப்பம் சாதாரணமாக

* பெரியோர்கள் தங்கள் ஜாகையை அடிக்கடி பள்ளிக்கு மாற்றிக் கொள்வார்கள். இதனால் இறை வணக்கம் புரிவதற்கும் மற்ற நேரங்களில் இதர நற்செயல்களில் ஈடுபடுவதற்கும் வசதி ஏற்படுகிறது. இவ்வாறு பள்ளியில் தங்குவதை 'இஃதிகாப்' என்பார்கள் சட்ட நிபுணர்கள். இந்த இடத்தில் இமாம் கஸ்ஸாலி அவர்கள் இஃதிகாபைத்தான் குறிப்பிடுகிறார்கள்.

எல்லாருக்கும் ஏற்படுகிறது. இந்தக் கட்டத்தில் ஷைத்தான் வருகிறான். அந்தப் பள்ளியில் தங்கும் ஆர்வத்தைத் தூண்டுகிறான். இந்தத் தூண்டுதலுக்கு அந்த மனிதன் தலை சாய்க்கிறான். எனவே, அவன் அழகும் வசதியும் இல்லாத மற்றப் பள்ளிகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு, அழகும் வசதியும் கொண்ட இந்தப் பள்ளியைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறான். இது மன ஒருமையைக் குலைக்கும் சக்தி கொண்டது என்பதை இங்கு நாம் நினைவு கூர வேண்டும்.

கலப்படத்தின் காரணமாகத் தங்கத்தின் தரம் குறைகிறது. இவ்வாறு தங்கத்தின் தன்மையைக் களங்கப்படுத்தும் பொருள்கள் எத்தனையோ இருக்கின்றன. அவற்றுள் சில, தங்கத்தின் தன்மையைப் பெரும்பாலும் மாற்றிவிடும். வேறு சில, சாதாரண மாற்றத்தைக் கொடுக்கும். அதைத் தொழில் வல்லுநர்களால் மட்டுமே கண்டுணர முடியும். அந்தக் கலப்படம் அவ்வளவு நுட்பமாக இருக்கும். ஆனால், மனத்தில் ஏற்படும் கலப்படம், ஷைத்தானின் சூழ்ச்சி முதலியவை இன்னும் நுட்பமானவை. அவற்றை எளிதில் கண்டுபிடிக்க முடியாது.

இதனால், ''அறிஞன் ஒருவனின் இரண்டு 'ரகஅத்' வணக்கம். அறிவிலி ஒருவனின் ஓராண்டுக்கால வணக்கத்தை விடச் சிறந்தது'' என்று பெரியோர்கள் கூறினார்கள். இறை வணக்கத்திற்கிடையே ஏற்படும் அபாயங்களை நன்கு அறிந்த மனிதனையே அவர்கள் 'அறிஞன்' என்று குறிப்பிடுகிறார்கள். அவன் அபாயங்களை அறிந்திருப்பதால் அவற்றைத் தவிர்த்து ஒதுக்கிவிட்டு மன ஒருமையோடு அவனால் செயலாற்ற முடிகிறது. ஆனால், அறியாதவர்கள் இப்படிச் செயலாற்றுவது சாத்தியமில்லை. ஏனென்றால், அறியாத மனிதன் வெளிப்படையான செயல்களையே பார்ப்பான். மருமமான எதையும் அவனால் பார்த்தறிய முடியாது. தொழிற் பயிற்சியில்லாதவன் தங்க மூலாம் பூசப்பட்ட பொருளைப் பார்த்து ஏமாறிப்போவது போல, அவன் செயல்களின் வெளித் தோற்றத்தைப் பார்த்து ஏமாந்து போகிறான்.



அவன் மனத்தில் இருள் குடியேறுகிறது; மனத் தூய்மை வெளியேறுகிறது; தொழிற் பயிற்சியுள்ளவன் தேர்ந்தெடுக்கும் ஒன்று தொழிற் பயிற்சியில்லாதவன் தேர்ந்தெடுக்கும் ஒன்றைவிட மேலானது என்பதில் என்ன சந்தேகம்?

இதுபோலவே இறை வணக்கமும் பல்வேறு படித்தரங்களாய்ப் பிரிகிறது. இன்னும் சொல்லப்போனால். இறைவணக்கம் என்பது எல்லாவற்றையும்விட வன்மை வாய்ந்ததாகும். அதில் குறுக்கிடும் ஆபத்துகளை வரம்பிட்டுக் கூற முடியாது. எனவே, நான் மேலே கூறிய உதாரணங்களை வைத்து நீ பயனடைய வேண்டும். புத்திசாலிக்குக் கொஞ்சம் சொன்னாலே போதும். மந்த புத்தியுள்ளவனுக்கு அதிகமாகச் சொன்னாலும் பயன் ஏற்படாது. ஆதலால், விரிவாக எழுதுவதில் எத்தகைய நன்மையும் கிடையாது.

# 10. செயலும் நற்கூலியும்

செயல்கள் அனைத்தும் இறைவனுக்காகவே மேற்கொள்ளப்பட வேண்டும். இறைவன்பால் மனத்தை ஒருமுகப்படுத்தியே செயலாற்ற வேண்டும். அப்படியின்றி ஒரு மனிதனின் செயலில் முகஸ்துதி முதலான தீய எண்ணங்கள் கலந்துவிட்டால் அந்தச் செயலுக்குக் கிடைக்கும் பிரதிபலன் சம்பந்தமாக அறிஞர் பெருமக்கள் அபிப்பிராய வேற்றுமை கொண்டிருக்கிறார்கள். 'நன்மை உண்டு' எனச் சிலரும், 'தண்டனை கிடைக்கும்' என சிலரும் கருதுகின்றனர். இன்னும் சிலர் இப்படிக் கருதுகின்றனர்: ''அந்தச் செயலுக்குப் பிரதியாக அந்த மனிதனுக்கு நன்மையும் கிடையாது; தண்டனையும் கிடையாது.''

இறைவனைப் பற்றிய எண்ணமே இல்லாமல் முற்றிலும் முகஸ்துதியையே குறிக்கோளாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் செயல் மறுமையில் தண்டனையைத் தேடித்தரவல்லது. தீய எண்ணங்கள் எதுவும் கலக்காதபடி, இறைவனுக்காக மட்டுமே மேற்கொள்ளப்படும் செயல் நற்கூலியைத் தேடித்தரக் கூடியதாகும்.

இறைவனைப் பற்றிய எண்ணத்தோடு முகஸ்துதி முதலான தீய எண்ணங்கள் கலந்த செயலைப் பற்றியே நாம் இப்போது ஆராய வேண்டும்.



திருநபி (ஸல்) அவர்களின் பொன்மொழிகளைப் பொதுப்படையாகப் பார்க்கும்போது, இத்தகைய செயல்களுக்கு எத்தகைய நற்கூலியும் கிடையாது என்றே தோன்றுகிறது. அதே சமயத்தில் ஆழ்ந்த சிந்தனைக்கும் அவற்றில் இடமுண்டு.

மறுமைத் தண்டனை, நற்கூலி பற்றிய அறிவு இறைவன் ஒருவனுக்கே சொந்தமானது. எனினும், ஒரு செயலில் கலந்திருக்கும் எண்ணங்களைப் பொறுத்துதான் அதற்குத் தண்டனையோ நற்கூலியோ அளிக்கப்படுகிறது என்று நாம் கருதுகிறோம். ஒரு செயலில் இறையெண்ணமும் முகஸ்துதியும் ஒரே அளவில் கலந்திருந்தால் அந்தச் செயல் தூய்மையடைகிறது. அதற்குத் தண்டனை கிடையாது. ஒரு செயலில் இறைவனைப் பற்றிய எண்ணத்தைவிட முகஸ்துதிவுணர்வு அதிகமாகக் கலந்துவிட்டால், அந்தச் செயல் தூய்மை இழக்கிறது. இவைபோன்ற செயல்களால் எவ்வித நற்கூலியும் கிடைக்காததோடு, தண்டனையையும் அவை தேடித் தருகின்றன. இந்தச் செயலுக்குத் தண்டனை இருந்தாலும், முகஸ்துதியை மட்டுமே நோக்கமாய்க் கொண்டு மேற் கொள்ளப்பட்ட செயலுக்குக் கிடைக்கும் தண்டனையைவிட இது மிகவும் இலேசானதாகும். ஒரு செயலில் தீய எண்ணத்தைவிட நல்லெண்ணம் எவ்வளவு மடங்கு அதிகமாக இருக்கிறதோ அவ்வளவு மடங்கு அதிகமாக நற்கூலி அளிக்கப்படும்.

இந்த விளக்கத்திற்கு ஆதாரமாக இறைவன் கூறுகிறான்: ''ஒருவன் சிறிதளவு நன்மை செய்தாலும் அவனுக்கு நற்கூலியுண்டு. ஒருவன் சிறிதளவு தீமை புரிந்தாலும் அவனுக்குத் தண்டனையுண்டு.''

இன்னும் கூறுகிறான்: ''நாம் அணுவளவும் அநீதி இழைப்பதில்லை. நற்செயலுக்கு நாம் நற்கூலியளிக்கிறோம்.''

எனவே, ஒரு மனிதனின் மனத்தில் உருப்பெறும் நல் லெண்ணத்தை இறைவன் வீணாக்கிவிட மாட்டான்; அதற்குத் தகுந்த

நற்கூலியை அவசியம் அளிப்பான். முகஸ்துதியைவிட நல்லெண்ணம் அதிகமாகக் கலந்திருந்தால் முகஸ்துதியின் அளவுக்கு நல்லெண்ணத்தைக் கழித்துவிட்டு, எஞ்சியிருக்கும் பதவிக்கு நற்கூலி அளிக்கப்படும். இதற்கு நேர்எதிராக இருந்தால்—அதாவது, நல்லெண்ணத்தைவிட முகஸ்துதி அதிகமாகக் கலந்திருந்தால் அந்த நல்லெண்ணத்தின் காரணமாகத் தண்டனை சற்றுக் குறைக்கப்படலாம்.

இது சிக்கலான விஷயம். எனவே, சிக்கலகற்றித் தெளிவுபடுத்தவேண்டிய தேவை ஏற்படுகிறது.

செயல்களால் ஏற்படும் விளைவுகள் உள்ளத்தையே பாதிக்கின்றன. அதன் தன்மையை உறுதிப்படுத்துகின்றன. முகஸ்துதியின் விளைவு பயங்கரமானது; விபரீதத் தன்மை கொண்டது. மனத்திலுள்ள இந்த உணர்ச்சிக்குத் தகுந்தபடி செயலாற்றும்போது முகஸ்துதியுணர்வு வலுவடைகிறது. நல்லெண்ணத்தின் விளைவு முக்தி தரவல்லது, நன்மை பயக்கவல்லது. இந்த உணர்ச்சிக்குத் தக்கபடி செயல்படுத்தும் போது நல்லெண்ணம் உறுதிப்படுகிறது. ஒன்றுக்கொன்று முரண்பட்ட இந்த இரண்டு தன்மைகளும் ஒரு மனிதனின் மனத்தில் ஒரே சமயத்தில் இடம் பெற்றிருப்பதாக வைத்துக்கொள்வோம். அவன் முகஸ்துதிக்குத் தக்கபடி செயலாற்றினால் அவன் உள்ளத்தில் முகஸ்துதியுணர்வு வலுப்படுத்தப்படுகிறது. இதுபோலவே அவன் நல்லெண்ணத்திற்குத் தகுந்தபடி செயலாற்றினால் அவன் மனத்தில் நல்லெண்ண உணர்வு உறுதிப்படுத்தப்படுகிறது. இவற்றுள் ஒன்று மனிதனைப் பாழ்படுத்தும் சக்தி கொண்டது. மற்றொன்று அவனுக்கு முகஸ்துதியைத் தேடித் தரும் ஆற்றல் படைத்தது. நல்லெண்ணமும் முகஸ்துதியும் சம அளவில் கலந்திருந்தால் விபரீதம் கிடையாது. முகஸ்துதியால் ஏற்படும் விளைவு, நல்லெண்ணத்தின் சக்தியால் அப்புறப்படுத்தப்படும்-உஷ்ணமான பொருளை உட்கொண்டதால் ஏற்பட்ட வியாதி, குளிர்ச்சியான பொருளை உட்கொள்வதன் மூலம் அப்புறப்படுத்துவது போன்று.



எனவே ஒருவன் முகஸ்துதியும் நல்லெண்ணமும் சம அளவில் கலந்த செயல் ஒன்றைச் செய்தால் அவன் உள்ளத்தின் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டுவிடாது. ஆனால் இவற்றில் ஒன்று மற்றொன்றைவிட அதிகமாக இருந்தால், அது தன் குணத்தை அவசியம் காட்டும்-ஒரு பிடிச்சோறு, ஒரு மடக்குத் தண்ணீர் சிறிதளவு மருந்து இவை ஒவ்வொன்றும்தன் குணத்தை, தன் சக்தியை உடலில் பிரதிபலித்துக் காட்டுவதுபோன்று.

இதேபோன்று சிறிதளவு நன்மையும் சிறிதளவு தீமையும் சக்தியற்றுப் போய்விடுவதில்லை. அவை உள்ளத்தைச் சிறிதளவேனும் ஒளிமயமாக்கும்-அல்லது இருள் மயமாக்கும். எனவே, மனிதன் சிறிய நன்மையாலும் இறைவனைச் சிறிதளவு சமீபிக்கலாம்; சிறிய தீமையாலும் அவன் இறைவனை விட்டுச் சிறிதளவு விலகிப்போகலாம். ஒரு சாண் முன்னேறியவன், ஒரு சாண் பின்னேறிவிட்டால் தன் பழைய இடத்திற்கே வந்து விடுவான். அவனுக்கு நன்மையும் கிடையாது, தண்டனையும் கிடையாது. ஒரு மனிதனின் செயல் அவனை இறைவனின் பக்கம் இரண்டு சாண் அளவுக்கு சமீபிக்கச் செய்வதாக வைத்துக் கொள்வோம். அவன் வேறோரு செயலைச் செய்கிறான். அந்தச் செயல் அவனை இறைவனிடமிருந்து ஒரு சாண் அளவுக்குப் பிரிக்கும் சக்தி கொண்டது. இந்தக் கட்டத்தில் அந்த மனிதன் ஒரு சாண் அளவுக்கேனும் இறைவனைச் சமீபித்தவனாகிறான்-இதை நீ ஊன்றிக் கவனிக்க வேண்டும்.

திருத்தூதர் அவர்கள் கூறினார்கள்: ''தீமைக்குப் பிறகு நன்மையைச் செய்யுங்கள். அது தீமையை அழிக்கட்டும்.'' முகஸ்துதியை மன ஒருமை அழிக்கிறது. இதற்கு முற்கால அறிஞர்களின் ஏகோபித்த அபிப்பிராயம் சான்று கூறுகிறது. ஒருவன் நல்லெண்ணத்தோடு 'ஹஜ்'ஜூக்குப் பிரயாணப் படுகிறான். அதே சமயத்தில் வியாபார நோக்கமும் அவனுக்கு இருப்பதாக வைத்துக் கொள்வோம். இந்த இடத்தில்

நல்லெண்ணத்தோடு உலக இன்பமும் கலக்கிறது. என்றாலும், அவன் நற்கூலியளிக்கப் படுவான் என்பதில் அறிஞர்களுக்கு மத்தியில் கருத்து வேற்றுமை கிடையாது. அவன் மக்கமாநகரை அடையும்போது அவனுடைய நற்கூலி நிருணயிக் கப்படும். இது அவனது நல்லெண்ணத்திற்குரிய அன்பளிப்பு. அவனது வர்த்தக எண்ணம் இதைப் பாதிக்காது. எனவே, அவனை 'மன ஒருமை கொண்டவன்' எனத் தாராளமாகக் கூறலாம்- இவ்வாறு அறிஞர் பெருமக்கள் தீர்மானித்திருக்கிறார்கள்.

என்றாலும், விஷயத்தை இன்னும் கொஞ்சம் ஆழமாக ஆராய இடமுண்டு. தேவாலயத் தரிசனம், வியாபார நோக்கம்- இவற்றுள் எதை அவன் முக்கியமாகக் கொண்டு புறப்பட்டான் என்று முதலில் ஆராய வேண்டும். தேவாலயத்தரிசனத்தை அவன் முக்கியமாகவும், வியாபாரத்தை இரண்டாந்தரமாகவும் கொண்டிருந்தால் அவன் பிரயாணத்திற்கு நிச்சயம் நற்கூலியுண்டு. இவ்வாறு கூறுவதுதான் நியாயம்.

இறை மார்க்கத்தைப் பரப்பும் எண்ணத்துடன் ஒருவன் போர் புரிகிறான். வெற்றிக்குப் பிறகு போர் முனையில் கிடைக்கும் பொருள்களை அடையும் எண்ணமும் அவனுக்கு உண்டு. இந்த மனிதனுக்கு நற்கூலியே கிடையாது எனக் கூறிவிட முடியாது. அவன் போரில் இறங்குவதற்கு முக்கியக் காரணம் என்ன என்று பார்க்க வேண்டும். இறை மார்க்கத்தைப் பரப்பும் எண்ணத்தையே அவன் முக்கியக் குறிக்கோளாகவும், போர்முனைப் பொருள்கள் பற்றிய எண்ணத்தை இரண்டாந்தரமாகவும் கொண்டிருந்தால் அவனுக்கு நிச்சயம் நற்கூலியுண்டு. ஆனால், போர்முனையில் கிடைக்கும் பொருள்களை எண்ணியும் பார்க்காமல், தூய நோக்கத்துடன் போர் புரியும் ஒருவனுக்குக் கிடைக்கும் நற்கூலி அதைவிட மேலானது என்பதில் சந்தேகமில்லை. போர்முனைப் பொருளை எண்ணிச் செயல்படுவது குறைபாடுதான். இதில் சந்தேகத்திற்கு இடமேயில்லை.



நீ கேட்கலாம்: முகஸ்துதி என்பது நற்கூலியைப் பாழாக்கும் சக்தி கொண்டது என்னும் உண்மையை நாம் திருமறையிலிருந்தும் பெருமானார் அவர்களின் பொன்மொழிகளிலிருந்தும் அறிகிறோம். வர்த்தகம் செய்யும் எண்ணம், போர்முனைப் பொருளை அடையும் எண்ணம் முதலியவை முகஸ்துதிபோன்றவை என்பதில் ஐயமில்லை.

''ஒருவன் தருமம் செய்கிறான். அதற்கு இறைவனிடம் நற்கூலியையும் மக்களிடம் பாராட்டையும் எதிர்பார்க்கிறான். அவன் நிலைமை என்ன?'' என்று யாரோ ஒருவர் பெருமானார் அவர்களை வினவினார். என்ன பதில் சொல்வது என்று அண்ணலவர்களுக்குப் புரியவில்லை. இந்தச் சமயத்தில் தான் இறைவனிடமிருந்து இப்படிச் செய்தி வந்தது. ''தாம் நாயனின் சந்திப்பை விரும்புபவர்கள் நற்காரியம் புரியட்டும்: இறை வணக்கத்தில் இறைவனோடு வேறு யாரையும் இணைக்காதிருக்கட்டும்!'' இந்தச் சம்பவத்தை தர்ஹூஸ் முதலானோர் விளக்குகிறார்கள்.

''சாதாரண முகஸ்துதியும் இறைவனுக்கு இணை வைப்பதுதான்'' என்றும் அண்ணலவர்கள் கூறினார்கள்.

''இணை வைத்துச் செயலாற்றுபவனுக்கு 'நீ யாருக்காகச் செயலாற்றினாயோ அவர்களிடம் நற்கூலியைப் பெற்றுக்கொள்' எனக் கட்டளையிடப்படும்'' என்று பிறிதோரிடத்தில் விளக்குகிறார்கள்.

இறைவன் கூறுகிறான்: எமக்கு நண்பர்களின் இணைப்புத் தேவையில்லை. ஒருவன் செயலாற்றும்போது எம்முடன் நண்பர்களை இணைத்தால். அந்த நண்பர்களிடமே அவன் பொறுப்பை விட்டு விடுவோம்.''

கிராமவாசி ஒருவர் அண்ணலவர்களை வினவினார்: ''ஒருவன் தற்காப்புக்குப் போர் புரிகிறான். மற்றொருவன் வீரத்தின் தூண்டுதலால் போர் புரிகிறான். இன்னொருவன் இறை வழியில் போர் புரிந்த தியாகி பட்டியலில் இடம் பெறுவதற்காகச் செயலாற்றுகிறான்.....''

திருத்தூதர் அவர்கள் துல்லியமாக விடையளித்தார்கள். ''இறை கருத்தைப் பரப்பும் எண்ணத்துடன் போரிட்டவனே உண்மையான தியாகி'' - இந்தச் சம்பவத்தை அபூமூஸா (ரலி) என்ற திருநபித் தோழர் விவரிக்கிறார்.

''மனிதன் உலக இன்பங்களில் எதை விரும்பிப் பிரயாணப்படுகிறானோ அதுதான் அவனுக்குக் கிடைக்கும்'' என்று அண்ணலவர்கள் விளக்கினார்கள்.

மேற்குறிப்பிடப்பட்டவற்றிலிருந்து தீய எண்ணம் நற்கூலியைப் பாழ்படுத்தும் தன்மை படைத்தது என்று அறிகிறோம்.

இவ்வாறு நீ வினவலாம்.

இதோ பதில் தருகிறேன். மேற்குறிப்பிட்ட திருநபிக் கருத்துகளில் எதுவும் என் கருத்துக்கு முரணாக அமையவில்லை என்பதை முதலில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மதக்கிரியைகளைக் கருவிகளாய் வைத்துக்கொண்டு உலக இன்பத்தைத் தேடுகின்றனர். இவர்களைத்தான் திரு நபியவர்கள் குறிப்பிடுகிறார்கள். இதனால்தான் அவர்கள், ''மனிதன் உலக இன்பங்களில் எதை விரும்பிப் பிரயாணப்படுகிறானோ அதுதான் அவனுக்குக் கிடைக்கும்'' என்று கூறினார்கள். உலக இன்பம் தேடுவதை நான் 'ஹராம்' என்று சொல்லவில்லை. அதற்கு மதக் காரியங்களைப் பயன்படுத்திக் கொள்வதுதான் ஹராம். ஏனெனில், இதில் முகஸ்துதி இடம் பெறுகிறது. வணக்கத்தின் நோக்கமே இந்தக் கட்டத்தில் வீணாக்கப்படுகிறது.

''நண்பர்களின் இணைப்பு எனக்குத் தேவையில்லை...'' என்ற இறைக்கருத்தைப் பார்ப்போம். இணைப்பு என்ற வார்த்தை பொதுவானது. நல்லெண்ணத்தோடு தீய எண்ணத்தைச் சம அளவில் கலக்கும்போதுதான் அந்த வார்த்தையை உபயோகிக்க முடியும். நல்லெண்ணமும் தீய எண்ணமும் சம அளவில் கலக்கும் போது ஏற்படும் நிலைமைகளை மேலே விவரித்தேன். இத்தகைய செயல்களுக்கு நன்மையும் கிடையாது, தண்டனையும் கிடையாது என்று முதலிலேயே சொல்லி விட்டேன்.



ஆனாலும், நல்லெண்ணத்தோடு தீய எண்ணத்தைக் கலக்கும் மனிதன் அபாயத்தை எதிர்பார்க்க வேண்டியவனாகிறான். ஏனென்றால், இவை இரண்டில் எது தன் மனத்தில் அதிகமாக இடம் பெற்றிருக்கிறது என்பதை அவனால் கண்டுபிடிக்க முடியாது. எனவே, சில சமயங்களில் இவ்வாறு கலப்படம் செய்வது அவனுக்குத் தீங்காகவே முடிந்துவிடக்கூடும். தனக்குத் தெரியாமலே அவன் நல்லெண்ணத்தைவிட அதிகமாகத் தீய எண்ணத்தைக் கலந்திருக்க முடியுமல்லவா? இதனால்தான், ''தம் நாயனின் சந்திப்பை விரும்புபவர்கள் நற்காரியம் புரியட்டும்; இறை வணக்கத்தில் இறைவனோடு வேறு யாரையும் இணைக்காதிருக்கட்டும்'' என்று இறைவன் கூறுகிறான்-இறையெண்ணத்தோடு மற்ற எண்ணங்களை இணைப்பவர்கள் ஏக நாயனின் சந்திப்பை எதிர்பார்க்க முடியாது என்கின்ற கருத்து இங்கு வலியுறுத்தப்படுகிறது.

புனிதப் போரில் ஈடுபட்டுத் தியாகிகளின் பட்டியலில் இடம் பெற விரும்புகிறான் ஒருவன். மன ஒருமையால்தான் அந்தப் பதவியைப் பெற முடியும். ஆனால், முழுக்க முழுக்க இறையெண்ணத்தால்-இறை மார்க்கத்தைப் பரப்பும் எண்ணத்தால் தூண்டப்பட்டவர்கள்தாம் அந்தப் பதவிக்கு அருகதையுள்ளவர்கள் என்று கூறிவிட முடியாது. எந்த அளவுக்கு மன ஒருமை ஏற்படுகிறதோ அந்த அளவுக்கு நற்கூலியுண்டு.

ஒரு மனிதனுக்கெதிரில் இரண்டு சைனியங்கள் நிற்கின்றன. அவற்றுள் ஒன்று பணச்சக்தி படைத்தது. மற்றொன்று வறுமை வசப்பட்டது. ஆகவே, அவன் பணக்காரச் சைனியத்துக்கு எதிரில் நின்று போர்புரிகிறான். இதில் இரண்டு நோக்கங்கள் இருக்கின்றன. புனிதப் போரில் ஈடுபட்டதாகவும் ஆகிறது. அதே சமயத்தில், வெற்றி கிடைத்தால் போர் முனைப் பொருள்கள் ஏராளமாகக் கிடைக்கலாம். அது பணப்பலம் பெற்ற படையல்லவா? இப்படி ஒருவன் செயலாற்றினால் அவனுக்கு நிச்சயம் நற்கூலி கிடையாது. இப்படியெல்லாம் ஏற்படாதபடி இறைவன் காத்தருள்வானாக!

இது சிக்கலான காரியம். இதனால், முஸ்லிம்களின் மனத்தில் அவநம்பிக்கை முளைவிடுகிறது, ஏனென்றால், இதுபோன்ற தீய உணர்வுகள் ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு. மிகச் சிலர்தாம், இதற்கு விதிவிலக்காக இருக்க வேண்டும். ஆனால், இத்தகைய தீய உணர்வுகளால் முழு நற்கூலியும் அழிக்கப்பட முடியாது. என்றாலும், அவை நற்கூலியை ஓரளவு குறைத்து விடுகின்றன. இது மானிடனுக்கு அபாயமான உணர்ச்சிதான். சில சமயங்களில் நல்லெண்ண உணர்வுதான் தன்னைச் செயலாற்றத் தூண்டுகிறது என்று அவன் எண்ணுகிறான். வேறு சில சமயங்களில் காரியம் நேர்முரணாய் அமைந்துவிடுகிறது. இது தீர்மானம் செய்ய முடியாத அளவுக்கு மருமமான விஷயம்.

மன ஒருமையே நற்கூலி கிடைப்பதற்கு வழி வகுக்கிறது. ஆனால், தன்னிடம் மன ஒருமை இடம் பெற்றிருக்கிறது என்று ஒரு மனிதனால் எளிதில் தீர்மானித்துவிட முடியாது. எனவே, அவன் மிகுந்த எச்சரிக்கையோடு இருக்க வேண்டும். சலியாத முயற்சியுடன் செயலாற்ற வேண்டும். தன் செயல் இறைவனால் அங்கீகரிக்கவும் படலாம், நிராகரிக்கவும் படலாம் என்ற எண்ணம் எப்போதும் அவன் மனத்தில் இருக்க வேண்டும். தன் வணக்கத்திற்கு எந்த நிமிஷமும் குறுக்கீடு ஏற்படலாம் என்று எண்ணி அவன் அஞ்ச வேண்டும். தன் செயலுக்குக் கிடைக்கும் நற்கூலியைவிட அதற்குக் கிடைக்கும் தண்டனை அதிகமாக இருப்பதும் சாத்தியமே என்று அவன் நினைத்துப் பார்க்க வேண்டும்.

இப்படித்தான் மனம் தெளிந்த முன்னோர்கள் நடந்தார்கள். மனம் தெளிந்த ஒவ்வொரு மனிதனும் இப்படித்தான் நடக்க வேண்டும். இதனால்தான், ''என்னுடைய பகிரங்கமான செயல்களை நான் கணக்கிடுவதில்லை'' என்று சுப்யான் கூறினார்.

அப்துல் அஸீஸ் என்பவர் கூறினார்: ''தேவாலயத்திற்கு அருகிலேயே நான் அறுபது ஆண்டுகள் தங்கியிருந்தேன். அறுபது



'ஹஜ்'ஜுகள் செய்திருக்கிறேன்.எனினும், இறைவனுக்காக நான் செயலாற்றும்போதெல்லாம் அதில் எப்படியோ ஷைத்தான் பிரவேசித்து விடுகிறான். எனவே, என் செயல்கள் எனக்கு நற்கூலியைக் கொடுக்கும் என்ற நம்பிக்கை அறுந்துபோய்விட்டது. தண்டனையோ நற்கூலியோ இல்லாத செயல்களாகத்தான் அவை இருக்க வேண்டும்.''

செயலாற்றும்போது முகஸ்துதி முதலான ஆபத்துகள் ஏற்படுகின்றன என்ற காரணத்தால் செயல்படுவதையே நிறுத்திவிடக் கூடாது. இது ஷைத்தானின் சூழ்ச்சிகளில் பிரதானமானது. செயலாற்றும் போது மனஒருமைக்கு இடமளிக்க வேண்டும். இதுதான் நம் குறிக்கோள். செயலையே விட்டுவிடுவது செயலையும் மன ஒருமையையும் வீணாக்குவதாகும். செயலே, விடப்படும்போது மன ஒருமை எவ்வாறு ஏற்பட முடியும்? செயலாற்றும்போது தானே மன ஒருமை உருவாகிறது.

அபூசயீத் என்ற அறிஞருக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தார் ஒருவர். அபூசயீதின் வேலைக்கு அவர் ஒத்தாசையாய் இருந்தார். ஒரு நாள் அபூசயீத் மன ஒருமையைப்பற்றிப் போதித்தார், இதன் பிறகு அந்தப் பணியாளர் ஒவ்வொரு செயலிலும் மன ஒருமையை உண்டாக்க முனைந்தார். மன ஒருமை எல்லா நேரங்களிலும் தோன்றாத காரணத்தால் அநேக வேலைகளை அவர் விட்டுவிட்டார். அவர் செய்ய வேண்டிய வேலைகள் தேங்கின. அதனால், அபூசயீதுக்குச் சிரமம் ஏற்பட்டது. எனவே, ஒரு சமயம் இது பற்றி அவர் விசாரித்தார்.

பணியாளர் பதிலளித்தார்: ''மன ஒருமையோடு செயலாற்றவே நான் விரும்புகிறேன். ஆனால், அநேக சமயங்களில் மன ஒருமை ஏற்படுவதில்லை. அப்போதெல்லாம் நான் செயலையே விட்டுவிடுகிறேன்.''

அபூசயீத் மறுத்துக் கூறினார்: ''நீர் செய்வது சரியல்ல! மன ஒருமை ஏற்படுவதில்லை என்பதால் செயலாற்றுவதையே நிறுத்திவிடக் கூடாது. வழக்கப்படி நீர் தொடர்ந்து செயலாற்ற வேண்டும். மன ஒருமையை உண்டாக்கிக் கொள்வதற்கு முனைய வேண்டும்.''

நானும் இப்படிதான் சொல்கிறேன். செயலை விட்டுவிடுமாறு உனக்கு நான் கூறவில்லை. ''மன ஒருமையோடு செயலாற்று'' என்றே கூறுகிறேன். புலைல் என்ற அறிஞர் கூறியிருப்பதை இங்கு நாம் நினைவு கூரவேண்டும்: ''மக்களுக்காக ஒரு காரியத்தை விடுவது முகஸ்துதியாகும். மக்களுக்காக ஒரு காரியத்தைச் செய்வது இணைவைப்பதாகும்.''

மூன்றாம் பாகம்

# 11. உண்மையான நடவடிக்கைகள்

இறைவன் கூறுகிறான்: ''தாம் இறைவனுக்குக் கொடுத்த வாக்குறுதியை அவர்கள் உண்மையாக்குகிறார்கள்.'' உண்மை என்பது நன்மைக்கு வழி காட்டுகிறது. ஒரு மனிதன் உண்மையைக் கூறிவரும்போது 'உண்மையாளன்' என்கிற பெயர் அவனுக்குக் கிடைக்கிறது. பொய் என்பது தீமைக்கு வழி காட்டுகிறது. தீமை என்பது நரகத்திற்கு வழி காட்டுகிறது. ஒரு மனிதன் பொய்யைக் கூறி வரும்போது 'பொய்யன்' என்கிற பட்டம் அவனுக்கு அளிக்கப்படுகிறது.

'உண்மையாளன்' என்கிற வார்த்தை 'உண்மை' என்னும் மூலத்திலிருந்து உருவானது. இந்த வார்த்தையைக் கூறி இறைவன் தன் அன்பிற்குரிய தீர்க்கதரிசிகளை வருணிக்கிறான், பாராட்டு கிறான். ''இந்த நூலில் நீர் இப்ராஹீமை (அலை) நினைவுகூர வேண்டும். அவர் உண்மையாளராயும் திருத்தூதராயும் இருந்தார்.''

இன்னும் கூறுகிறான்: ''இஸ்மாயீலை (அலை) நினைத்துப் பாரும்! அவர் வாக்குறுதியை உண்மையாக்குபவராயும் இறைச்செய்தியை அறிவிக்கும் திருத்தூதராயும் இருந்தார்.''

பிறிதோரிடத்தில்: ''இத்ரீஸை (அலை) நினைவு கூர்வீராக! அவர் உண்மையான தீர்க்கதரிசியாயிருந்தார்.''

இப்னு அப்பாஸ் (ரலி) விவரித்தார்கள்: ''உண்மை, வெட்கம், நற்குணம், நன்றி-இவை நான்கும் ஒரு மனிதனிடம் இடம் பெற்றிருந்தால் அவன் வெற்றியடைந்துவிட்டான்.''

பிஷ்ருபின் ஹர்ஸ் கூறினார்: 'உண்மையோடு இறை தொடர்பு கொள்பவன் மக்களை வெறுத்து விடுகிறான்.''

அபூ அப்துல்லாஹ விளக்குகிறார்: மன்ஸூர் தைனூரீ அவர்களை நான் கனவில் கண்டேன். ''இறைவன் உங்களுக்கு என்ன செய்தான்?'' என்று கேட்டேன்.

மன்ஸூர் பதிலிறுத்தார்கள்: ''இறைவன் என் குற்றங்களை மன்னித்தான்; என்மீது அன்பு செலுத்தினான்; நான் எண்ணியும் பார்த்திராதவற்றை எனக்குக் கொடுத்தான்.''

''மனிதன் இறைவனிடம் செல்லும்போது தன்னுடன் எடுத்துச் செல்வதற்குச் சிறந்தது எது?'' என்று வினவினேன்.

''உண்மை!'' என்று விடை வந்தது: ''இறைவனிடம் எடுத்துச் செல்வதற்குக் கேவலமானது பொய்.''

அபூசுலைமான் கூறினார்: ''உண்மையை உன் வாகனமாகவும் நேர்மையை உன் வாளாகவும் ஆக்கிக் கொள்! உன்னுடைய முதற்குறிக்கோள் இறைவனாக இருக்கட்டும்.''

''உண்மையை நான் கண்டதேயில்லை!'' என்றான் ஒருவன்.

அறிஞர் ஒருவர் அதற்கு விடையளித்தார்: ''நீ உண்மை பேசுபவனாக இருந்தால் உண்மையாளர்களை உன்னால் பார்க்க முடியும்.''

முஹம்மத் பின் அலீ கூறினார்: ''நேர்மை, உண்மை, நீதி ஆகிய மூன்று தூண்களின் மீதுதான் இறை மார்க்கம் நிறுவப்



படுகிறது.''-நேர்மை என்பது செயலைப் பொறுத்தது. நீதி என்பது உள்ளத்தைப் பொறுத்தது.

''இறைவனின் விஷயத்தில் பொய்யுரைத்தவர்களை மறுமை நாளில் நீர் கரிய முகங்களோடு பார்ப்பீர்!'' என்ற இறை கருத்துக்கு ஸௌரீ இவ்வாறு வியாக்கியானம் செய்தார்: ''தங்கள் மனத்தில் இறையன்பு இடம் பெற்றிருக்கிறது என்று பொய்யுரைத்தவர் களையே இறைவன் இந்த இடத்தில் குறிப்பிடுகிறான்.''

தாவூத் (அலை) 'அவர்களுக்கு இறைவன் செய்தி யனுப்பினான்: ''தாவூத் ஒருவன் மர்மமாகவே-மனத்திற்குள்ளேயே என்னை உண்மையாக்கினால், அவனை நான் பகிரங்கமாகப் பலர் முன்னிலையில் உண்மையாக்குவேன்.''

ஒரு சமயம் ஷிப்லீ உபதேசம் செய்துகொண்டிருந்தார். திடீரென்று கூட்டத்தினிடையே ஒருவர் வீரிட்டலறினார். ஓடிச் சென்று 'தஜ்லா' டைகரிஸ் நதியில் விழுந்துவிட்டார். ''அவர் உண்மையாளராக இருந்தால் இறைவன் அவரைக் காப்பாற்றுவான்-மூஸா (அலை) நபியைக் காப்பாற்றியதுபோல, அவர் வேடதாரியாக இருந்தால் இறைவன் அவரை மூழ்கடித்துவிடுவான்-பிர் அவனை மூழ்கடித்ததுபோல'' என்று ஷிப்லீ கூறினார்.

''மனிதன் இச்சையையும் விபரீத நோக்கத்தையும் விட்டுத் தனித்திருக்க வேண்டும். இறைவனுக்காக உண்மையோடு செயலாற்ற வேண்டும். 'ஹலாலா'ன, நல்ல உணவை உட்கொள்ள வேண்டும். இவை மூன்றும் முக்கியமான குணங்கள். இவை அனைத்தும் ஒருவனிடம் காணப்பட்டால் அவன் முக்தி யடைந்துவிடுவான். அவற்றுள் ஒன்று காணப்பட்டால் இஸ்லாத்தில் ஒரு பகுதியை அவன் பெற்றவனாகிறான். இதில் அறிஞர்களுக்கும் சட்ட நிபுணர்களுக்கும் அபிப்பிராய வேற்றுமை கிடையாது'' என்று சிலர் கூறுகின்றனர்.

வஹப்பின் முன்ப்பிஹ் விளக்குகிறார்: 'தௌராத்' என்ற தெய்வ நூலின் ஓரத்தில் அடியிற்கண்ட இருபத்திரண்டு வாக்கியங்கள் பொறிக்கப்பட்டிருந்ததை நான் பார்த்தேன். இஸ்ரவேலர்களில் நல்லவர்கள் எல்லாரும் ஒன்று கூடி அவற்றை ஓதுகிறார்கள், மற்றவர்களுக்கும் கற்றுக் கொடுக்கிறார்கள்.

''அறிவைவிட அதிகப் பயனுள்ள புதையல் கிடையாது. சகிப்புத்தன்மையைவிட இலாபமான செல்வம் கிடையாது. சினத்தைவிடக் கேவலமான வமிசம் கிடையாது. நற்செயலைவிட அழகான நண்பன் கிடையாது. மடமையைவிடக் கேவலமான கெட்ட நண்பன் கிடையாது. இறையச்சத்தைவிட மேலான சிறப்பம்சம் கிடையாது. இச்சை மறப்பதைவிட மேலான பெருந்தன்மை கிடையாது. சிந்தனையைவிடச்சிறந்த செயல் கிடையாது. பொறுமையைவிட உயர்ந்த நற்காரியம் கிடையாது. பெருமையைவிடக் கேவலமான தீய காரியம் கிடையாது. அன்பைவிடச் சிறந்த மருந்து கிடையாது. வெறுப்பைவிடத் துன்பமான வியாதிகிடையாது நேர்மையைவிட உண்மையான தூதன் கிடையாது. உண்மையைவிடச் சிறந்த ஆதாரம் கிடையாது. பேராசையைவிடக் கொடிய வறுமை கிடையாது. சேர்த்து வைப்பதைவிடக் கேடுகெட்ட குணம் கிடையாது. ஆரோக்கியத் தைவிட மேலான வாழ்வு கிடையாது. பிசகாத நடையைவிடச் சீரானவாழ்க்கை கிடையாது. திருப்தி யடைவதைவிட மேலான துறவறம் கிடையாது. மௌனத்தைவிடச் சிறந்த பாதுகாப்பாளன் கிடையாது. மரணத்தைவிட நெருங்கிய மறைபொருள் கிடையாது. மன ஈடுபாட்டைவிட மேலான வணக்கம் கிடையாது.''

முஹம்மத் பின் சயீத் கூறினார்: ''உண்மையான நடவடிக்கைகளின் மூலம் இறைவனை நீ தேடினால், அவன் உன் கையில் ஒரு கண்ணாடியைக் கொடுப்பான். அதன் உதவியால் இம்மை மறுமை ஆகியவற்றின் மருமங்கள் அனைத்தையும் நீ அறிந்து கொள்ளலாம்.''



அபூபக்ர் வர்ராக் கூறினார்: ''இறைவனுக்கும் உனக்கும் இடையிலுள்ள விவகாரங்களில் உண்மையோடு நடந்து கொள்! உனக்கும் மக்களுக்கும் இடையிலுள்ள விவகாரங்களில் அன்போடு நடந்துகொள்!''

''தன் காரியங்களை முறைப்படி செய்து முடிப்பதற்குத் தேவையான வசதி மனிதனுக்கு உண்டா?'' என்று வினவப்பட்ட போது துன்னூன் என்ற பெருந்தகை இப்படிப் பாடினார்:

''தின்மையால் கலங்குகிறோம்

உண்மைதனைத் தேடுகிறோம்;வழி காணோம்

இச்சையைக் கூறுவது எளிதாகும்

இச்சையை மாற்றுவது அரிதாகும்.''

சஹல் வினவப்பட்டார், ''நாம் மேற்கொண்டிருக்கும் காரியத்திற்கு அடிப்படை என்ன?'' என்று.

சஹல் விடை கொடுத்தார். ''உண்மை, தயாளம், வீரம்.''

''இன்னும் விரிவாகச் சொல்லுங்கள்!'' என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

''இறைவனைப் பற்றிய அச்சம். தீய காரியத்தில் பிரவேசிக்கும்போது மனத்தில் தோன்றும் இயற்கையான வெட்கம், 'ஹலாலான உணவு-இவைதாம் நாம் மேற்கொண்டிருக்கும் மார்க்கத்திற்கு அடிப்படையானவை'' என்றார் சஹல்.

''பூரணத் தன்மை எது?'' என்று அண்ணலவர்கள் வினவப்பட்டபோது இவ்வாறு விடையளித்துள்ளார்கள்: ''உண்மையான பேச்சு, நேர்மையான செயல்.''

''உண்மையாளர்கள் தங்கள் உண்மை குறித்து வினவப்படுவதற்காக.....''என்கிற இறை கருத்துக்கு ஜுனைத் இப்படி

வியாக்கியானம் செய்தார். ''வெளி விஷயங்கள் குறித்துக் கவலையில்லை. தங்களைப் பொறுத்தமட்டில் உண்மை யாளர்களாக இருப்பவர்கள் தங்கள் உண்மை நிலை சம்பந்தமாக இறை சபையில் வினவப்படுவார்கள்.''

இது அபாயகரமான காரியம்.

# 12. உண்மையின் படித்தரங்கள்

'உண்மை' என்கிற வார்த்தை ஆறு விதங்களில் உபயோகிக்கப்படுகிறது. அவற்றை முறையே ஆராய்வோம். அந்த ஆறு விதங்களில் ஒரு மனிதன் தேர்ந்துவிட்டால் அவனை 'ஸித்தீக்' (பேருண்மையாளன்) எனலாம். ஸித்தீக் என்கிற சொல் 'ஸிதிக்' என்கிற மூலத்திலிருந்து உருவானது. 'ஸித்க்' என்பதற்கு 'உண்மை' என்றுபொருள். ஸித்தீக் என்ற சிறப்பம்சத்திற்குப் பல்வேறு படித்தரங்கள் இருக்கின்றன. மேற்குறிப்பிட்ட ஆறு விதங்களில் ஒன்றில் மட்டும் ஒருவன் தேர்ச்சியடைந்துவிட்டால் அவனை 'உண்மையாளன்' என்று சொல்லலாம். ஏதேனும் ஒரு விஷயத்தில் அவன் உண்மையுள்ளவனாய் இருக்கிறானல்லவா?

மேற்குறிப்பிட்ட ஆறு விதப் படித்தரங்களையும் இப்போது முறையே ஆராய்வோம்.

1. நாவுண்மை: நிகழ்ந்துபோன சம்பவம் குறித்தோ நிகழப்போகும் சம்பவம் குறித்தோ ஒருவன் பேசும்போது இத்தகைய

உண்மை உருவாகிறது. வாக்குறுதியளிப்பதும் அதை நிறைவேற்றுவதும் இந்தப் பிரிவில் இடம் பெறுகின்றன. வாக்குறுதி என்பது நிகழப்போகும் சம்பவமல்லவா? அதனை நிறைவேற்றுவது வாக்குக் கொடுத்தவனுக்கு அவசியம். வாக்குறுதியை நிறைவேற்றாத இடத்தில் அந்த வாக்குறுதி பொய்யாக மாறுகிறது. ஆகவே, மானிடன் தன் வார்த்தைகளை அளந்து பேச வேண்டும். உண்மையைத் தவிர்த்து வேறு எதையும் அவன் உபயோகிக்கக் கூடாது. செயல்படுத்த முடியாத எந்தக் காரியத்துக்கும் வாக்குறுதி அளித்துவிடாதே!

உண்மையின் படித்தரங்களிலேயே இது பிரபலமானதாகும். ஒரு மனிதன் உள்ளதை உள்ளபடி கூறும்போது அவன் உண்மையாளனாகிறான். இந்த நிலையை அடைவதற்கு முன்னர் அவன் இரண்டு விபரீதங்களைத் தவிர்க்க வேண்டும்.

முதல் விபரீதம்: தந்திரமாகப் பேசி எதிரியின் மனத்தில் உண்மைக்கு முரணான நம்பிக்கையை உண்டாக்குவது சரியல்ல. இதைத் தவிர்க்க வேண்டும். பகிரங்கமாகப் பொய்யுரைக்க அஞ்சுபவர்கள் இந்த முறையைக் கையாள்கிறார்கள். இதற்கும் பகிரங்கமான பொய்யுரைக்கும் இடையே வேற்றுமை கிடையாது. அவை இரண்டும் ஒரே இடத்தில் நிற்கின்றன. ஏனென்றால், ஒரு மனிதன் பேச்சு, எதிரியின் மனத்தில் உண்மைக்கு முரணான நம்பிக்கையை உண்டாக்கினால் அந்தப் பேச்சை நாம் 'பொய்' என்று சொல்கிறோம். மேற்குறிப்பிட்ட தந்திரப் பேச்சினாலும் இந்த விபரீதம் ஏற்படத்தான் செய்கிறது. எனவே, இதுவும் பொய்தான்.

ஆனால், சில சந்தர்ப்பங்களில் இதுபோன்ற தந்திரப் பேச்சுக்கு மார்க்கத்தில் அனுமதியுண்டு. சிறுவர்-சிறுமியர், பெண்கள் முதலியோரைத் திருத்தும் பொருட்டு இந்த முறையைக் கையாள்வது குற்றமல்ல. விபரீதத்தைத் தவிர்ப்பது, விரோதியின் வாளுக்குத் தப்புவது. ஆளும் அரசின் மருமங்களைப் பாதுகாப்பது-இத்தகைய நோக்கங்களுக்காகப் பொய்யுரைக் கலாம். என்றாலும், இறைவனை மனத்தில் கொண்டே நிலைமையைச் சமாளிக்க வேண்டும். மார்க்கத்திற்காகவும் இறைவனின் கட்டளைக்காகவும் அவன் பேச வேண்டும். இப்படிச் செயலாற்றுபவனை உண்மையாளன் என்று சொல்வதில் தவறில்லை. அவன் பேச்சு, எதிரியின் மனத்தில் உண்மைக்கு மாற்றமான நம்பிக்கையை ஏற்படுத்தினாலும் அதில் தவறில்லை. ஆகவே, அவனை உண்மையாளன் என்று சொல்வதில் குற்றமில்லை. ஏனென்றால், உண்மையை உண்மைக்காக யாரும் பேசுவதில்லை. உண்மையினால் நற்பயன்கள் விளைகின்றன என்பதாலேயே அதனை எல்லோரும் வரவேற்கிறார்கள். உண்மை பேசுவதால் நற்பயன் ஏற்பட முடியாத இடத்தில் பொய்யுரைப்பது நியாயம்தான். எனவே, இதுபோன்ற சந்தர்ப்பங்களில் உண்மையின் வெளித்தோற்றத்தைப் பார்க்கக் கூடாது. அதனால் ஏற்படும் விளைவைத்தான் பார்க்க வேண்டும்.



இத்தகைய இக்கட்டான நிலைமைகளில் எல்லாம் திரு நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கையை ஆதாரமாகக் கொண்டுதான் நாம் செயலாற்ற வேண்டும். அவர்கள் பிரயாணப்படும்போது அந்தச் செய்தியை யாருக்கும் தெரியாமல் மறைத்துவிடுவார்கள். விரோதிகள் அறிந்தால் விபரீதம் ஏற்பட முடியுமல்லவா? எனவே, இது பொய்யல்ல. இந்தக் கட்டத்தில் உண்மை மறைக்கப்பட்டாலும் அதற்கு அந்தப் பெயர் பொருந்தாது.

''எதையாவது கூறி இருவருக்கிடையில் ஒற்றுமையை உருவாக்கியவன் பொய்யனல்லன்'' என்று அண்ணலவர்கள் கூறினார்கள். ''ஏனெனில், இதன் மூலம் அவன் ஒரு நற்காரியத்தைத் துளிர்விடச் செய்துவிட்டான்.''

பிரிந்துபோன இருவரை ஒன்று படுத்த முனைபவர்கள், இரண்டு மனைவிகளுடன் ஒற்றுமையோடு குடும்பம் நடத்த

முற்படுபவர்கள், போரில் தலையிட்டு வெற்றி காண முந்துபவர்கள்-இவர்கள் அவசியத்திற்காகத் தந்திரப் பேச்சினால் உண்மையை மறைக்கலாம். இதில் குற்றமில்லை. ஆனால், நல்லெண்ணத்தை மனத்தில் கொண்டே அவர்கள் இப்படிச் செய்யவேண்டும். அவர்கள் நேர்மையான நோக்கம் கொள்ள வேண்டும். நோக்கம் உண்மையாகிவிட்டால் எண்ணம் உண்மையாகிவிடும். எண்ணம் உண்மையாகும்போது அந்த மனிதனை உண்மையாளன் என்றும் பேருண்மையாளன் என்றும் தாராளமாகக் கூறலாம். அவன் பேசும் வார்த்தைகளைப் பற்றிக் கவலைப்பட வேண்டுவதில்லை. என்றாலும், இயன்ற அளவுக்கு இதனைத் தவிர்ப்பது சிறந்ததாகும்.

முற்கால அறிஞர் ஒருவர் வெகு சாமர்த்தியமாக நடந்து கொண்டார். அவரைத் தேடிக்கொண்டு விரோதியர் சிலர் வீட்டு வாசலில் வந்து நின்றனர். அப்போது அந்த அறிஞர் வீட்டிற்குள் இருந்தார்.

''நான் இருப்பதை அவர்களிடம் சொல்லிவிடாதே!'' என்றார் மனைவியிடம். ''உன் கால் விரலால் தரையில்ஒரு வட்டம் வரைந்து கொள்! அதன் மத்தியில் விரலை வைத்துக் கொண்டு 'அவர் இங்கு இல்லையே' என்று சொல்லிவிடு!''

விரோதிகளால் ஏற்படும் விபரீதத்தையும் பொய்யுரைப்பதால் ஏற்படும் குற்றத்தையும் ஏக காலத்தில் தவிர்ப்பதற்காக அந்த அறிஞர் இவ்வாறு செய்தார். அவர் தம் மனைவியிடம் கூறிய வார்த்தைகளில் பொய் கிடையாது. அந்த வட்டத்திற்குள் அவர் இல்லை என்பதில் சந்தேகம் என்ன? அதே சமயத்தில் தேடி வந்திருக்கும் விரோதிகளின் மனத்தில் தாம் வீட்டிற்குள் இல்லை என்ற உணர்வையும் அவர் ஏற்படுத்தி விட்டார். எனவே, அவசியம் நேர்ந்தாலொழிய இதுபோன்ற தந்திரப் பேச்சுக்களைப் பேசக் கூடாது. உண்மை பேசுபவர்கள், பகிரங்கமான பொய்யைத் தவிர்ப்பதுபோல் இத்தகைய பேச்சையும் தவிர்க்க வேண்டும்.



அவசியத்தையொட்டி இந்த முறையைக் கையாள்வதில் தவறில்லை.

இரண்டாம் விபரீதம்: மனிதன் இறைவனுக்கு எதிரில் நிற்கும்போது தன் வார்த்தைகளை உண்மையோடு வெளியிட வேண்டும். இதைத் தவறவிடும்போது விபரீதம் உருவாகிறது.

''விண்ணையும் மண்ணையும் படைத்த இறைவனை நான் முன்னோக்கி நிற்கிறேன்'' என்று அவன் கூறுகிறான். இறை வணக்கத்தின் ஆரம்பத்தில் இவ்வாறு கூறப்படுகிறது. இந்த விஷயத்தில் அவன் உண்மையுள்ளவனாக இருக்க வேண்டும். உலக இன்பங்களில் மனத்தை அலைய விட்டிருப்பவன் இப்படிக் கூறும்போது அவன் பொய்யனாகிறான்.

''இறைவனே! நான் உன் அடிமை-உன்னையே நாங்கள் வணங்குகிறோம்'' என்று அவன் சொல்கிறான். இவ்வாறு சொல்பவன் உண்மையிலேயே அந்த எழுச்சியால் உந்தப்பட்டிருக்க வேண்டும். தான் இறைவனுக்கு அடிமை என்ற எண்ணம் அவன் மனத்தில் ஏற்பட்டிருக்க வேண்டும். வெவ்வேறு நோக்கங்களுக்காக இவ்வாறு கூறுபவன் உண்மையாளனல்லன். மன உணர்ச்சிக்கோ உலக இன்பத்திற்கோஅடிமையாக இருப்பவன் இவ்வாறு கூறுவதில் அர்த்தமில்லை. மனிதன் எதற்குக் கட்டுப்படுகிறானோ அதற்கு அவன் அடிமையாகிவிடுகிறான். இந்தத் தத்துவத்தின் அடிப்படையில்தான் ஈஸா (அலை) அவர்கள், ''உலகின் அடிமைகளே'' என்று மக்களை அழைத்தார்கள். ஏனென்றால், அந்த மக்கள் உலக இன்பத்துக்குக் கட்டுப்பட்டிருந்தார்கள்.

''பணத்தின் அடிமை மோசம் போய்விட்டான்'' என்று பெருமானார் அவர்கள் கூறினார்கள். ''நகையின் அடிமை. ஆடையின் அடிமை ஆகியவர்கள் குப்புறவிழுந்து விட்டார்கள்.'' ஆகவே,மனிதன் எந்தப்பொருளுக்கு ஆசைப்படுகிறானோ எந்தப்

பொருளுக்குக் கட்டுப்படுகிறானோ அந்தப் பொருளுக்கு அவன் அடிமையாகி விடுகிறான். மனிதன் இறைவன் ஒருவனுக்கே அடிமையாக இருக்க வேண்டும். அவனைத் தவிர்த்து வேறு யாருக்கும், வேறு எதற்கும் அவன் அடிமைப்படக் கூடாது. இதுதான் உண்மையில் சுதந்திரம்

இத்தகைய சுதந்திரத்தை ஒருவன் அடைந்துவிட்டால் அவன் உள்ளம் திருத்தமடைந்துவிடும். இறையெண்ணமும் இறையன்பும் அதில் இடம் பெற ஆரம்பிக்கும். அவனது உள்ளும் புறமும் இறைவழிபாட்டுடன் பிணைக்கப்படும்.

அவனுக்கு இறைவனைத் தவிர்த்து வேறு எந்தக் குறிக்கோளும் இருக்காது. அதன் பிறகு அவன் புதியதொரு படித்தரத்தை அடைவான். அப்போது அவன் முழுச் சுதந்திரம் பெற்றுவிடுவான். எதையும் அவன் எண்ணிப் பார்க்க மாட்டான். இறைவனைப் பற்றிய கம்பீரமான எண்ணம் அவன் மனத்தில் நிரந்தரமாகக் குடிக்கொண்டுவிடும். தன்னைச் சுற்றிலுமுள்ள அனைத்தையும் அவன் மறந்துவிடுவான். ஏன், தன்னையும் அவன் மறந்துவிடுவான், இறைவனுக்காகவே அவன் உயிர் வாழ்வான். இறைவன் அசைத்தால் அவன் அசைவான்; இறைவன் நிறுத்தினால் நின்றுவிடுவான்; துன்பமளித்தால் சகித்துக் கொள்வான். அவனுக்கென்று எந்த விருப்பமும் கிடையாது. எத்தகைய வெறுப்பும் அவன் உள்ளத்தில் இருக்காது. குளிப்பாட்டுபவனுக்கு முன்னால் ஒரு பிரேதம் எந்த நிலையில் இருக்குமோ அந்த நிலையில்தான் அந்த மனிதன் இறைவனுக்கு முன்னால் இருப்பான். அவன் தானாக எதையும் செய்யமாட்டான். இறைவனே அவனைச் செயலில் ஈடுபடுத்துவான்.

இது மிகவும் உயர்ந்த படித்தரம். தன் நாயனுக்காக உயிர் வாழ்பவனே உண்மையான அடிமை. அவன் தனக்காக. தன் இன்பத்திற்காக உயிர் வாழக்கூடாது. இது 'ஸித்தீக்' எனப்படுபவர்களின்



படித்தரம். மற்றவற்றை விட்டுச் சுதந்திரமடைந்து இறைவனிடம் அடிமையாவது உண்மையாளர்களின் படித்தரம் - இவை அனைத்தும் பேச்சுண்மையில் இடம் பெறுகின்றன.

2. இந்தப் பிரிவில் பட்ட உண்மை மனிதனின் எண்ணத்தில் உருவாகிறது. அவன் எண்ணத்தில் உண்மை மிளிரும்போது அவனுக்கு மன ஒருமை ஏற்படுகிறது. அவன் எந்தச் செயலையும் இறைவனுக்காகவே எண்ண வேண்டும். ஒரு செயலில் - அதைப்பற்றிய எண்ணத்தில் வெவ்வேறு நோக்கங்கள் துளிர்க்கும்போது அதன் உண்மை நிலை பறிக்கப்படுகிறது. இந்தக் கட்டத்தில் அந்த மனிதனைத் தயக்கமின்றிப் 'பொய்யன்' என்று கூறலாம். இதற்கு ஆதாரமான நபி கருத்தை இதே நூலில் ஆறாம் அத்தியாயம் - ஒருமித்த மனநிலை - என்ற தலைப்பின் கீழ் விவரித்திருக்கிறேன்.

''நீங்கள் கற்ற கல்வியை எவ்வாறு பயன்படுத்தினீர்கள்?'' என்று மறுமையில் இறைவன் கேட்பான்.

அறிஞர்கள் பதிலளிப்பார்கள், ''இறைவனே! நள்ளிரவிலும் பகல் முழுவதிலும் உன்னை வணங்கினோம்.''

''பொய் சொல்கிறீர்கள்!'' என்று இறைவன் மறுப்பான். வானவர்கள் இறைவனின் தீர்ப்பை ஆமோதிப்பார்கள். ''நீங்கள் சொல்வது பொய். ஏனென்றால், நீங்கள் இறைவனுக்காக வணங்கவில்லை. 'அறிஞர்கள்' என்ற பெயரைச் சம்பாதித்துக் கொள்வதற்கே அப்படிச் செய்தீர்கள். அந்தப் பெயர் உங்களுக்குக் கிடைத்துவிட்டது.''

- இப்படி ஆரம்பத்திலேயே விவரித்துவிட்டேன். அறிஞர்களின் கூற்று உண்மைதான். அவர்கள் அல்லும் பகலும் வணங்கத்தான் செய்தார்கள். என்றாலும், அவர்களின் எண்ணத்தில்

கலப்படம் ஏற்பட்டுவிட்டது. இதனால், அவர்கள் 'பொய்யர்கள்' என்று குறிப்பிடப்படுகிறார்கள்.

''ஏகத்துவக் கொள்கையுடன் நன்னோக்கம் கொள்வதே உண்மை'' என்று அறிஞர் ஒருவர் கூறினார்.

''நயவஞ்சகர்கள் பொய்யர்கள் என்பதற்கு இறைவன் சான்று கூறுகிறான்'' எனத் திருமறை விவரிக்கிறது. நயவஞ்சகர்கள் என்று இங்குக் குறிப்பிடப்படுபவர்கள் வாயளவில் கூறியது உண்மைதான். அண்ணலவர்களைப் பார்த்து, ''நீர் உண்மையான திருத்தூதர்'' என்று அவர்கள் கூறினார்கள். இந்த வார்த்தைகளில் சிறிதளவும் பொய் கிடையாது. என்றாலும், அவர்களின் உள்ளத்தில் அந்த நம்பிக்கை கிடையாது. அண்ணலவர்களை இறைதூதர் என்று அவர்கள் நம்பவில்லை. எனவேதான், அவர்களைத் திருமறை பொய்யர்கள் என்று குறிப்பிடுகிறது. இப்படிக் கூறுபவன்தான் இதை நம்புவதாகவே அவன் எடுத்துரைக்கிறான். ஆகவே, அவன் பொய்யனாகிறான்.

கலப்படமில்லாத ஒருமித்த மனத்திற்கும் உண்மை என்று பெயரிடலாம். ஏனென்றால், ஒருவன் உண்மையாளனாக இருந்தால் அவன் அவசியம் மன ஒருமை கொண்டவனாகவே இருக்க வேண்டும்.

3. அடுத்தபடியாக மனிதனின் தீர்மானத்தில் உண்மை உருப் பெறுகிறது. ஒரு மனிதன் ஒரு காரியத்தைச் செய்யத் தீர்மானிக்கிறான். ''இறைவன் எனக்குச் செல்வத்தைக் கொடுத்தால் அதில் ஒருபகுதியைத் தருமம் செய்துவிடுவேன்'' என்று சொல்லிக் கொள்கிறான். ''இறை வழியில் விரோதியைக் கண்டால் போரிடுவேன். என் உயிர் போவதையும் நான் பொருட்படுத்த மாட்டேன்'' என்று எண்ணுகிறான். ''இறைவனிடம் எனக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டால் நியாயத்தோடு நடப்பேன். அவனுக்கு மாற்றம் செய்யமாட்டேன். முகஸ்துதிக்கு இடமளிக்க மாட்டேன்'' என்று தீர்மானிக்கிறான்.



இவை அனைத்தும் தீர்மானங்களே. தீர்மானங்களுள் சில மனத்தின் அடித்தளத்திலிருந்து உறுதியோடு வெளிப்படுகின்றன. இத்தகைய தீர்மானங்களை உண்மையான தீர்மானங்கள் என்று குறிப்பிடலாம். வேறு சில தீர்மானங்கள் சந்தேகத்திற்கும் பலவீனத்திற்கும் இலக்காகின்றன. இத்தகையவை உண்மையான தீர்மானங்களுக்கு நேர் எதிரானவை. ஆகவே, ஒரு தீர்மானம் உறுதியோடும் பூரணத் தன்மையோடும் உருவாகும்போதுதான் அதற்கு 'உண்மை' என்கிற பெருமை கிடைக்கிறது. ஒரு மனிதனைச் சுட்டிக் காட்டி, ''அவன் உண்மையான ஆவல் உள்ளவன்'' என்று கூறுகிறோம். அப்போதுதான் அப்படிச் சொல்ல முடியும். மற்றொருவனைச் சுட்டிக் காட்டி ''அவன் போலியான ஆர்வம் கொண்டவன்'' என்கிறோம். அவனது ஆர்வம் பலவீனமாக இருக்கும்போது இவ்வாறு கூறலாம்.

நற்காரியங்களைச் செய்து முடிக்கத் தீர்மானிப்பவர்களே உண்மையாளர்கள்; பேருண்மையாளர்கள் (ஸித்தீக்குகள்). மனிதனின் மனத்தில் உறுதியான தீர்மானம் உருப்பெற்றால் அதில் சந்தேகத்திற்கோ குழப்பத்திற்கோ இடமிருக்காது. நற்காரியத்தைச் செய்து முடிக்க அந்த மனம் துடிக்கும்.

உமர் (ரலி) கூறினார்கள்: ''அபூபக்ருடன் கூடிய ஒரு சமூகத்துக்கு நான் தலைமை தாங்கிச் செயலாற்றுவதைவிட என் உயிரை மாய்த்துக்கொள்வதே மேல் என்று கருதுகிறேன்.'' தலைமை தாங்குவதற்குத் தம்மைவிட அபூபக்கர் (ரலி) அவர்களே தகுதியானவர்கள் என்பது உமர் (ரலி) அவர்களின் கருத்து. உமர் (ரலி) அவர்களின் மனத்தில் இந்தத் தீர்மானம் ஏற்பட்டுவிட்டது. இதனால், அவர்கள், அபூபக்ருக்காகத் தம் உயிரையும் அர்ப்பணிக்கத் துணிந்தார்கள். இதில் பல படித்தரங்கள்

இருக்கின்றன. சிலர் இவ்வாறு தீர்மானிக்கின்றனர். உயிர்த்தியாகம் செய்யும் அளவுக்கு அவர்கள் போய்விடுவதில்லை. அபூபக்ரைவிடத் தங்களை மேலானவர்கள் என்று கருதுபவர்களும் உண்மையாளர்களுக்கு மத்தியில் இருக்கதான் செய்கிறார்கள்.

4. அடுத்துத் தீர்மானத்தைச் செயல்படுத்தும்போது உண்மை உருவாகிறது. உள்ளம் விந்தையானது. அது ஒரு தீர்மானத்தை எளிதில் உண்டாக்கிவிடும். இதில் அதற்கு எத்தகைய சிரமமும் கிடையாது. ஆனால், செயலாற்ற வேண்டிய நேரம் வரும்போது அந்தத் தீர்மானம் தளர ஆரம்பித்துவிடும். இதனால், அந்தத் தீர்மானம் செயலாற்றப்படாமல் வீணாக வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இப்படித் தீர்மானம் குலையும் கட்டத்தில்தான் பொய் உருவாகிறது. இது உண்மை நிலைக்கு முற்றிலும் மாற்றமானது.

''தாம் இறைவனுக்கு அளித்த வாக்குறுதியை அவர்கள் உண்மையாக்கினார்கள்'' என்று திருமறை கூறுகிறது.

அனஸ் பின் நள்ர் என்பவர் அண்ணலவர்களுடன் பத்ர் யுத்தத்தில் கலந்துகொள்ளத் தவறிவிட்டார். இது குறித்து அவர் மனம் வேதனைப்பட்டது. ''திருத்தூதர் அவர்கள் பங்கெடுத்த முதல் தியாக நிகழ்ச்சி. அதில் நான் பங்கெடுத்துக் கொள்ளத் தவறிவிட்டேன்'' என்று வருத்தத்துடன் கூறினார். ''இறைவன்மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். மீண்டும் ஒரு தடவை இதுபோன்றதொரு நிகழ்ச்சி குறுக்கிட்டால் நான் அதில் பங்கெடுத்துக்கொள்ளத் தவறமாட்டேன். அப்போது நான் எப்படிச் செயலாற்றுகிறேன் என்பதை இறைவன் பகிரங்கமாகப் பார்க்கட்டும்.''

அடுத்த ஆண்டு உஹுத் யுத்தம் குறுக்கிட்டது. ''அபூ உமர்! எங்குப் போகிறீர்?'' என்று சஅத் பின் மஆத் கேட்டார் - அனஸ் பின் நள்ரை அபூ உமர் என்றும் அழைப்பதுண்டு.

அனஸ் கூறினார், ''சுவனத்தின் காற்றை அனுபவிக்க'' என்று. ''உஹுத் போர் முனையில்தான் அந்தக் காற்று வீசுகிறது என்று கருதுகிறேன்.''



பின்னர் அனஸ் உஹுத் யுத்தத்தில் போரிட்டு உயிர் துறந்தார். அப்போது அவர் உடலில் எண்பதுக்கு மேற்பட்ட காயங்கள் இருந்தனவாம். ''உருவமே தெரியாதபடி அவர் சிதைந்து போய்விட்டார். அவரது உடையைக் கொண்டுதான் அவரை நான் கண்டுபிடித்தேன்'' என்று அவரது சகோதரிபின்து நள்ர் கூறினார்.

இந்தக் கட்டத்தில்தான், ''தாம் இறைவனுக்கு அளித்த வாக்குறுதியை அவர்கள் உண்மையாக்கினார்கள்'' என்ற இறைவசனம் அருளப்பட்டது.

உஹுத் யுத்தத்திலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்த திருத்தூதர் அவர்கள் திகைத்து நின்றார்கள். முஸ்அப் பின் உமைர் குப்புற விழுந்து கிடந்தார். அவர் உடலில் உயிரோட்டம் காணப்பட வில்லை. யுத்தத்தின்போது அவர் இஸ்லாத்தின் பிறைக் கொடியைத் தாங்கி வந்தார்.

''இறைவனுக்கு அளித்த வாக்குறுதியை நிறை வேற்றியவர்கள்'' என்று அண்ணலவர்கள் கூறிக் கொண்டார்கள். ''இன்னும் சிலர் அதற்குரிய சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.''

உமர் (ரலி) அவர்கள் இவ்வாறு விளக்கினார்கள்: ''திருத்தூதர் அவர்கள், 'தியாகிகள் எனப்படுபவர்களை நான்கு வகையினராகப் பிரிக்கலாம்' என்று கூறினார்கள். 'முதல் பிரிவினர்: இவர்கள் உறுதியான மத நம்பிக்கையுள்ளவர்கள். இவர்கள் எதிரியுடன் போரிட்டு உயிர் துறக்கிறார்கள். இவர்களைப் பார்ப்பதற்காக மறுமையில் மக்கள் தங்கள் பார்வையை இப்படி உயர்த்துவார்கள்' - தம் துணித் தொப்பி தரையில் விழும் அளவுக்கு அவர்கள் தலையை மேல் பக்கமாகச் சாய்த்துப் பார்வையை உயர்த்துவார்கள். 'மற்றொருவன் உறுதியான நம்பிக்கையோடு எதிரியை அணுகுகிறான். எங்கிருந்தோ பறந்து வந்த அம்பு ஒன்று அவன் உயிரைக் குடிக்கிறது. இவன் இரண்டாவது படித்தரத்தில்

இருக்கிறான். பிறிதொருவன் நல்லெண்ணத்தோடு தீய எண்ணத்தையும் மனத்தில் வைத்துக்கொண்டு போர் முனைக்குச் செல்கிறான். எதிரியுடன் போரிட்டு உயிர் துறக்கிறான். இவனுக்கு உரித்தானது மூன்றாம் படித்தரம். வேறொருவன் தீய குறிக்கோளுடன் யுத்தத்திற்குச் செல்கிறான். உயிர்த் தியாகம் செய்கிறான். இவனக்குரியது நான்காம் படித்தரம்.'

முஜாஹித் கூறினார்: ''இரண்டு நண்பர்கள் இருந்தார்கள். 'இறைவன் நமக்குச் செல்வத்தை அளித்தால் நாம் அவசியம் தருமம் செய்வோம்' என்று தீர்மானம் செய்து கொண்டார்கள். மானசீகமாக இறைவனுக்கு வாக்குறுதியளித்தார்கள். ஆனால், இறைவன் அவர்களுக்குச் செல்வத்தை அளித்தபோது அவர்கள் வாக்குறுதியை நிறைவேற்றத் தவறிவிட்டார்கள். இந்தக் கட்டத்தில்தான் '... எங்களுக்கு இறைவன் செல்வத்தைக் கொடுத்தால் தருமம் செய்து நல்லவர்களாகிவிடுவோம்' என்று வாக்குக் கொடுத்த சிலர் இருக்கின்றனர் என்ற இறை வசனம் அருளப்பட்டது. தீர்மானத்தை வாக்குறுதி என்றும் கூறலாம்.''

எனவே, வாக்குறுதி நிறைவேற்றும்போது உண்மை உருவாகிறது. வாக்குறுதி மீறப்படும்போது பொய் உருப்பெறுகிறது.

இந்த வகையில் பட்ட உண்மை மூன்றாவது வகையில் பட்ட உண்மையைவிடக் கடினமானது. ஏனெனில், மனிதனின் உள்ளம் எதையும் எளிதில் தீர்மானித்துவிடும். அதைச் செயல்படுத்தும் போதுதான் சிரமம் உண்டாகிறது. இதனால்தான் உமர் (ரலி) அவர்கள், ''அபூபக்ருடன் கூடிய ஒரு சமூகத்துக்குத் தலைமை தாங்கிச் செயலாற்றுவதைவிட உயிர் துறப்பதே மேல் என்று நான் கருதுகிறேன்'' என்று கூறினார்கள். உருவாகிய தீர்மானத்தை நிறைவேற்றுவது எவ்வளவு சிரமம் என்பதை உமர் (ரலி) அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். உயிர்த்தியாகம் என்பது சிரமமான காரியம். அதில் ஏதேனும் ஒரு நற்பயன் உண்டு என்று



தெரிந்தாலொழிய மனம் அதற்கு இடம் கொடுக்காது. அப்படி ஒரு நற்பயன் தோன்றுவது - மனத்துக்குப் பிடித்த நற்பயன் தோன்றுவது எளிதான காரியம் என்று நான் நம்பவில்லை.

அபூ சயீத் கூறினார்: ''ஒரு நாள் கனவில் இரண்டு வானவர்கள் தோன்றினார்கள் விண்ணிலிருந்து அவர்கள் இறங்கினார்கள், 'உண்மை என்றால் என்ன?' என்று கேட்டார்கள்:

''வாக்குறுதியை நிறைவேற்றுவது'' என்று நான் விடையளித்தேன். 'உண்மையுரைத்தீர்' என்று வானவர்கள் கூறினார்கள். பின்னர் அவர்கள் விண்ணில் ஏறி மறைந்தார்கள்.

5. அடுத்தபடியாக, செயலில் உண்மை உருவாகிறது. மனிதன் கடின முயற்சியுடன் செயலாற்ற வேண்டும். தன்னிடம் இல்லாத எந்தத் தன்மையையும் அவன் தன் செயலின் மூலம் வெளிக் காட்டக் கூடாது. அவன் மனத்தின் உண்மையான நிலையை அவன் செயல் காட்ட வேண்டும். இது முகஸ்துதியல்ல. ஏனென்றால், முகஸ்துதியுள்ளவன் பகிரங்கமான செயலையே குறிக்கோளாகக் கொள்கிறான். பயபக்திக்கே உரித்தான ரீதியில் எத்தனையோ பேர் இறைவணக்கம் புரிகிறார்கள். தங்களை மக்கள் பார்க்க வேண்டும் என்ற எண்ணமும் அவர்களுக்குக் கிடையாது. ஆனால், அவர்களின் மனத்தில் இறைவணக்கம் பற்றிய பயபக்தி இருப்பதில்லை. இறை வணக்கத்தில் அவர்களின் உடல் நிற்பதை மக்கள் பார்த்திருக்கிறார்கள். ஆனால், அவர்களின் மனம், பலதரப்பட்ட ஆசைகளுக்கிடையே கடைத் தெருவில் நிற்கிறது. அவர்களின் செயல், அவர்களிடம் இல்லாத ஒரு குணத்தை இருப்பதாகக் காட்டுகிறது. இது பொய் என்பதில் சந்தேகமில்லை.

அமைதியும் கம்பீரமும் பொதிந்த ரீதியில் ஒருவன் நடந்து செல்கிறான். அவனிடம் உண்மையில் அந்தக் குணங்கள் இடம் பெற்றிருக்கவில்லை. எனவே, அவன் பொய்யனாகிறான். அவன் மக்களைப் பற்றிக் கவலைப்படவில்லை. என்றாலும், அவன்

செயல் அவனிடம் இல்லாத தன்மைகளை இருப்பதாகக் காட்டுவதால் அவன் பொய்யன் எனக் கருதப்படுகிறான்.

இந்த விபரீதத்திலிருந்து தப்புவதற்கு ஒரு வழியுண்டு. அவன் உள்ளம் எப்படி இருக்கிறதோ அப்படியே அவன் செயலும் இருக்க வேண்டும். இவை இரண்டும் சம நிலையில் அமைய வேண்டும் அல்லது அவன் உள்ளம், அவன் செயலை விட மேலானதாக இருக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட விபரீதத்தைத் தவிர்ப்பதற்காகவே சில அறிஞர் சிலர் தம் செயல்களை மோசமாக அமைத்துக்கொண்டனர் - ஆகவே உண்மையான மனநிலைக்குச் செயல் மாறுபடும்போது, அது ஏதேனும் ஒரு குறிக்கோளுடன் உருவானால், அது முகஸ்துதியாகிறது. எத்தகைய குறிக்கோளும் இல்லாமல் மனத்திற்குச் செயல் மாறுபடும்போது உண்மை பறிக்கப்படுகிறது. ''இறைவனே! என் செயலைவிட என் உள்ளத்தைச் சிறப்புள்ளதாக்கு! என் செயலை நல்வினையாக ஆக்கு!'' என்று திருத்தூதர் அவர்கள் பிராத்தித்தார்கள்.

யஸீத் பின் ஹர்ஸ் கூறினார்: ''ஒரு மனிதனின் செயலும் மனமும் சமநிலையில் இருந்தால் அவன் நடுநிலையில் இருக்கிறான். செயலைவிட எண்ணம் உயர் நிலையில் அமையும்போது அவன் சிறப்படைகிறான். மனத்தை விடச் செயல் உயரும் போது அநீதி உருவாகிறது.''

''எண்ணமும் செயலும் சம நிலையிலேயே இருக்க வேண்டும். ஒருவன் இந்தப் படித்தரத்தை அடைந்தால் அவன் ஈருலகிலும் சிறப்படைவான். அவன் பாராட்டுக்குரியவன். எண்ணமும் செயலும் ஒன்றுக்கொன்று மாறுபட்டால் அவன் முயற்சிக்கு எத்தகைய பெருமையும் கிடையாது. கடைத்தெருவில் நல்ல நாணயம் செல்லுபடியாகிறது. ஆனால், கள்ள நாணயம், செல்லா நாணயம், இதற்குப் பயன்படுவதில்லை.'' இப்படிக் கவிஞர்கள் பாடினர்.



அதிய்யா பின் அப்துல் காதர் கூறினார்: ''எண்ணம் போல் செயலாற்றும் மனிதன் குறித்து இறைவன் பெருமையடிக்கிறான். 'இவன்தான் எனது உண்மையான அடியான்' என்று வானவர்களிடம் கூறுகிறான்''

ஹஸன் பஸ்ரீ அவர்கள் தாங்கள் செய்து வரும் காரியத்தையே மற்றவர்களுக்குப் போதிப்பார்களாம். தாங்கள் வெறுத்து ஒதுக்கியவற்றையே மற்றவர்க்கும் தடுப்பார்களாம். ''ஹஸன் பஸ்ரீ அவர்களைப்போன்று எண்ணமும் செயலும், உள்ளும் புறமும் ஒன்றுபட்ட ஒரு மனிதரை நான் கண்டதில்லை'' என்கிறார் அப்துல் வாஹித் பின் ஸைத்.

''இறைவனே! எனக்கும் மக்களுக்கும் இடையிலுள்ள விவகாரங்களில் நான் ஒழுங்காக நடந்துகொண்டேன். ஆனால், உனக்கும் எனக்கும் இடையிலுள்ள விவகாரங்களில் அவ்வாறு நடக்கத் தவறிவிட்டேன்'' என்று கூறி அழுவாராம் துறவி அபூ அப்துர் ரஹ்மான்.

''உள்ளும் புறமும் ஒன்றுபடுவதுதான் உண்மை'' என்று அபூ யாகூப் கூறினார். எனவே, எண்ணமும் செயலும் ஒரேவிதமாக அமைவது உண்மையின் படித்தரங்களுள் ஒன்று.

6. இது எல்லாப் படித்தரங்களையும்விட உயர்ந்தது, சிறப்புடையது, இறையச்சம், இறையாதரவு, துறவறம், இறைதிருப்தி, இறைநம்பிக்கை, இறையன்பு முதலிய விஷயங்களில் இத்தகைய உண்மை உருவாகிறது. அவற்றிற்கு ஆரம்ப நிலை இருப்பதுபோல கடைசி எல்லையும் இருக்கிறது. இவற்றில் நுட்பமான பல விஷயங்கள் மறைந்திருக்கின்றன. அவற்றை யெல்லாம் உணர்ந்து முறைப்படி செயலாற்றியவனே உண்மையாளன். மேற்குறிப்பிட்ட உயர் தன்மைகளுள் ஏதேனும் ஒன்று ஒரு மனிதனின் உள்ளத்தில் ஓங்கி நிற்பதாக வைத்துக் கொள்வோம். அவன் உள்ளத்தில் அந்தத் தன்மையின் இயற்கைக்

குணம் பிரதிபலித்தால் அவனை உண்மையாளன் என்று கூறலாம்.

''இறைவனையும் திருத்தூதரையும் நம்பிய பின்னர் சந்தேகம் கொள்ளாதவர்களே முஸ்லிம்கள்'' என்கிறது திருமறை ''- அவர்கள் தான் உண்மையாளர்கள்.''

அபூதர் மத நம்பிக்கை ('ஈமான்') குறித்து வினவப்பட்டார்.

''திருக்குர்ஆன், 'இறைவனையும் மறுமை நாளையும் நம்பியவர்கள் - அவர்கள்தாம் உண்மையுள்ளவர்கள்' என்று கூறுகிறது'' எனப் பதிலளித்தார் அபூதர்.

''மத நம்பிக்கையைப் பற்றியே நாங்கள் கேட்டோம்'' என்று மறுமொழி வந்தது.

அபூதர் வியாக்கியானம் செய்தார்: ''ஆம். உண்மைதான். மத நம்பிக்கை குறித்துத் திருநபியவர்களை நான் வினவினேன். அதற்குப் பதிலாக அவர்கள் இந்தத் திருவசனத்தைத் தான் ஓதிக் காட்டினார்கள்.''

மேலே கூறிய சிறப்பம்சங்களில் இறையச்சமும் இடம் பெற்றிருக்கிறது. ஓர் உதாரணத்தின் மூலம் இதைப் பார்ப்போம். இறைவனுக்கு அஞ்சுபவர்களே இறைவனையும் மறுமையையும் நம்புகிறார்கள். ஆனால், இந்த இறையச்சம் பூரணத்துவம் பெற்றதல்ல. ஒரு மனிதன் அரசனுக்கோ, பிராயணத்தின்போது கொள்ளைக்காரனுக்கோ அஞ்சுகிறான் என்று வைத்துக் கொள்வோம். இதனால், அவன் உடலிலும் செயலிலும் ஏற்படும் விபரீதங்கள் எத்தனை! அவன் முகம் வெளிறிப்போகிறது: அவன் உடல் நடுங்குகிறது. அவனால் நிம்மதியோடு இருக்க முடிவதில்லை. அவனால் உண்ண இயலுவதில்லை. அவன் உள்ளத்தில் கவலையும் பீதியும் தலைவிரித்தாடுகின்றன. சில சமயங்களில் அவன் ஊரைவிட்டே ஓடி விடுகிறான். - இப்படி



எத்தனையோ விபரீதங்கள் ஏற்படுகின்றன. இவை அனைத்தும் அச்சத்தால்தான் உருப்பெறுகின்றன.

மற்றொருவன் நரகத்திற்கு அஞ்சுகிறான் என்று வைத்துக் கொள்வோம். ஆனால், அவன் விஷயத்தில் மேற்குறிப்பிட்ட விபரீதம் எதுவும் ஏற்படுவதில்லை. அவன் ஏதேனும் குற்றம் புரிந்துவிட்டால் அவன் மனத்தில் திகில் தோன்றுவதில்லை. அவன் மனத்தில் கவலையோ பீதியோ உண்டாவதில்லை. அவன் நன்றாக உண்டு, நிம்மதியாகத் தூங்குகிறான். இதனால் தான் திருநபியவர்கள், ''நரகத்துக்கு அஞ்சுபவர்களும் சுவனத்துக்கு ஆசைப்படுகிறவர்களும் நன்றாகத் தூங்குகிறார்கள்'' என்று கூறினார்கள்.

ஆகவே, இறையச்சம் சம்பந்தமாகத் தீர்மானிப்பது மிகவும் சிரமம். அது பூரணத்துவம் அடையம்போது தான் அதற்குரிய முழுத் தோற்றம் உருப்பெறுகிறது. என்றாலும் ஒவ்வொரு மனிதனுக்கும் இறையச்சம் உண்டு. இந்த இறையச்ச உணர்ச்சி, சிலரது உள்ளத்தில் பலவீனமாக இருக்கும். வேறு சிலர், உறுதியான இறையச்சத்தைப் பெற்றிருப்பார்கள். இறையச்சம் உறுதி பெறும்போதுதான் அதற்கு 'உண்மை' என்கிற பெயர் கிடைக்கிறது.

இறையச்சம், இறைஞானம் முதலானவை எல்லையில்லாதவை. அண்ணலவர்கள், ''உமது இயற்கைத் தோற்றத்தைக் காண விரும்புகிறேன்'' என்று வேண்டிக் கொண்டார்கள்.

அதற்கு வானவர் ஜிப்ரயீல், ''சாத்தியமில்லை. என் இயற்கைத் தோற்றத்தை உம்மால் பார்க்க முடியாது'' என்று பதிலளித்தார்.

அண்ணலவர்கள் வற்புறுத்தினார்கள். கடைசியில் ஜிப்ரயீல் இணங்கினார். ஒரு நாள் இரவு நிலவொளியில் தம் இயற்கைத் தோற்றத்தைக் காட்டினார். அண்ணலவர்கள் பார்த்தார்கள். ஜிப்ரயீல் விண்ணை மறைத்துக் கொண்டு பயங்கர உருவத்துடன்

நின்று கொண்டிருந்தார். திருநபியவர்கள் மூர்ச்சித்து விழுந்துவிட்டார்கள்.

பின்னர் ஜிப்ரயீல் உருவத்தை மறைத்துக் கொண்டார். திருநபியவர்கள் மயக்கம் தெளிந்து எழுந்தார்கள். ''ஜிப்ரயீல்! இறைவனின் படைப்புகளில் இப்படி ஒரு படைப்பு உண்டு என்று நான் எண்ணவேயில்லை.'

''இஸ்ராயீலைப் பார்த்தால் எப்படியாகுமோ! அவர் இறையாசனத்தைத் தம் தோள்மீது சுமந்து கொண்டிருக்கிறார்... எப்படியருந்தாலும் இறைவனின் பேராற்றலுக்கு முன்னால் அவர் ஒரு சிறு சிட்டுக் குருவியைப் போன்றவர்தாம்.''

ஜிப்ரயீல் எந்த முடிவுக்கு வந்திருக்கிறார் என்பதைப் பார். வானவர்கள் எல்லோரும் இப்படிதான் இருப்பார்கள் என்று தீர்மானிக்க முடியாது. அவர்களிடையே இறைவனைப் பற்றிய ஞானத்தில் வித்தியாசம் உண்டு - இப்படிதான் இறையாற்றலை எண்ணிப் பார்க்கும் விஷயத்தில் உண்மையைக் கையாள வேண்டும்.

இறைவனை முற்றிலும் அறிந்துவிடுவது சாத்தியமில்லை ''மார்க்க விஷயத்தில் மக்கள் அனைவரும் மூடர்களே என்று ஒருவன் தீர்மானிக்கும்போதுதான் அவன் மத நம்பிக்கை - 'ஈமான்' பூரணத்துவ மடைகிறது'' என்று இப்னு உமர் கூறினார்.

மத்ரப் கூறினார்: ''தனக்கும் இறைவனுக்கும் இடையிலுள்ள விவகாரங்களில் ஒவ்வொரு மனிதனும் முட்டாளாகத்தான் இருக்கிறான். ஆனால், சிலர் சர்வ முட்டாள்கள்; வேறு சிலர் சாதாரண முட்டாள்கள்.''

''உண்மையான மத நம்பிக்கையுள்ளவர்கள் மக்களைப் பற்றிக் கவலைப்படக் கூடாது; அவர்களைப் பொருட்படுத்தக் கூடாது. பின்னர் தன்னைத் தானே அவன் உற்றுப் பார்க்க வேண்டும். தான் மக்களுள் மிகத் தாழ்ந்தவன் என்று அவன் தீர்மானிக்க வேண்டும்'' என்று பெருமானார் அவர்கள் கூறினார்கள்.



மேலே நான் விவரித்த ஆறு படித்தரங்களிலும் தேர்ச்சியடைந்து உண்மையாளர்களாய்த் திகழ்பவர்கள் மிக அபூர்வம். தவிர உண்மையான படித்தரங்கள் கரை காண முடியாதவை. சிலர் ஏதேனும் சில விஷயங்களில் உண்மையாளர்களாக இருக்கலாம். எல்லா விஷயத்திலும் உண்மையோடு நடந்து கொள்ளும் மனிதனை 'ஸித்தீக்' - பேருண்மையாளன் என்று துணிவுடன் கூறலாம்.

உண்மையின் படித்தரங்களைப் போதிய அளவுவிளக்கி விட்டேன். உண்மையின் பொருள் என்ன என்பதையும் விவரித்து விட்டேன். அறிஞர்களின் கருத்து என் விளக்கத்துக்கு முரண்படவில்லை. என்றாலும் அபூபக்ர் வராக் இப்படிக் கூறுகிறார்: ''உண்மை மூன்றே மூன்று வகைதான்: உண்மையான ஏகத்துவக் கொள்கை; உண்மையான வழிபாடு; உண்மையான இறையறிவு. உண்மையான ஏகத்துவக் கொள்கை பொதுவாக எல்லா முஸ்லிம்களுக்கும் உண்டு. 'இறைவனையும் திருத்தூதரையும் நம்புகிறவர்கள்தாம் உண்மை யாளர்கள்' என்று திருக்குர் ஆன் கூறுகிறது. உண்மையான வழிபாடு, அறிஞர்களுக்கும் எச்சரிக்கையோடு செயலாற்றுபவர்களுக்கும் சொந்தமானது. உண்மையான இறையறிவு, இறைவனின் பேரன்பைப் பெற்ற பெருந்தகைகளுக்கு உரித்தானது'' - இதிலுள்ள கருத்து, எனது விளக்கத்தில், உண்மையின் ஆறாம் படித்தரத்தில் இடம் பெற்றிருக்கிறது. அபூபக்ருடைய விளக்கத்தின்படி பார்க்கும்போது சில படித்தரங்கள் விடப்படுகின்றன. அவற்றை அவர் விளக்கத் தவறிவிட்டார்.

ஜாபர் ஸாதிக் கூறினார்: ''கடும் முயற்சியையே உண்மை என்று குறிப்பிடுகிறோம். இறைவனைத் தவிர்த்து வேறு யாரையும் மானிடன் தேர்ந்தெடுக்கக் கூடாது.''

மூஸா (அலை) நபிக்கு இறைவன் இப்படிச் செய்தியனுப்பினான்: ''நான் ஒரு மனிதனை விரும்பினால், மலையால்கூடத் தாங்க முடியாத துன்பத்தை அவன் தலையில் சுமத்துவேன். அவன் உண்மையோடு செயலாற்றுகிறானா என்று பார்ப்பேன். அவன் பொறுமையோடு செயலாற்றினால், என் அன்புக்கு அவனை உரியவனாக்குவேன். என்னை அவன் குறை கூற ஆரம்பித்தால் அவனைக் கேவலப்படுத்தி விடுவேன். அவனைப் பற்றி எனக்கு அக்கறை கிடையாது.''

தனக்கு ஏற்பட்டிருக்கும் இன்னலையும் தான் செய்துவரும் நற்காரியங்களையும் மனிதன் மறைத்து வைக்க வேண்டும். இந்தக் கட்டத்தில் தான் உண்மை உருவாகிறது. மக்களிடம் எதையும் வெளியிடக் கூடாது.

இறைவனே பாராட்டுக்குரியவன்.

❖❖❖